DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

21ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எதிர்க்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1484 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 13, 2024

## ஜனாதிபதித் தேர்தலால் வீதிக்கு வந்த 'வீடு'

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
Ilankai Tamil Arasu Kadchi

"தலைவர் மாவை சேனாதிராஜா ரணிலுக்கு ஆதரவு ,எதிர்காலத் தலைவர் ஸ்ரீதரன் சிவஞானம் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு,தலைவர் போட்டியில் தோல்வியடைந்த சுமந்திரன் சஜித்துக்கு ஆதரவு,துணைத் தலைவர் சிவஞானம் சஜித்துக்கு ஆதரவு.ஆனால் மேடையேற மாட்டார்.மத்தியகுழு உறுப்பினர் அரியநேத்திரன் தமிழ் பொது வேட்பாளர்.இதுதான் இன்றைய தமிழரசுக்கட்சி.இந்தக்கட்சியை தமிழ்மக்கள் நம்பினால் தந்தை செல்வா சொன்னதுபோல் தமிழ் மக்களை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்." ஆனால் தமிழரசுக்குள் தேசியத்துக்கு எதிரானவர்கள் இருக்கும்வரை தமிழரசுக் கட்சியை கடவுளாலும் காப்பாற்ற முடியாது" .இவ்வாறு உள்ளே கே.பாலா தனது விபரமான கட்டுரையில் எழுதுகின்றார்.

தொடர்ச்சி 18 ம் பக்கம்

## முன்னாள் யாழ் அரச அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரனின் (கவிஞர் ஆரணி) கவிதை நூல் வெளியீட்டு விழா சனிக்கிழமை நடைபெறுகின்றது




அண்மையில் பதவியிலிருந்து இளைப்பாறிய யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் யாழ்ப்பாண பல்கலைக் கழகப் பட்டதாரியுமான அம்பலவாணர் சிவபாலசுந்தரன் (கவிஞர் ஆரணி) 'நினைவிடைத்தோய்தல்' என்னும் கவிதைத் தொகுதி வெளியீட்டு நாளை 14ம் திகதி சனிக்கிழமை மார்க்கம் நகரில் நடைபெறவுள்ளது.

இடம்:- **Aaniin Community Centre, 5665 14th Avenue. Markham**
காலம்:- 14-09-2024

சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் அனைத்து நண்பர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர் வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவ மாணவிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்பெறுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு 647 537 9235அல்லது 416 732 1608 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524


LUNAR
MOTION PICTURES
ஆக்குவாய் காப்பாய்
Written & Directed by
MATHIVASAN
Line Producer
MUTHUKUMAR
QUBE
THEEPAN RAJALINGAM - JEEVANRAM JEYAM Music RIJU KRISHNA Editor VICKY - MUHAN Story SAGAPTHAN
Technical Director P T CHANDRA KANTH BEBIN Publicity Designer KAMBAM SHANKAR
Special Screening
LUNAR
MOTION PICTURES
ஆக்குவாய் காப்பாய்
SEPT 28 @1:30PM
York Cinema
YORK CINEMAS
Info: 416.843.8424

Canada

We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign)
JOURNALISTS: Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# தமிழ் மக்களின் ஆதரவு எமது பொது வேட்பாளருக்கும் அனுர குமாரவுக்கும் அதிகரிப்பதாக அறிவித்துள்ள களச் செய்தியாளர்கள்

இலங்கையின் அடுத்த ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள எதிர்பார்ப்பிற்கு மத்தியில் முற்றிலும் எதிர்பாராத நகர்வுகள் அங்கு இடம்பெற்று வருகின்றன. அதற்கு மேலாக எவராலும் எதிர்பார்க்கப்படாத பல சம்பவங்களும் அறிவிப்புக்களும் எமது தமிழர் தரப்பில் இடம்பெற்று வருகின்றன. இவ்வார இதழில் எமது பத்தி எழுத்தாளர் பாலா அவர்கள் எழுதியுள்ள கட்டுரையில் தமிழரசுக் கட்சியின் அங்கத்தவர்கள் எவருக்கும் அடங்கிப் போகாமல் தங்கள் சொந்த நலன் கருதி வேறுபட்ட வேட்பாளர்களுக்கு பிரிந்து நின்று ஆதரவு வழங்குவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் சார்ந்த வேறு அமைப்புக்கள் தொடர்ச்சியாக எமது பொது வேட்பாளருக்கு தங்கள் ஆதரவை வழங்குவதில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர். வடக்கிலும் கிழக்கிலும் பா. அரியநேத்திரன் என்னும் எமது தமிழ்ப் பொது வேட்பாளருக்கான ஆதரவு அதிகரித்துச் செல்கின்றது என்பதை எம்மால் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது

”தமிழ்ப் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டமை சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல. மாறாக இந்த நாட்டின் தேசிய இனங்களில் ஒன்றான தமிழ் மக்கள் வரலாற்று ரீதியில் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகள் இன்றும் தீர்க்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்கானது. இன்னொரு வடிவில் பார்த்தால் அவர் எமக்கான உரிமைகளின் அடையாளமே அன்றி அவர் சிங்கள மக்களுக்கு எதிரானவர் அல்ல”

இவ்வாறு தழிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழு உறுப்பினரும் முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

அவர் மேலும், தமிழ்த் தேசியம் இன்று பலவாறாக அகத் துண்டாலுக்கு உட்பட்டு வருகின்றது. இது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வெளியுலகிற்கும் ஆட்சியில் அமர்பவர்களுடன் பேசுவதற்கும் அழுத்தம் கொடுப்பதற்கான நிலைமைகளை பலமிழக்கச் செய்து விடுமோ என்ற நியாயபூர்வமான அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளது. அவ் அச்சத்தில் நியாயபூர்வமான யதார்த்தம் உள்ளது. தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய இனமான நாம் எமது அரசியல் அபிலாசைகளை சாதாரண ஜனநாயக உரிமைகளுடன் மட்டும் மட்டுப்படுத்திவிடமுடியாது.’

இவ்வாறான தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு வேண்டிய ஏற்பாடு செய்யப்படும் கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்கள் ஆகிய மக்கள் மத்தியில் பேசப்படும் ஒரு விடயமாக பார்க்கப்படுகின்றது. மேலும் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து அவருக்கு வாக்களிக்கும் நிலையையும் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையையும் தோற்றுவிக்கின்றது.

இவ்வாறிருக்க, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நாமல் ராஜபக்ச போன்ற ஊழல்வாதிகளுக்கு ‘ஊதுகுழல்களாக’ விளங்கும் பல ‘கோடரிக்காம்புகள்’ ஆங்காங்க தமிழர் பிரதேசங்களில் முளைத்துள்ளன. இந்த விடயமானது கவலைக்குரிய ஒன்றாகவே எமது மக்களால் பார்க்கப்படுகின்றது. ரணில் விக்கிரமசிங்க தனது கபடத்தனமான பிரச்சாரத்தை தமிழ் மண்ணிலும் நடத்துகின்றார். அந்த வழியில் மாவை சேனாதிராஜா என்னும் செல்வாக்கில்லாத ஒரு ‘தலைவரையும்’ சந்தித்துச் சென்றுள்ளார். மாவையும் “ரணில் வெற்றி பெற வேண்டும்’ என்று வாயார வாழ்த்தி உள்ளதாகவும் செய்திகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. எனினும் தமிழ் மக்கள் மத்தியில் அநுர குமாரவிற்கு ஆதவு பெருகி வருவதாக எமது செய்தியாளர்கள் அறிவித்துள்ளார்கள். தமிழ் மக்களைப் பொருத்தளவில் எமது அரசியல் அபிலாசைகளை தொடர்ந்தும் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இன்றும் உள்ள நிலையில் ஒருமித்து .தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலில் அனுர குமார திசாநாயக்க ஆதரவு வழங்கி வாக்களிக்க வேண்டும் என மாற்றத்துக்கான தமிழ் மக்கள் அமைப்பு கடந்த 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோரிக்கை விடுத்துள்ளதுடன் நாங்களும் ஆதரவு வழங்குவதாக அதன் தலைவர் சுப்பிரமணியம் கமலேஸ்வரன் தெரிவித்தார்

மட்டுநகர் ஊடக அமையத்தில் 08-09-2024 அன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் தற்போது மக்கள் மத்தியில் மாற்று அரசியலை கொண்டு வரவேண்டிய தேவை இருக்கின்றது அதனடிப்படையில் நாங்கள் தன் எழுச்சியாக இந்த தீர்மானத்தை எடுத்துள்ளோம்நாடு சுதந்திரமடைந்த பின்னர் அரசியல் காரணங்களுக்காக ஜே.வி.பி புரட்சியின் பின்னர் தமிழ் தேசிய போராட்டம் ஏற்பட்டது இற்கு எல்லாம் இந்த நிர்வாககட்டமைப்பு தான் காரணம் எனவே இது மாற்றப்படவேண்டும். எனவே இந்த வாக்குவங்கி அரசியல் இலாபகரமான சூழலாக மாறியதுதான் காரணம் இதனை நாங்கள் தொடரமுடியாது இதனை முடிவுக்கு கொண்டுவரவேண்டும்

எனவே இந்த பாரம்பெரிய அரசியலை தோற்கடிக்க இந்த ஜனாதிபதி வேட்பாளர் அனுரவை கொண்டுவரவேண்டும் அதற்காக வாக்களியுங்கள். எனவே இது அரசியல் இலாபத்துக்காக தூண்டப்படுகின்ற பிரச்சனை நாட்டை பிரித்து கொடுத்தாலும் தமிழ் சிங்களம் என சண்டை பிடிக்கத்தான் போகின்றனர் எனவே தீர்வு என்றதை விட ஜே.வி.பி கட்சி இந்த நாட்டில் ஒரு சமத்துவத்தை வழங்குவதன் மூலம் இனவாதத்தை நிற்பாட்ட முடியும் என்றும் அவர் தெரிவிதுள்ளார்..

இவ்வாறான நிலைமையைப் பார்க்கும் போது தமிழ் மக்கள் தங்கள் முதலாவது தெரிவாக பா. அரியநேத்திரன் என்னும் எமது பொது வேட்பாளருக்கும் இரண்டாவது தெரிவாக அநுர குமாரவிற்கு வாக்களிப்பதன் மூலம் தங்கள் சரியான பங்களிப்பைச் செய்துள்ளார்கள் என்ற தகவல் வெளிநாடுகளுக்கும் பரவும் என நாம் எதிர்பார்க்கலாம். ஏனெனில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியாத நிலை உள்ளபோது, அவர்களது இரண்டாவது தெரிவு அநுர குமாரவாக இருப்பதில் நியாயத் தன்மை உள்ளது என்பதை பெரும்பாலான சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்றே நாம் நம்புகின்றோம்.!

**DZ Driver Wanted**

GTA and surrounding area
Call Nathan: 416-520-1324
or Email
Sentax72@gmail.com



உலக செய்திகள் World News

# "இந்தியப் பிரதமரே வருக"

## தமது பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நியுயோர்க் நகரில் வரவேற்கக் காத்திருக்கும் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையினர்

எதிர்வரும் செப்டம்பர் 22ம் திகதி அமெரிக்காவிற்கு வருகை தரவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை வரவேற்க அமெரிக்காவில் இயங்கிவரும் தமிழர் அமைப்பான "வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை" இயக்குனர் சபையும் பொது மக்களும் ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள் என அறியப்பெறுகின்றது.

இது தொடர்பாக மேற்படி அமைப்பினர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"உயர்வெனக் கொட்டு முரசே, நல்ல ஓய்வறியாத் தமிழர்கள் வாழ்வு அமெரிக்காவில் உயர்கவென்று கொட்டு முரசே! வட அமெரிக்காவெங்கும் பரந்து விரிந்திருக்கும் எம் தமிழுறவுகள் அனைவருக்கும் வணக்கம்!!

இந்தியத் தலைமை அமைச்சர் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்கள், ஐக்கிய நாடுகள் அவைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா வர உள்ளார். அவருடைய அமெரிக்கப் பயணத்தின் ஒரு நிகழ்வாக, நியூயார்க் பெருநகரில் இந்தியநாட்டு வம்சாவளி மக்களைச் சந்திக்கும் பண்பாட்டு நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

இந்தியநாட்டுத் தலைமை அமைச்சர் மாண்புமிகு மோடி அவர்களை வரவேற்றுச் சிறப்பித்திடவும், இந்திய அயலகத்துறை, தூதரகம், தொழிற்துறை, கலை இலக்கியப் பண்பாட்டுத் துறை சார்ந்தவர்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு பேரவைக்கும் தமிழுறவுகளுக்குமான மேன்மைகளுக்கு வழிகோலவும் இது ஒரு நல்வாய்ப்பாக அமையும்.


செப்டம்பர் 22ஆம் நாள் நிகழவிருக்கும் சீர்மிகுவிழாவில் கலந்து கொள்ள விழைவோர், சிறப்பு நுழைவுச்சீட்டு பெற்றிட, செப்டம்பர் 11ஆம் நாள் இரவு கிழக்கு நேரம் 11:59 PM மணிக்குள் கீழ்க்கண்ட படிவத்தில் பதிந்திடுமாறு வேண்டுகின்றோம்.

நம் பேரவையானது, பாரதப் பிரதமரை வரவேற்பதில் மிகவும் அக்கறை கொள்கின்றது. நியூயார்க் நகரில் இடம் பெறவுள்ள சிறப்புமிகு விழாவில், நம் தமிழ்ச்சங்கத்தார், உற்றார் உறவினர் நண்பர்களோடு கலந்து கொண்டு, இந்தியப் பிரதமர் அவர்களை வரவேற்றுச் சிறப்புச்செய்திடக் கூடிடுவோம்."

*வாழ்க தமிழ், வாழிய தமிழர்நலம்!*
*செயற்குழு, வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை*

**Date/Venue info**

**Sunday, September 22, 2024 at 9:30 AM**
**Nassau Veterans Memorial Coliseum,**
**1255 Hempstead Turnpike,**
**Uniondale, NY 11553.**
**More details: https://modiandus.org/**




# இலங்கை கிரிக்கெட் அணிக்கு எதிராக லண்டனில் போராட்டம்!



இலங்கை கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு இங்கிலாந்துக்கு எதிரான துடுப்பாட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு வருகின்றது.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலண்டன் ஓவல் மைதானத்தில் இலங்கை, இங்கிலாந்து அணிகள் மோதிய டெஸ்ட் போட்டித் தொடர் இடம்பெற்றது.

இதன்போதே போட்டி இடம்பெற்ற ஓவல் மைதானத்திற்கு எதிரில் இலண்டன் தமிழ் அமைப்புக்களின் ஏற்பாட்டில் கண்டனப் போராட்டம் இடம்பெற்றது.

"கிரிக்கெட் மூலம் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை மறைக்காதே!, தமிழருக்கு நீதி வேண்டும்!, இனப்படுகொலைக்கு நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும்!" எனும் பல கோசங்களை முன்வைத்து இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இப்போராட்டத்தில் புலம்பெயர்ந்து இலண்டனில் வாசிக்கின்ற தமிழர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பேச சாணக்கியனுக்கு எந்த அருகதையும் இல்லை



தமிழ் மக்களை முழுமையாக நேசிக்கும் எல்லோரும் ஒன்றிணைந்து தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என வடமராட்சி வடக்கு கடற்தொழில் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் முன்னாள் உபதலைவரான நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் பொது வேட்பாளரை சாணக்கியன் தேவையில்லாமல் விமர்சிக்க கூடாது. எங்களின் பிரச்சினையை தீர்க்காமல் வைத்துக் கொண்டு எம்மை விற்கிறீர்கள். தென்னிலங்கை கட்சிகளோடு சேர்ந்து நின்று கொண்டு தமிழரை பிரித்தாள்கிறீர்கள். ஆனால் காலப்போக்கில் இதற்கெல்லாம் மக்கள் பதில் செல்வார்கள். வடக்கு கிழக்கில் உள்ள தமிழ்மக்கள், புத்திஜீவிகள், சிவில் அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து கொண்டு வந்தது தான் தமிழ் பொது வேட்பாளர். ஆகவே தமிழ்பொது வேட்பாளரை விமர்சனம் செய்ய உங்களுக்கு எந்த அருகதையும் இல்லை. கடந்த 15 வருடங்களாக தென்னிலங்கை கட்சிகளுக்கு அடிமையாக இருந்ததை தவிர நீங்கள் சாதித்தது என்ன? பொருள்களின் விலைகளை எல்லாம் ஏற்றி மக்களை பொருளாதார சுமையில் தவிக்க விட்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதி என்று அரசிடம் கோடி கோடியாக வாங்கி என்ன செய்கிறீர்கள். நாடு அதல பாதாளத்துக்கு போயிருக்கிறது என்றால், இந்தக் காசு எங்கிருந்து வந்தது. மக்களின் மீது சுமத்தப்பட்டுள்ள வரிச் சுமையை ஆவது குறைத்தீர்களா?

தமிழ் பொது வேட்பாளரை ஒன்றிணைந்து நிறுத்திய அரசியல் கட்சிகள் இன்று என்ன செய்கின்றன.

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சியொன்று இன்னும் பிரசாரத்தில் முழுமையாக இறங்கவில்லை. அக்கட்சியின் இளம் உறுப்பினரிடம் கேட்ட போது கட்சி மேலிடத்தில் இருந்து இன்னும் உத்தரவு வரவில்லை என்று கூறியிருக்கிறார். இப்படியான அரசியல் கட்சிகளை தானே நீங்கள் எல்லோரும் இணைத்து வைத்துள்ளீர்கள்.

இன்று எல்லோரும் மக்கள் மத்தியில் முழுமையாக இறங்கி வேலை செய்ய வேண்டும். பிரச்சார பயணமொன்றில் நானும் ஈடுபட்டிருந்த வேளை மக்களிடம் பொது வேட்பாளர் விடயத்தை கூறிய போது இது எப்போதோ செய்திருக்க வேண்டிய வேலை, ஆனால் இப்போதாவது செய்துள்ளீர்கள் என ஆதரவளித்துள்ளனர். உண்மையில் இந்த விடயம் தொடர்பில் கிராமங்களில் தெளிவற்ற நிலையே காணப்படுகிறது. தேர்தலுக்கு குறுகிய நாள்களும் இருக்கும் நிலையில் மக்கள் மத்தியில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பிலான பிரசாரத்தை தீவிரமாக முன்னெடுக்க வேண்டும். தமிழ் இரத்தம் ஓடுகின்ற எவனும் சிங்கள கட்சிகளுக்கு வாக்களிக்கவும் மாட்டார்கள். தேர்தல் வேலை செய்யவும் மாட்டார்கள்.

இலங்கையில் இருக்கிற தமிழ் மக்களாக இருக்கலாம், முஸ்லிம்களாக இருக்கலாம் எங்களுக்காக குரல் கொடுக்கும் சிங்கள மக்களாக இருக்கலாம். எல்லோரும் இணைந்து பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டும். வடக்கு கிழக்கில் உரிமை கிடைத்து தமிழ் மக்கள் சந்தோசமாக வாழ வேண்டும் என நினைக்கின்ற சிங்கள மக்களும் சங்கு சின்னத்திற்கு நேரே புள்ளடியிட்டு ஆதரவளிக்க வேண்டும். இன்று தமிழ் அமைப்புகள் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக நின்று தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவளித்திருக்க வேண்டும். எல்லோரும் ஒன்றிணைந்து தமிழ் பொது வேட்பாளரை வெல்ல வைக்க சங்கு சின்னத்திற்கு எதிரே புள்ளடியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

# சந்தேகத்திற்கிடமான வகையில் திருகோணமலை நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவி ன் கார் நடமாடியதால் புல்மோட்டையில் பரபரப்பு!





திருகோணமலை புல்மோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, புல்மோட்டை 3ம் வட்டாரப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான கார் ஒன்று நடமாடியதால் 119 எனும் அவசர இலக்கத்திற்கு மக்கள் தகவல் வழங்கியுள்ளனர். குறித்த சம்பவம் 04.09.2024 அன்று இரவு இடம்பெற்றது.

இதனை தொடர்ந்து புல்மோட்டை பொலிஸார் குறித்த பகுதிக்கு சென்று கார் நிறுத்தப்பட்ட இடத்திற்கு சென்ற வேளையில் அங்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றதில் வழக்குகள் உள்ள ஒரு பெண்ணின் வீட்டில் திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா இருந்ததாக புல்மோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

பதற்றமடைந்த நிலையில் மக்கள் அங்கு ஒன்று கூடியதால் பொலிஸார் பாதுகாப்புடன் குறித்த நீதிபதியை பின் பக்கத்தினால் வெளியேற்றி அனுப்பியதாக புல்மோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

குறித்த சிவில் சமூகத்தை சேர்ந்த வழக்குகளுடன் சம்பந்தப்பட்ட பெண் ஒருவரின் வீட்டுக்கு நீதிபதி இரவு நேரத்தில் செல்ல முடியுமா என மக்கள் சந்தேகிக்கின்றனர்.

மேலும் குறித்த நீதிபதியின் அரச வாகனமும், குறித்த பெண்ணின் வேலையாள் ஒருவரினால் செலுத்தப்பட்டதும் கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த வாகனத்தை பொலிஸார் மீட்டு குறித்த நீதிபதியிடம் பொலிஸார் ஒப்படைத்து பாதுகாப்புடன் அனுப்பி வைத்தனர்.

புல்மோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி - 0718591180
(பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் உறுதிப்படுத்தவும்)

## மன்னாரில் கவனிப்பார் இன்றி கிடக்கும் தனிநாயகம் அடிகளாரின் நினைவுத் தூபி

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்





- எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் நகர மத்தியில் அமைக்கப்பட்டிருக்கும் தமிழ் வளர்த்த பெருந் துறவியான தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நினைவுத் தூபி காகங்களின் எச்சத்தினால் அசுத்தம் செய்யப்பட்டு கவனிப்பாரின்றி கிடப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் என்கிற வண. சேவியர் தனிநாயகம் அடிகளார் ஈழத்தமிழர்களின் தமிழ் வளர்ச்சி பாதுகாப்பில் பெரும் பங்காற்றி தமிழுக்காக உயிர் நீத்தவர்.

அவரது தியாகம் உலகறியும் அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் சில வருடங்களுக்கு முன்பு தனிநாயகம் அடிகளாரின் நினைவு தூபி அமைக்கப்பட்டு அவரது நினைவேந்தல் தினங்களில் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டு வந்தது.

தற்போது குறித்த நினைவுச் சிலை கவனிப்பார் அற்ற நிலையில், காகங்களின் எச்சத்தில் மூழ்கிய நிலையில் காணப்படுகின்றது.

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் மன்னார் விஜயம் செய்து பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனுடன் கலந்துரையாடினர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (11-09-2024)

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் 11-09-2024 புதன்கிழமை மாலை மன்னாரிற்கு விஜயம் செய்தனர்.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனை அவருடைய மன்னார் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

தற்போதைய ஜனாதிபதி தேர்தல் மற்றும் தற்போதைய சூழ்நிலைகள் தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினரிடம் கேட்டறிந்து கொண்டனர்.

இதன்போது இலங்கை தமிழரசு கட்சியின் மன்னார் மாவட்ட செயலாளர் ஜஸ்ரின் துரம் அவர்களும் இச் சந்திப்பில் கலந்து கொண்டார்.




## மன்னாரில் ஜனாதிபதி தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனை ஆதரித்து மாபெரும் பொதுக்கூட்டம்

- எஸ்.ஆர்.லெம்பேட் (12-09-2024)

ஜனாதிபதி தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் அவர்களை ஆதரித்து மாபெரும் பொதுக்கூட்டம் 13-09-2024 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு மன்னார் நகர பேருந்து நிலையத்தில் இடம் பெற உள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் ஏற்பாட்டில், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் மோகன்ராஜ் ஒருங்கிணைப்பில் குறித்த பொதுக்கூட்டம் இடம் பெற உள்ளது.

குறித்த பொதுக் கூட்டத்தில் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் சார்பில் அரசியல் கட்சித் தலைவர்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

குறித்த பொதுக் கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு தமிழ் தேசிய பொது கட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.






# கனடாவைத் தளமாகக் கொண்ட Tamil Rights Group அமைப்பு ஒன்ராறியோ மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை வரவேற்கின்றது

## Tamil Rights Group Welcomes Ontario Court of Appeal's Decision to Uphold Bill-104: A Landmark Victory Tamil Canadians

செப்டம்பர் 5, 2024 அன்று, ஒன்ராறியோவுக்கான மேன்முறையீட்டு நீதிமன்றம் தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமைக்கான சட்டமூலம் - 104ஐ உறுதிப்படுத்தியதை எமது Tamil Rights Group வரவேற்று மகிழ்கின்றது. தமிழின அழிப்பு நடைபெற்றதென்பதை மறுப்பவர்களால் மேன்முறையீடு செய்யப்பட்டு முன்வைக்கப்பட்ட அரசியலமைப்புக்கான சவால்கள் பல நிராகரிக்கப்பட்டதோடு, இலங்கையில் நடைபெற்ற தமிழின அழிப்புக் குறித்து ஒன்ராறியோவில் வாழ்வோர் தொடர்ந்தும் கல்வி கற்கவும் அதனைப் பற்றிக் கற்பிக்கவும் மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் இந்த சட்ட மூலம் பாதிக்கப்பட்ட எமது இனத்திற்கு சாதகமான தீர்ப்பும் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இச்சட்டமூலம் 104 ஐப் பாதுகாக்கவும் அதற்கு எதிராக வந்த எதிர்ப்புக்களை முறியடிக்கவும் அயராது உழைத்த அறுபதுக்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகளுக்கும், சமூக உறுப்பினர்களுக்கும், குறிப்பாக தமிழ் இளையோர்களுக்கும் Tamil Rights Group நன்றி கூறுகின்றது.

ஒன்ராறியோ மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவு ஒரு வரலாற்று சாதனையைக் குறிக்கிறது எனினும், இந்த தீர்ப்பைத் தாண்டி தமிழ் சமூகத்திற்கு நீதியைப் பின்தொடர்வதில் எமது அமைப்பு உறுதிபூண்டுள்ளது. சர்வதேச நீதிமன்றங்களில் இலங்கை அரசின் மீது வழக்குத் தொடரவும், கனடா மற்றும் பிற நாடுகளுக்கான இனப்படுகொலை மறுப்பாளர்களால் ஏற்படுத்தப்படும் தடைகளை முறியடிப்பதற்கும் சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் எமது அமைப்பு தொடர்ந்து போராடும்.

மேலும், கடந்த காலத்தின் அட்டூழியங்கள் மறக்கப்படுவதில்லை அல்லது மீண்டும் மீண்டும் செய்யப்படுவதில்லை என்பதை உறுதி செய்வதற்காக இந்த தீர்ப்பை உருவாக்குவதில் ஒன்ராறியோவில் உள்ள தமிழ் சமூகங்களுடனும் உலகெங்கிலும் இயங்கும் அமைப்புக்களுடனும் எமது Tamil Rights Group ஒன்றிணைகிறது என்பதையும் அறியத்தருகின்றோம்.

---

Tamil Rights Group (TRG) welcomes yesterday's unanimous decision by the Ontario Court of Appeal, upholding Bill 104, the Tamil Genocide Education Week Act (TGEWA). This ruling is a significant milestone for Tamil Canadians of all generations, affirming the historic and ongoing struggles of the Tamil community in the face of the atrocities committed by the Sri Lankan regime.

Bill 104 represents a profound piece of legislation for Tamil Canadians, creating a dedicated week to acknowledge, educate, and commemorate the genocide perpetrated against the Tamil people. In doing so, it ensures that the trauma and lived experiences of Tamils in Sri Lanka and around the world are validated, remembered, and protected against denialist narratives.

"Genocide deniers have continually sought to undermine the legitimacy of the Tamil community's suffering with baseless arguments," said Navaratnam Srinarayanathas, President of TRG."Today's decision is a monumental step toward healing and acknowledging the decades-long marginalization of Tamils. It strengthens our collective resolve to ensure the lessons of the Tamil Genocide are imparted to future generations so that such horrors are never repeated."

The Ontario Court of Appeal's ruling dismissed three key claims made by the opposing parties who sought to overturn the earlier Ontario Superior Court decision:

Claim 1: The TGEWA is ultra vires Ontario (beyond the powers of the province)

Court's Decision: The court concluded that Bill 104's purpose aligns with Ontario's legislative powers by promoting human rights, diversity, and multiculturalism. The decision reaffirmed that the TGEWA's focus is on commemorating and affirming the Tamil-Ontarian community's experience of the Sri Lankan Civil War, within the framework of Ontario's values.

"Considering the TGEWA's intrinsic and extrinsic evidence, as well as its effects, we conclude that the TGEWA's dominant purpose is to affirm and commemorate the Tamil-Ontarian community's experience of the Sri Lankan Civil War and thus promote, within Ontario, the values of human rights, diversity, and multiculturalism," the court ruled.

Claim 2: The TGEWA breaches Section 2(b) of the Charter (Freedom of Expression)
Court's Decision: The court found that the Act does not restrict or penalize any form of expression. The court emphasized that the legislation was not intended to stifle dissent or restrict freedom of speech.

"The Act's text contains no provisions prohibiting or penalizing the form or content of, or access to, the appellants' messaging. Nothing in the legislative debates suggests that the Legislature intended for the Act to be used to prohibit dissent," the court stated.

Claim 3: The TGEWA breaches Section 15(1) of the Charter (Equality Rights)
Court's Decision: The court dismissed the claim that Bill104 discriminates against any particular group, specifically refuting the idea that the Act blames Sinhala-Buddhists collectively for the Sri Lankan government's genocidal policies.

"The impugned portions of the TGEWA's preamble state that the Sri Lankan government's allegedly genocidal policies were 'Sinhala-Buddhist centric', not that Sinhala-Buddhists are, as a racial group, collectively responsible for them," the ruling read.

This landmark ruling upholds the principles upon which Bill104 was created: to honour the Tamil community's experiences, educate Ontarians about the Tamil Genocide, and combat genocide denialism.

Tamil Rights Group extends its deepest gratitude to MPP Vijay Thanigasalam for his leadership in tabling Bill 104 and guiding it to unanimous approval in the Ontario Legislature. The defence of this vital legislation would not have been possible without the dedication of key Tamil organizations, including the National Council of Canadian Tamils, the Canadian Tamil Academy, the Canadian Tamil Youth Alliance, and TRG's external counsel, Janani Shanmuganathan.

"We owe a tremendous debt of gratitude to everyone who contributed to the defence of this historic bill," said Srinarayanathas."Your tireless efforts have brought us to this defining moment."

While the Ontario Court of Appeal's decision marks a historic achievement, TRG remains committed to pursuing justice for the Tamil community beyond this ruling. We will continue leveraging international law to seek the prosecution of the Sri Lankan regime in international courts and advocate for Canada and other countries to close loopholes exploited by genocide deniers.


TRG stands united with Tamil communities in Ontario and worldwide in building upon this ruling to ensure the atrocities of the past are neither forgotten nor repeated.

*For all media enquiries:*
*Katpana Nagendra, General Secretary and Spokesperson*
*katpana@tamilrightsgroup.org | + 1 (778) 870-5824*

# புதுவைப் பேராசிரியரும் தமிழறிஞருமான மு. இளங்கோவன் கனடாவிற்கு வருகின்றார்

கனடாவில் புதுவைப் பேராசிரியரும் தமிழறிஞருமான மு. இளங்கோவன் அவர்களது மூன்று நூல்கள் வெளியிடப்பெறவுள்ளன.

விபரங்களுக்கு இங்கே காணப்பெறும் அறிவித்தலைப் பார்க்கவும் அல்லது மருத்துவர் போல் ஜோசப் அவர்களை (416) 986-4903 என்னும் இலக்கத்தில் அழைக்கவும்.






# தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சிக் கிளை தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதாக ஏக மனதாக தீர்மானம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

புு. கஜிந்தன்

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சிக் கிளை தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதாக ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

குறித்த கலந்துரையாடல் 09-09-2024 அன்று பிற்பகல் 3 மணியளவில் மாவட்டக் கிளை அலுவலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் குருகுலராஜா, பிரதேச சபைகளின் முன்னாள் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆராய நியமிக்கப்பட்ட குழு கூடாமலே கட்சியின் ஆதரவு அறிவிக்கப்பட்டது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி கட்சி அலுவலகமான அறிவகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச வட்டாரகிளைகளின் நிர்வாகிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில் கடந்த 18-08-2024 அன்று மத்திய குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆராய்ந்து யாருக்கு ஆதரவு அளிப்பது தொடர்பான குழு நியமிக்கப்பட்டது.

இந்த குழு கூடி முடிவெடுக்காது முடிவு அறிவிக்கப்பட்டது. தவறு நாளைய தினம் குறித்த குழு கூடவுள்ளது. கூடி சில முடிவுகள் எடுக்கப்படலாம் என தெரிவித்தார்.

இதன் பிரகாரம் 09-09-2024 அன்று நடைபெற்ற கலந்துரையாடலை கூடியிருந்த அனைவரும் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதாக தெரிவித்தனர். ஏக மனதாக தீர்மானம் எடுத்திருக்கிறார்.







# சுமந்திரனின் அறிவிப்பால் யாழ்ப்பாணத்தில் சஜித்துக்கு வந்த சோதனை!

யாழ்ப்பாணம், உடுப்பிட்டியில் 10-09-2024 அன்று முற்பகல் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் பிரசாரக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மக்களை அழைத்துவர முடியாது போன நிலையில் முற்பகல் 10 மணி முதல் இசைக் குழுவினர் பாடல் இசைத்தவண்ணம் இருந்துள்ளனர்.

நண்பகல் வரை மக்களை ஒன்றுதிரட்டுவதில் ஏற்பாட்டாளர்கள் தோல்விகண்ட நிலையில் இந்தக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.



சஜித் பிரேமதாசவிற்கு யாழ். பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆதரவு வழங்கியிருந்த நிலையில் இரண்டாவது முறையாக யாழ்ப்பாணத்தில் சஜித் பிரேமதாசவின் பொதுக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி உயர்தரப் பிரிவு மாணவிக்கு எமனாக மாறிய டிப்பர் – கதறும் உறவுகள்!

10-09-2024 செவ்வாய் அன்றையதினம் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் டிப்பர் வகனம் மோதியதில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி பரிதாபமாக உயரிழந்துள்ளார். கொக்குவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த வினுதா விஜயகுமார் (வயது 17) என்ற உயர்தரப் பிரிவு மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த மாணவி இன்று பிற்பகல் 2.30 மணியளவில் துவிச்சக்கர வண்டியில் தனியார் கல்வி நிலையத்திற்கு சென்றுகொண்டு இருந்தவேளை, ஆடியபாதம் வீதியில் பின்பக்கமாக வந்த டிப்பர் குறித்த மாணவி மீது மோதி, டிப்பரின் பின் சில் மாணவியின் மீது ஏறியது.

இந்நிலையில் படுகாயமடைந்த மாணவி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அங்கு அவர் உயிரிழந்தார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.


THANA INSURANCE Inc.

Thana Insurance Inc

NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News




# வடமாகாண மாற்றுத் திறனாளிகளுக்கான மாபெரும் இசைபோட்டி நிகழ்வின் விருது வழங்கும் விழா!

பு. கஜிந்தன்

புதிய வாழ்வு நிறுவனமும், சாவிகா சங்கீத அறிவாலயமும் இணைந்து நடாத்திய வடமாகாண மாற்றுத் திறனாளிகளுக்கான மாபெரும் இசைபோட்டி நிகழ்வின் விருது வழங்கும் விழாவானது அண்மையில் ராஜா சரஸ்வதி மண்டபத்தில், புதிய வாழ்வு நிறுவனத்தின் இணைப்பாளர் திரு.விஜயகுமார் விஜயலாதன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் மதிப்பிற்குரிய திரு.இலட்சுமனன் இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் திரு. வி.பி.பாலசிங்கம், மதிப்பிற்குரிய முனைவர் திரு.திருநாவுக்கரசு கமலநாதன் (யாழ் தேசிய கல்வியியல் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி), கௌரவ மருத்துவ கலாநிதி திரு.திருமதி. ஜெயதேவி கணேசமூர்த்தி (ஜெய்ப்பூர் மாற்றுவலுவுடையோரக்கான புனர்வாழ்வு நிலையத்தின் தலைவர்), சட்டவியல் நிபுணர் திரு.ஜனகன் முத்துகுமார், மற்றும் மதிப்பிற்குரிய திருமதி. வி. சிவகுமார் (ஸ்தாபகர் ஆறுமுகம் விசாகரட்ணம் அறக்கட்டளை) ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

காலை 9.00 மணி அளவில் ஆரம்பித்த இந்த நிகழ்வு மதியம் 1.00 மணி வரை தொடர்ச்சியாக இடம்பெற்றது. இதில் சாவிகா சங்கீத அறிவாலயம் மற்றும் புதிய வாழ்வு நிறுவன இயக்குனர்கள், தன்னார்வலர்கள், மாற்றுத்திறனாளிக் குழந்தைகள், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் இசைப்போட்டியில் வெற்றிபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.









# பொது வேட்பாளருக்காக யாழ். நகர்ப் பகுதியில் தேர்தல் பிரச்சாரம்!

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பில் உள்ள கட்சிகளின் தலைவர்கள், 06-09-2034 அன்று காலை, யாழ். நகரப் பகுதியில் பரப்புரை பணிகளில் ஈடுபட்டார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான க.வி.விக்னேஸ்வரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின், தமிழ் தேசிய கட்சியின் தலைவர் சிறிகாந்தா, அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், சிவில் அமைப்பினர் இவ்வாறு யாழ். நகரப் பகுதியில் பரப்புரை பணிகளில் ஈடுபட்டார்கள்.



# யாழ்ப்பாணத்தில் சுண்டுக்குளி பாடசாலைமாணவி கிருசாந்தியின் 28 ஆவது ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது



யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி பாடசாலை மாணவி குமாரசாமி கிருசாந்தியின் 28 ஆவது ஆண்டு நினைவேந்தல் 07-09-20224 அன்று மாலை செம்மணி பகுதியில் இடம்பெற்றது.

இதன் போது செம்மணிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட, அங்கு புதைக்கப்பட்ட ஏனையவர்களும் நினைவு கூரப்பட்டு, அவர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

செம்மணிப் படுகொலை நினைவேந்தல் பேரவையின் தலைவர் கிஷோர் தலைமையில் அன்று மாலை நினைவேந்தல் இடம்பெற்றது.

இந்த நினைவேந்தலில் சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் மயூரன் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

1996 ஆம் ஆண்டு செம்டம்பர் மாதம் 7ஆம் திகதி 18 வயதுடைய யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி வீதியால் சென்று கொண்டிருந்த போது, செம்மணி பகுதியில் இராணுவத்தினரால் வழிமறித்து பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

கிரு'ந்தியை, செம்மணி இராணுவ முகாமில் தடுத்து வைத்திருந்ததை பிரதேச மக்கள் அவதானித்ததையடுத்து மாணவியின் தாயாரிடம் கூறியுள்ளனர்.

இதனையடுத்து, மாணவியின் தாயாரான ஆசிரியை குமாரசாமி இராசம்மா, மாணவியின் சகோதரன், குமாரசாமி பிரணவன் மற்றும் மாணவியின் வீட்டுக்கு அயல் வீட்டில் வசிக்கும் தென்மராட்சி பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் உதவியாளராக கடமையாற்றிய சிதம்பரம் கிருபாமூர்த்தி ஆகியோர் மாணவியை தேடி சென்று செம்மணி இராணுவ முகாமில் விசாரித்துள்ளனர்.

அதனையடுத்து மாணவியைத் தேடிச் சென்ற மூவரையும் இராணுவத்தினர் படுகொலை செய்ததாகவும் கூறப்படுகின்றது.

அன்றையதினம் நள்ளிரவு படுகொலை செய்யப்பட்ட நால்வரின் உடல்கள் செம்மணி பகுதியில் உள்ள வயல் வெளியில் புதைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அநுரவின் கருத்துக்களோடு ஒத்துப் போகின்றோம்

## யாழ்ப்பாணத்தில் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு!





தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசநாயக்க யாழ்ப்பாணத்தில் இனவாதத்தை அடிப்படையாக கொண்ட கருத்தினை வெளியிடவில்லை என தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எம்ஏ.சுமந்திரன் ஊழல் அற்ற அரசாங்கம் என்ற மாற்றத்தினை விரும்புகின்றோம், இந்த முயற்சியில் நாங்கள் அனுரகுமார திசநாயக்கவின் பக்கம் நிற்கின்றோம் அதனை ஆதரிக்கின்றோம் என தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

தென்பகுதி மக்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றார்கள் இந்த தேர்தல் மூலம் அந்த மாற்றம் வரும். ஆனால் வடபகுதி மக்கள் இந்த மாற்றத்தின் ஒரு பகுதியாக மாறவில்லை என தென்பகுதி மக்கள் தெரிவிக்க கூடும் என யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் தெரிவித்திருந்தார்.

அவர் இந்த சொற்களை பயன்படுத்தி இதனை தெரிவித்தவேளை பலர் உடனடியாக இது கோட்டாபயராஜபக்சவின் கூற்றை நினைவுபடுத்துகின்றது என தெரிவித்தனர்.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற பதவியேற்பு நிகழ்வில் கோட்டாபய ராஜபக்ச, நான் அனைவரும் எனது வெற்றியின் பங்குதாரர்களாக இருக்கவேண்டும் என விரும்பினேன், ஆனால் வடபகுதி மக்கள் இந்த வெற்றியில் என்னுடன் இணைந்து கொள்ளவில்லை என அவர் தெரிவித்திருந்தார்.

வடபகுதி மக்களிற்கு அவ்வேளை உணர்வொன்று காணப்பட்டது. அது சரியானது என நிரூபிக்கப்பட்டது. ஏனென்றால் கோட்டாபய ராஜபக்சவை தெரிவு செய்த தென்பகுதி மக்களே அவரை துரத்தினார்கள்.

நாங்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றோம் விரும்புகின்றோம். 70 வருடங்களிற்கு மேலான ஆட்சிமுறையில் மாற்றங்கள் ஏற்படவேண்டும். கடந்த இரண்டு வருடங்களாக மக்கள் கோருகின்ற மாற்றம் இல்லை. நாங்கள் அந்த மாற்றத்தினையும் கோருகின்றோம்.

ஊழல் அற்ற அரசாங்கம் என்ற மாற்றத்தினை விரும்புகின்றோம், இந்த முயற்சியில் நாங்கள் அனுரகுமார திசநாயக்கவின் பக்கம் நிற்கின்றோம் அதனை ஆதரிக்கின்றோம்.

நாங்கள் அவருக்கு இந்த விடயத்தில் முழுமையாக ஆதரவை வழங்குகின்றோம், ஊழலை ஒழிப்பதில் அவருக்கு முழுமையான ஆதரவை வழங்குவோம். இது குறித்து எந்த கேள்வியும் இல்லை.

வெவ்வேறு பகுதிகளில் வசிக்கின்ற மக்கள், வெவ்வேறு மொழிகளை பேசுகின்ற மக்கள், அவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் குறைந்தவர்களாக இருக்கலாம் ஆனால், அவர்களிற்கும் அரசாங்க அதிகாரங்களிற்கான சமமான அணுகல் காணப்படும் மாற்றத்தை விரும்புகின்றோம். இதுவே உண்மையான மாற்றமாகயிருக்கும்.

தோழர் அனுரகுமார இனவெறி உணர்வுகளுடன் இந்த கருத்தினை வெளியிட்டார் என நான் கருதவில்லை.

அவரை எனக்கு நன்கு தெரியும், அவர் இனவாத உணர்வுகள் அற்ற மனிதர், அவர் இந்த நாட்டில் இனவாதத்தை ஒழிப்பதற்கு தீவிர முயற்சிகளை எடுத்துள்ளார், இந்த விடயத்தில் எங்களிற்கு வேறு உணர்வுகள் வித்தியாசமான உணர்வுகள் இல்லை,

நாங்கள் வேறு ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிக்க தீர்மானித்திருக்கலாம் ஆனால் இந்த விடயத்தில் நாங்கள் இணைந்திருக்கலாம் என தெரிவித்துள்ளார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ். மாநகர முன்னாள் முதல்வர் பொன். சிவபாலனின் 26வது நினைவு தினம் சித்தன்கேணியில் அனுஷ்டிப்பு!



யாழ். மாநகர முன்னாள் முதல்வரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளருமான அமரர். பொன். சிவபாலனின் 26 ஆவது வருட நினைவு 10-09-2024 அன்று காலை அன்னாரது சித்தங்கேணி இல்லத்தில் நடைபெற்றது. குடும்ப உறுப்பினர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவேந்தலின்போது திருவுருப்படத்திற்கு ஈகைச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் குடும்ப உறுப்பினர்களும் யாழ். மாநகர சபையின் முன்னைநாள் உறுப்பினர் த.முகுந்தன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.





1998 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி யாழ். மாநகரசபையில் மாநகர போக்குவரத்து சம்பந்தமான உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது கூரைமேல் வைக்கப்பட்ட கிளைமோர் தாக்குதலில் பொன்.சிவபாலன் கொல்லப்பட்டார்.

அவருடன் சேர்த்து. 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுசந்த மெண்டிஸ், சிரேஷ் பொலிஸ் அத்தியடசகர் சந்திரா பெர்னாண்டோ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரமோகன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரத் பெர்னாண்டோ, யாழ். தலைமையக பொலிஸ் அதிகாரி மோகனதாஸ், யாழ். நகர பிரிகேட் மேஜர் கப்டன் ராமநாயக்க, பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெராட், யாழ் மாநகர சபை உதவி ஆணையாளர் பத்மநாதன், வேலைப்பகுதிப் பொறியியலாளர் ஈஸ்வரன், கட்டட வரைபடக் கலைஞர் திருமதி. மல்லிகா இராஜரட்ணம், தட்டெழுத்தாளர் பத்மராஜா ஆகியோர் அடங்கிய பன்னிரண்டுபேர் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

# வட்டுக்கோட்டையில் பாரதி வீதி திறப்பு விழா!



10-09-2024 அன்றையதினம் வட்டுக்கோட்டையில் பாரதி வீதியானது திறந்து வைக்கப்பட்டது. வட்டு தென்மேற்கு பகுதியில் உள்ள குறித்த வீதிக்கு பாரதி வீதி என பெயர் சூடாடப்பட்டு அந்த வீதியானது திறந்து வைக்கப்பட்டது.

விருந்தினர்கள் மங்கல இசை வாத்தியங்கள் முழங்க அழைத்து வரப்பட்டு, மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. அதனை தொடர்ந்து விருந்தினர்களது உரைகள், வீதி திறந்து வைப்பு வைபவம் என்பன இடம்பெற்றன.







யாழ். நண்பர்கள் அமைப்பின் தலைவர் கலாநிதி சிதம்பரமோகன் அவர்களது தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மறவன்புலவு சச்சிதானந்தம் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்ததுடன், மதகுருமார், வலிமேற்கு பிரதேச செயலாளர் திருமதி. கவிதா உதயகுமார், வலிமேற்கு பிரதேச சபை செயலாளர் சண்முகராஜா பாலரூபன், கிராம சேவையாளர் திரு. சிவபாலன் சிவகுமார், பேராசிரியர் கௌரவ பொன் பாலசுந்தரம்பிள்ளை, கலாநிதி கந்தையா சிவராஜா, Dr. MP. நடராஜா, வைத்தியசூரி செ. பரமசிவம்பிள்ளை கா. கோபாலகிருஸ்ணன் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# இலங்கை அரசின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலினால் தமிழ் தேசியம் சிதைக்கப்படுகின்றது

## தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன்



இதனை தாண்டி தமிழ் தேசமாக ஒருங்கிணைப்பதற்கு தமிழ் பொது வேட்பாளர் மிகவும் அவசியமானதாகும் என தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் தெரிவித்தார்.

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசனின் ஊடக சந்திப்பு தமிழ் தேசிய பொதுக் கூட்டமைப்பு அலுவலகத்தில் இன்று இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.




# அன்பின் தொனி - 787

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

**தேவகிருபை -** Grace of God

**இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர்:**

பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்துபாடு; கர்ப்பவேதனைப்படாதவளே, கெம்பீரமாய்ப் பாடி ஆனந்தசத்தமிடு; வாழ்க்கைப்பட்டவளுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும், அநாத ஸ்திரீயினுடைய பிள்ளைகள் அதிகம் என்று கர்த்தர் சொல்லுகிறார். உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு; உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும்; தடைசெய்யாதே; உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து. நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்; உன் சந்ததியார் ஜாதிகளைச் சுதந்தரித்துக்கொண்டு, பாழாய்க் கிடந்த பட்டணங்களைக் குடியேற்றுவிப்பார்கள். பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை நாணாதே, நீ இலச்சையடைவதில்லை; உன் வாலிபத்தின் வெட்கத்தை நீ மறந்து, உன் விதவையிருப் பின் நிந்தையை இனி நினையாதிருப்பாய். உன் சிருஷ்டிகரே உன் நாயகர்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்; இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர், அவர் சர்வபூமியின் தேவன் என்னப்படுவார். கைவிடப்பட்டு மனம்நொந்தவளான ஸ்திரீயைப்போலவும், இளம் பிராயத்தில் விவாகஞ்செய்து தள்ளப்பட்ட மனைவியைப்போலவும் இருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார் என்று உன் தேவன் சொல்லுகிறார். இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன்; ஆனாலும் உருக்கமான இரக்கங்களால், உன்னைச் சேர்த்துக்கொள்வேன். அற்பகாலம் மூண்டகோபத்தினால் என் முகத்தை இமைப்பொ ழுது உனக்கு மறைத்தேன்; ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார். **- ஏசாயா 54: 1-8**

**உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால்போதிக்கப்பட்டிருப்பார்கள்**

நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம்போலிருக்கும்; நோவாவின் இது எக்கு காலத்திலுண்டான வெள்ளம் இனி பூமியின்மேல் புரண்டுவருவதில்லை என்று நான் ஆணையிட்டது போல, உன்மேல் நான் கோபங்கொள்வதில்லையென்றும், உன்னை நான் கடிந்துகொள்வதில்லை யென்றும் ஆணையிட்டேன். மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெ யராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிறகர்த்தர் சொல்லுகிறார். சிறுமைப்பட்டவளே, பெருங்காற்றில் அடிபட்டவளே, தேற்றரவற்றவளே, இதோ, நான் உன் கல்லுகளைப் பிரகாசிக்கும்படி வைத்து, நீல ரத்தினங்களை உன் அஸ்திபாரமாக்கி, உன் பலகணிகளைப் பளிங்கும், உன் வாசல்களை மாணிக்கக் கற்களும், உன் மதில்களையெல்லாம் உச்சிதமான கற்களுமாக்குவேன். உன் பிள்ளைகளெல் லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும். நீதியினால் ஸ்திரப்பட்டிருப்பாய்; கொடுமைக்குத் தூரமாவாய்; பயமில்லாதிருப்பாய், திகிலுக்குத் தூரமாவாய், அது உன்னை அணுகுவதில்லை. இதோ, உனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடினால், அது என்னாலே கூடுகிற கூட்டமல்ல; எவர்கள் உனக்கு விரோதமாய்க் கூடுகிறார்களோ, அவர்கள் உன் பட்சத்தில் வருவார்கள். இதோ, கரிநெருப்பை ஊதி, தன்கிரியைக்கான ஆயுதத்தை உண்டுபண்ணுகிற கொல்லனையும் நான் சிருஷ்டித்தேன்; கெடுத்து நிக்கிரகமாக்குகிறவனையும் நான் சிருஷ்டித்தேன். உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்; இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும் என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார். **- ஏசாயா 54: 9- 17**

**தொடரும்...**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சமூக விஞ்ஞான ஆய்வு மையமும் மீனவ பிரதிநிதிகளும் இணைந்து தமிழ்ப் பொது வேட்பாளருக்கு பரப்புரை!



தமிழ் மக்கள் பொதுச்சபையும் தமிழ் தேசிய அரசியல் நிலைப்பாட்டில் உள்ள கட்சிகளாலும் ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தப்பட்டுள்ள தமிழ் பொது வேட்பாளர் பா. அரியநேந்திரன் அவர்களுக்கு சார்பான பரப்புரை கோப்பாய் தொகுதியில் அதி தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

சமூக விஞ்ஞான ஆய்வு மைய்ய இயக்குநரும், சட்டத்தரணியுமான சி.அ. யோதிலிங்கம் தலைமையில் இடம்பெற்றுவரும் பரப்புரையில் வட மாகாண மீனவ அமைப்பு பிரதிநிதிகளும் இணைந்துள்ளனர்.

காலை முதல் பிற்பகல் 6:00 மணிவரை குறித்த பரப்புரை கோப்பாய் பகுதியிலும், வட்டுக்கோட்டை பகுதியிலும் இடம் பெற்றுவருகின்றன.

# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மாபெரும் பிரச்சார கூட்டம்!



இலங்கை தமிழரசு கட்சியின் தீர்மானம் மாற்றத்திற்கு எதிரான ஒரு தீர்மானமாக மாறியது ஏன் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்கவின் தேர்தல் பிரசாரம் கூட்டம் 07-09-2024 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதன்போது மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில், தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் கட்சி உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்வரும் விடயங்களை தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்கா முன்வைத்து தனது உரையை ஆற்றினார்.

1. ஜனாதிபதி இலங்கையின் அடிப்படை சட்டத்தினை மீறுகின்றார், அவர் நீதிமன்றத்தை மதிப்பதில்லை.

2. தெற்கில் மக்கள் ஒன்றுதிரண்டு நிற்கின்றார்கள் ஆகவே வடக்கு மக்களிடம் கேட்கின்றோம் நீங்களும் மாற்றத்தின் பக்கம் வாருங்கள்.



3. நாட்டால் அனைத்து மக்களின் ஆதரவுடன் ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்துவதே எமது எதிர்பார்ப்பு.

4. சுமந்திரன் சஜித் பிரேமதாசவிற்கு வழங்கிய ஆதரவை நாங்கள் இனவாதமாக நினைக்கமாட்டோம்.

# தமிழ் மக்களிடம் எஞ்சியிருக்கும் ஒரே ஆயுதம் வாக்குகள்தான். இம்முறையாவது இலக்குத் தவறாது பிரயோகிப்போம் - பொ.ஐங்கரநேசன் வேண்டுகோள்

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பெரும் பலமாக முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுறும் வரைக்கும் விடுதலைப் புலிகள் இருந்தார்கள். அவர்களின் ஆயுதப் பலம் பேரம் பேசக்கூடிய பெரும் சக்தியா இருந்தது. இப்போது எம்மிடம் எஞ்சியிருக்கும் ஒரேயொரு ஆயுதம் வாக்குகள்தான். யுத்தத்தின் பின்னரான கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் இந்த வாக்குப் பலத்தை நாம் வீணடித்துவிட்டோம்.

இம்முறையாவது அவற்றை இலக்குத் தவறாது பிரயோகிப்போம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரனை ஆதரித்து ஞாயிற்றுக்கழமை (08.09.2024) ஏழாலை ஐக்கிய நாணயசங்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் பின்னர் தமிழினம் அரசியல் ரீதியாக மிகமோசமாகப் பலவீனம் அடைந்துள்ளது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அரசு தமிழர் தாயகத்தை வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என்பவற்றின் ஊடாகச் சட்டரீதியாகக் கையகப்படுத்தி வருகின்றது. தமிழர் தாயகத்தின் இயற்கை வளங்களை, பொருளாதாரத்தை, பண்பாட்டைத் திட்டமிட்டுச் சிதைத்து வருகின்றது.





இவற்றின் மூலம் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பைக் கனகச்சிதமாக நிறைவேற்றி வருகிறது. தென்னிலங்கைத் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினையை வெறுமனே பொருளாதாரப் பிரச்சினையாக மாத்திரமே உலகுக்குக் காட்டி வருகின்றார்கள்.

இலங்கைத் தீவில் இன்று ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்குத் தமிழ் மக்கள் மீது தொடுத்த யுத்தமே மூலகாரணம் ஆகும். மாறி மாறி ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் கடன் வாங்கி யுத்தத்தை முன்னெடுத்தமையே நாட்டைப் பொருளாதாரப் படுகுழிக்குள் தள்ளியது. ஆனால், இந்தக் கசப்பான உண்மையை ஏற்க எந்தத் தென்னிலங்கைத் தலைவர்களும் தயாராக இல்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் நாம் விட்ட தவறுகளைத் தொடர்ந்தும் இழைத்துக் கொண்டிருக்க முடியாது. இதனைக் கருத்திற் கொண்டே இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளராகப் பா. அரியநேத்திரன் நிறுத்தப்பட்டுள்ளார். அவர் தனிநபர் அல்ல. ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசத்தினதும் குரல். அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள சங்குச் சின்னத்துக்கு வாக்களிப்பதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒரே குரலில் ஓங்கி ஒலிப்போம் என்றும் தெரிவித்தார்.



# வடமராட்சி கிழக்கில் சங்கு சின்னத்திற்கு வலுக்கும் ஆதரவு!

தமிழ் பொது வேட்பாளருக்கான பரப்புரை நடவடிக்கைகள் வடமராட்சி கிழக்கில் அமோக ஆதரவுடன் வலுப்பெற்றுள்ளது.

சங்கு சின்னத்தில் போட்டியிடும் பா.அரியநேந்திரனை ஆதரித்து வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் கேவில், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி பகுதிகளில் 09.09.2024 அன்று பிரசார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.


தமிழ் பொது வேட்பாளருக்கான ஆதரவு வடமராட்சி கிழக்கு மக்கள் இடையே பெருகிவருவதால் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் இளைஞர்கள் சிலர் தாமாகவே முன்வந்து பொதுவேட்பாளருக்கான ஆதரவு பிரசாரத்தை மேற்கொண்டு வருவதுடன் வீடு வீடாக சென்று தமிழ் பொது வேட்பாளருக்கான தேவையை வலியுறுத்தியதுடன் துண்டுப்பிரசுரங்களையும் கையளித்தனர்.

கேவில், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி பிரதேசங்களை சேர்ந்த அதிகளவான மக்கள் பொது வேட்பாளருக்கான நியாயப்பாடை உணர்ந்துள்ளதாக முன்னாள் மணல்காடு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் கமலதாஸ் தெரிவித்துள்ளார்.



இதில் ஜனநாயக போராளிகள் கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள், முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள், மணல்காடு கிராம அபிவிருத்தி சங்க தலைவர், தாளையடிகடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க செயலாளர், இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அரிய வகை உயிரினமான நன்னீர் நாய் என மதிக்கத்தக்க உயிரினம் கல்முனையில் கண்டுபிடிப்பு



(10-09-2024)

நன்னீர் நாய் என மதிக்கத்தக்க உயிரினம் ஒன்று கடந்த சனிக்கிழமை (7) பிடிபட்டு பின்னர் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

குறித்த நன்னீர் நாய் என மதிக்கத்தக்க உயிரினம் அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகரில் உள்ள தனியார் வாகன திருத்தும் இடத்திற்கு வழி தவறி சென்ற நிலையில் பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பிடிக்கப்பட்ட நன்னீர் நாய் என மதிக்கத்தக்க உயிரினம் நீர்நாய் வகையைச் சேர்ந்தது ஆகும். (Smooth-coated Otter) இது தோற்றத்தில் பெரிய உடலை கொண்டிருக்கிறது.

இது பொதுவாக லெட்ரொகலே இனத்தின் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது இந்திய துணைக்கண்டத்திலும் மேலும் தென் கிழக்காசியப்பகுதியில் அமைந்துள்ள நாடுகளிலும் காணப்படுகிறது.

மற்ற நீர் நாய்களை விட அதன் மேல் உள்ள முடிகள் குறைவாகவும் மிருதுவாகவும் காணப்படுகிறது.

இவை ஆற்றில் நீந்தி மீன்களை பிடிக்க ஏதுவாக இவற்றின் கால்களில் வாத்துக்களுக்குப் போல விரலிடைத் தோல் உண்டு. இவற்றின் பட்டையான நீண்ட வாலானது துடுப்புபோல நீந்தப் பயன்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ‘ஆக்குவாய் காப்பாய்’ கனடியத் தமிழ்த் திரைப்படம்

- குரு அரவிந்தன் -




தமிழ்ப்படங்களைத் தயாரிப்பதில் இந்தியாவுக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தில் கனடா நாடு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் ஒன்றான கனடாவில் தயாரிக்கப்பட்ட “ஆக்குவாய் காப்பாய்” என்ற திரைப்படம் பற்றிய ஊடகச் சந்திப்பு சென்ற ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ரொறன்ரோ நகெட் அவென்யூவில் உள்ள பிறைமா நடனப்பள்ளி மண்டபத்தில் மாலை 7 மணியளவில் நடைபெற்றது. கனடாவில் இருந்து வெளிவரும் “தமிழ் ஆரம்”, “வதனம்” ஆகிய தமிழ் இதழ்களின் ஆசிரியர் என்ற வகையில் எனக்கும் அழைப்பு வந்தது. இந்தப்படம் கனடா நாட்டில் வசிக்கும் ஒரு தமிழ்ப் பெண்ணின் வாழ்க்கைப் போராட்டங்களை மையப்படுத்திய கதைக்கருவைக் கொண்டிருக்கின்றது.

லூனார் மோஸன் பிக்சர்ஸ் மற்றும் ஆர். புரொடக்ஸன்ஸ் இணைந்து தயாரித்த இந்தப் படம் கனடா எஸ். மதிவாசனின் எழுத்து, இயக்கத்தில் உருவாகி இருக்கிறது. இந்தத் தமிழ்ப்படம் செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி யோர்க் சினிமா திரையரங்கில் மதியம் ஒரு மணிக்குத் திரையிடப்பட இருக்கின்றது.



இதில் கதாபாத்திரங்களாக கிருந்துஜா ஸ்ரீகாந், ஜெயப்பிரகாஸ், டேனிஸ் ராஜ், செந்தில் மகாலிங்கம், மதிவாசன் சீனிவாசகம், சுரபி யோகநாதன், ஆஸ்லி சுரேஸ்குமார், ஆதியா தயாளன், தனிஸா, சுதர்ஸி இக்னேஸியஸ், ரிஸ ீத் தலீம், மார்க் டிபேக்கர், டாக்டர் கரு கந்தையா, டாக்டர் கதிர் துரைசிங்கம், டாக்டர் வரகுணன் ஆகியோரும் இந்தப் படத்தில் நடிக்கின்றனர். ஜீவன் ராம்ஜெயம் மற்றும் தீபன் ராஜலிங்கம் ஆகியோர் ஒளிப்திவு செய்திருக்கிறார்கள். ரியூ ஆர். கிருஸ்ணா இந்தப் படத்திற்கு இசை அமைத்திருக்கின்றார். மகாஜனா கல்லூரியின் பிரபல நாடக நடிகரும், வைத்திய கலாநிதியுமான கதிர் துரைசிங்கம் இந்தப் படத்தில் வைத்தியராகக் கௌரவப் பாத்திரம் ஏற்று நடித்திருக்கின்றார்.

இதன் மூலக்கதையைச் எழுத்தாளரும் நடிகருமான சகாப்தன் எழுதியிருக்கின்றார். இந்தக் கதையை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்த “ஆக்குவாய் காப்பாய்” என்ற நாடகம் மனவெளி கலையாற்றுக் குழுவினால் அரங்காடல் நிகழ்ச்சியில் ரொறன்ரோவில் இரண்டு காட்சிகளும், கனடா, மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் ரொறன்ரோவிலும், மொன்றியலிலும், லண்டன் மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் லண்டனில் ஒரு தடவையும் மேடையேற்றப்பட்டன.




மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் நாகமுத்து சாந்திநாதனின் நெறியாள்கையில், நாடகத்தில் சுமுதினி சக்திவடிவேல், தயாபரன் ஆறுமுகம், டாக்டர் கதிர்துரைசிங்கம், சகிலா தவராஜா ஆகியோர் நடித்திருந்தனர். புலம்பெயர்ந்த மண்ணில் கனடியத் தமிழர்கள் நாடகக்கலையைத் தொடர்ந்தும் தக்கவைத்திருப்பது பெருமைக்கும், பாராட்டுக்கும் உரியது.

கனடாவில் எனது “முள்ளுவேலி” என்ற சிறுகதையை வேலி என்ற பெயரில் மதிவாசன் தயாரித்து, நெறியாள்கை செய்த போது சிறந்த ஈழத்து நடிகரான அமரர் கே. எஸ். பாலச்சந்திரன் அதில் நடித்திருந்தார். இந்தப் படத்தின் திரைக்கதை வசனத்தை நான் எழுதியிருந்தேன். இதைத் தொடர்ந்து “சுகம் சுகமே”, “சிவரஞ்சனி” போன்ற இந்திய - கனடா கூட்டுத் தயாரிப்பான படங்களுக்கும் திரைக்கதை வசனம் எழுத எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.

“சுகம் சுகமே” என்ற படத்தின் சிறந்த திரைக்கதை வசனத்திற்காக ஜனகன் பிச்சேர்ஸ ாரின் விருதும் கிடைத்தது. சுகம் சுகமே படத்தில் டாக்டர் கதிர் துரைசிங்கமும் நடித்திருந்தார். தமிழ்ப்படங்களைத் தயாரிப்பதில் இந்தியாவுக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தில் கனடா நாடு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# ஜெனீவா கூட்டத்தொடரில் வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் பிரதிநிதிகள்





(09-09-2024)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடருக்காக வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா தலைமையிலான குழு சென்றுள்ளனர்.

அவர்கள் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜெனிவாவுக்கு புறப்பட்டு சென்றுள்ளனர். குறித்த குழுவில் வடக்கு கிழக்கு வழிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்க உப செயலாளர் மற்றும் வவுனியா மாவட்ட தலைவி ஆகியோர் விஜயத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத் தொடர் 9ம் திகதி அன்று முதல் ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

"இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்" என்ற தலைப்பிலான 51/1 தீர்மானத்தின் தற்போது வரையிலான உள்நாட்டு மனித உரிமைகள் நிலைமைகள் தொடர்பாக அமர்வின் முதல் நாளான 9ம் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு இலங்கை குறித்த விவாதமும் இடம்பெற்றது.

பிற்பகல் வரை நடைபெற்ற இந்த விவாதத்துக்கு பின்னர் 5 மணிக்கு இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடப்படும் பக்க நிகழ்வொன்றுக்கும் ஏற்பாடாகியுள்ளது.



# அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பொது வேட்பாளர் அரியநேந்திரனின் பிரச்சாரத்தின்போது பல இடையூறுகள்

(10-09-2024)

ஜனாதிபதி தேர்தலில் இம்முறை போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளர் அரிய நேந்திரன் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு நமக்காக நாம் எனும் தொனிப்பொருளில் 10-09-2024 அன்று தேர்தல் பிரசாரத்தை அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுத்திருந்தார்.

தனது பிரச்சாரத்தை முன்னெடுத்த சந்தர்ப்பத்தில் பல்வேறு பகுதிகளில் பொலிஸார் அவருடன் முரண்பட்டதனை அவதானிக்க முடிந்தது.

தனது பிரச்சாரத்தை பெரியநீலாவனை முருகன் கோயில் முன்றலில் இருந்து ஆரம்பித்த வேளை பூஜையில் ஈடுபட்டார்.

பின்னர் மற்றொரு பிரச்சார நடவடிக்கைக்காக செல்வதற்கு தயாராகி கொண்டிருக்கும் போது அங்கு வந்த பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் விசேட அதிரடிப்படையினரின் இடையூறினால் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

பின்னர் கல்முனை ஆர்.கே.எம் சந்தி கல்முனை தரவை பிள்ளையார் முன்றல் உள்ளிட்ட காரைதீவு கண்ணகி அம்மன் கோயில் பகுதியிலும் தேர்தல் பிரச்சாரத்தின் போது இவ்வாறு அழுத்தங்கள் தொடர்ந்ததுடன் பாதுகாப்பு தரப்பினரால் தீவிரமாக கண்காணிப்பிற்கு உள்ளானார்.





# சஜித்தை பிரேமதாசவைச் சூழ்ந்து பல ஊழல் அரசியல்வாதிகள் மற்றும் இனவாதிகள் உள்ள நிலையில் சஜித்துக்கு வாக்களிப்பது தமிழர் விரும்பும் ஆட்சி மாற்றத்தை கொண்டு வராது



ஜனாதிபதி தேர்தலில் சஜித்துக்கு ஆதரவளிக்க இலங்கை தமிழரசு கட்சி தீர்மானித்து உள்ள போதிலும் சஜித்துடன் இணைந்துள்ள தமிழருக்கு எதிரான சக்திகள் மற்றும் மோடியின் கூட்டாளிகள், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி சஜித்திடம் கையளிப்பது தமிழருக்கு உண்மையில் நன்மை அளிக்குமா என்ற பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு புறம் தமிழருக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்து வரும் தீவிர சிங்கள இனவாதியான பாட்டாளி சம்பிக்கவுடன் கூட்டணி அமைத்துக் கொண்டு சிங்கள இனவாதிகளை தென்பகுதி கூட்டங்களில் முன்னிலைப்படுத்தி சிங்கள மக்களின் வாக்குகளை பெற முயற்சிக்கும் சஜித் மறுபுறம் வடக்கு கிழக்கில் தமிழர் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில் தமிழரசுக் கட்சியினரையும் கிளிநொச்சியில் சமத்துவ கட்சியினரையும் முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் கடந்த காலங்களில் கோட்டாபய மற்றும் ராஜபக்சர்களுடன் இணைந்து தமிழருக்கு எதிரான கொடுமைகளுக்கு ஆதரவளித்த முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்தும் அனைத்து தரப்பினரதும் வாக்குகளை பெற முயற்சிப்பதனால் அவருடைய உண்மையான கொள்கை என்ன என்பதில் பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இன்னொரு புறம் அவர் தனது மேடைகளில் மோடி அரசாங்கத்தின் கல்வி மற்றும் அபிவிருத்தி திட்டங்களை போல இலங்கையிலும் பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க போவதாக தெரிவித்த போதிலும் இதுவரை மன்னாரில் அமைக்கப்படவிருக்கும் இலங்கையை சுரண்டும் அதானியின் காற்றாலை திட்டம் மற்றும் இலங்கை கடலில் நாள் தோறும் 350 மில்லியன் பெறுமதியான கடல் வளத்தை சுரண்டும் இந்திய மீனவர்களை நிறுத்த எடுக்கும் நடவடிக்கை குறித்து இதுவரை வாய் திறக்கவில்லை என்பதும் இந்திய முகவர்கள் சஜித்தின் வெற்றிக்காக செயல்படுவதும் சஜித் வெளிநாடுகளின் சுரண்டல்களில் இருந்து நாட்டையும் தமிழரையும் பாதுகாப்பாரா என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் அனுரா வெளிப்படையாக அதானியின் காற்றாலை திட்டத்தை நிறுத்துவேன் என்றும் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு இலங்கை கடலில் இந்திய மீனவர்களின் சுரண்டல்களை நிறுத்துவேன் என்று தெரிவித்துள்ள நிலையில் சஜித் இவை தொடர்பாக தனது நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.

அவ்வாறு அறிவிக்காத சூழ்நிலையில் சஜித்தை சூழவுள்ள கூட்டத்தில் பல ஊழல் செய்யும் அரசியல்வாதிகள் மற்றும் தமிழருக்கு எதிரான இனவாதிகள் உள்ள நிலையில் சஜித்துக்கு வாக்களிப்பது ஈழத்தமிழர் விரும்பும் ஆட்சி மாற்றத்தை கொண்டு வராது.

- Dr. முரளி வல்லிபுரநாதன் [9.9.2024]

# கனடா – பொற்கரங்கள் அமைப்பின் ஸ்தாபகர் விசு கணபதிப்பிள்ளையின் நிதி அனுசரணையில் பாடசாலை மாணவர்களுக்கான உதவித் திட்டங்கள்



கனடா - பொற்கரங்கள் அமைப்பின் ஸ்தாபகரும் சமூக சேவையாளருமான விசு கணபதிப்பிள்ளையின் நிதி அனுசரணையில் பாடசாலை மாணவர்களுக்கான உதவித் திட்டங்கள் அண்மையில் கல்முனை துரைவந்தியமேடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அதிபர் சு. செந்தில் தலைமையில் இடம்பெற்ற விழாவொன்றில் நிறைவேற்றப்பட்டன.

கனடாவில் வசிக்கும் உதவும் பொற்கரங்களின் ஸ்தாபகர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களின் பூரண நிதி அனுசரனையில் பாடசாலை மாணவர்களுக்கான கழுத்துப்பட்டி மற்றும் மாணவர்களுக்கான தேர்ச்சி அறிக்கைவழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக உதவும் பொற்கரங்களின் ஸ்தாபகர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்கள் சார்பாக வருகை தந்த திருமதி. ஜெயந்தி கனகசூரியம் அவர்களும், விசேட அதிதிகளாக பாடசாலையின் EPSI இணைப்பாளர் ஜனாப். அப்துல் ஹபில் அவர்களும் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களான மு. சாந்தகுமார், ஆ.லக்குணம்.அவர்களும் மற்றும் பழைய மாணவர்கள், கோயில் தலைவர், பெற்றோர்கள், நலனவவிரும்பிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.





மிகவும் அழகிய முறையில் ஏற்பாடு செய்யப்பெற்ற இந்த விழாவின் வெற்றிக்காக உழைத்த அனைவருக்கும் தொடர்ச்சியாக பல நற்காரியங்களை செய்து வரும் உதவும் பொற்கரங்களின் ஸ்தாபகர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் கனடா மனிதநேயக் குரல் அமைப்பினர் தமது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றனர்.

**- ARJUNE (Local Journalism Initiative Reporter-2 )**

இலங்கை செய்திகள் Sri Lanka News

# சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி மாதங்கியின் கின்னஸ் உலக சாதனை






சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் க.பொ.த சாதாரண தரம் பயிலும் மாணவியான மாதங்கி கனகசுந்தரம் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

வேகமாக அதிக எண்ணிக்கையான பாதணிகளை அடுக்குதல் என்னும் தலைப்பின் கீழான போட்டியிலேயே இந்த சாதனையை படைத்துள்ளார்.

இணையத்தளம் ஊடாக விண்ணப்பித்து 10 பாதணிகளை ஒன்றன் மேல் ஒன்றாக 59 செக்கன்களில் அடுக்கி முடித்தே குறித்த சாதனையை புரிந்துள்ளார்.

கடந்த மே மாதம் 20 திகதி கொடிகாமத்தில் தனது வீட்டில் இரு சாட்சிகள் முன்னிலையில் கின்னஸ் உலக சாதனை சட்டதிட்டங்களுக்கு அமைவாக குறித்த சாதனை நிகழ்வு காணொளியாக பதிவு செய்யப்பட்டு இணையத்தினூடாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

மூன்று மாதங்களின் பின் world guiness assesment commity மூலம் இதன் உண்மைத்தன்மை ஆராயப்பட்டு 28-8-2024 அன்று நிகழ்வு கின்னஸ் சாதனையாக அங்கீகரிக்கப்பட்டு அதற்கான சான்றிதழ் குறித்த மாணவிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த கின்னஸ் சாதனைக்கான விண்ணப்பம் முதல் அனைத்து விடயங்களையும் குறித்த மாணவியே தனது சுய முயற்சியில் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை கின்னஸ் சாதனை படைத்த மாணவியை அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரடியாக அழைத்து சாதனை சான்றிதழைப் பார்வையிட்டு பாராட்டியிருந்தார்.



# "தமிழ் பொது வேட்பாளர் என்பவர் எமக்கான உரிமைகளின் அடையாளமே அன்றி அவர் சிங்கள மக்களுக்கு எதிரானவரல்ல"

## - முன்னாள் தவிசாளர் நிரோஸ்

"தமிழ்ப் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டமை சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல. மாறாக இந்த நாட்டின் தேசிய இனங்களில் ஒன்றான தமிழ் மக்கள் வரலாற்று ரீதியில் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகள் இன்றும் தீர்க்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்கானது. இன்னொரு வடிவில் பார்த்தால் அவர் எமக்கான உரிமைக-ளின் அடையாளமே அன்றி அவர் சிங்கள மக்களுக்கு எதிரானவர் அல்ல".

இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழு உறுப்பினரும் முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து 10-09-2024 அன்று மாலை வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும், தமிழ்த் தேசியம் இன்று பலவாறாக அகத் துண்டாலுக்கு உட்பட்டு வருகின்றது. இது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வெளியுலகிற்கும் ஆட்சியில் அமர்பவர்களுடன் பேசுவதற்கும் அழுத்தம் கொடுப்பதற்கான நிலைமைகளை பலமிழக்கச் செய்து விடுமோ என்ற நியாயபூர்வமான அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளது. அவ் அச்சத்தில் நியாயபூர்வமான யதார்த்தம் உள்ளது. தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய இனமான நாம் எமது அரசியல் அபிலாசைகளை சாதாரண ஜனநாயக உரிமைகளுடன் மட்டும் மட்டுப்படுத்திவிடமுடியாது.

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் எந்தளவு தூரம் ஆட்சியில் அமரக்கூடிய ஒருவருக்கு ஆதரவு அளிக்கலாம் என்று சிலர் அல்லும் பகலும் அறைபோட்டு சிந்திக்கின்றனர். செயற்படுகின்றனர். அவர்கள் இந்த நாட்டில் வெல்லக்கூடிய ஒருவரை தேடிப்பிடித்து சலுகைகளைப் பெற்று பெற்று சகித்து வாழுவோம் என்ற என்ற மனநிலையில் இனத்தினை அடமானம் வைக்கின்றனர்.

நாட்டில் சிங்கள மக்கள் பெரும்பான்மையான எண்ணிக்கையில் வாழ்கின்றனர் என்பதற்காக எண்ணிக்கையில் குறைந்த அளவுடைய நாட்டின் தேசிய இனமான தமிழ் இனம் இன உரிமைகளை விற்று வாழ முடியாது. சிங்கள பேரினவாதிகளுக்கு நோகக்கூடாது என்று வாழ்பவர்கள் எம்மிடத்தில் அதிகரித்துவிட்டனர். முக்களின் இட்சியத்தினையும் தியாகத்தினையும் விற்றுப்பிழைப்பதில் முன்டியடிக்கின்றனர்.

மண்ணுக்காக எத்தனையோ தியாகங்களை எம் இனம் மேற்கொண்டிருக்கின்றது. ஆடிப்படையில், எமது மக்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்பதை வலியுறுத்தியும் எமக்கு சமஸ்டி அடிப்படையிலான உலகம் ஏற்றுக் கொண்ட அரசியல் தீர்வினை முன்வைக்கக் கோரியும் நாம் பொது வேட்பாளரை முன்நிறுத்திச் செயற்படுவது நியாயபூர்வமாகச் சிந்திக்கும் எந்தவொரு சிங்களப் பிரஜைக்கும் எதிரான வேலைத்திட்டம் கிடையாது. சிங்கள முற்போக்கு சக்திகளும் சொந்த தாய் நாட்டில் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகும் தமிழ் மக்களின் கருத்து வெளிபாட்டு உரிமைக்கும் ஜனநாயக உரிமைக்கும் மதிப்பளித்து வாக்களிக்க முடியும்.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் எமது அரசியல் அபிலாசைகளை தொடர்ந்தும் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இன்றும் உள்ள நிலையில் ஒருமித்து தமிழ் பொது வேட்பாளரின் சின்னமான சங்கு சின்னத்திற்கு வாக்களித்து தமிழ்த் தேசியக் கடமையினை நிறைவேற்றுவோம் என ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினரும் முன்னாள் பிரதேச சபைத் தவிசாளருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

# கனடாவில் இருந்து காணி வாங்க சென்றவரின் 85 இலட்சம் ரூபாவை திருடிவிட்டு கம்பி நீட்டிய "கிளிநொச்சித் தரகர்"!

காணி வாங்குவதற்காக கனடாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்த புலம்பெயர் நபர் ஒருவரின் 85 இலட்சம் ரூபாய் பணத்தினை தரகர் திருடிச் சென்ற சம்பவம் ஒன்று யாழில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில், கனடாவில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற குறித்த நபர் தெல்லிப்பழையில் தங்கி இருந்துள்ளார். இந்நிலையில் காணி ஒன்றினை கொள்ளளவு செய்வதற்காக தரகர் ஒருவருடன் தொடர்பினை பேணி அவரோடு பல இடங்களுக்கு பயணித்துள்ளார்.

கிளிநொச்சியை சேர்ந்த குறித்த தரகர், கனடாவில் இருந்து சென்றவரின் 85 இலட்சம் ரூபாவினை திருடிச் சென்றுள்ளார். குறித்த புலம்பெயர் நபர் நான்கு நாட்களின் பின்னர் தனது பணத்தினை தேடிப் பார்த்துவிட்டு பணத்தினை காணாத நிலையில் அதிர்ச்சி அடைந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளார். இதுகுறித்து விசாரணைகளை தெல்லிப்பளை பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கீரிமலை பிரதேசத்தில் பாரிய அளவிற்கு நிலம் பறிபோகும் அபாயம். இரகசியமாக அளவீடுகள் முடிந்தன

(கனடா உதயன் பிரத்தியேகச் செய்தி)
- நடராசா லோகதயாளன்

யாழ்ப்பாணம் கீரிமலை ஜனாதிபதி மாளிகைப் பிரதேசம் சடையம்மா சமாதியுடன் சுவீகரிக்கும் நோக்கில் இரகசியமான முறையில் நில அளவீடு மேற்கொண்டு வரைபடம் பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கீரிமலையில் பொது மக்களிற்குச் சொந்தமான நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகையும் அதனை அண்டிய நிலம் முழுவதனையும் நில சுவீகரிப்பின் முதல் அங்கமாக அப் பகுதியை நில அளவைத் திணைக்களத்தின் தலைமைப் பணிமனை அதிகாரிகள் கொழும்பில் இருந்து வருகை தந்து அளவீட்டினை மேற்கொண்டு அதன் வரை படத்தினை தெல்லிப்பளை பிரதேச செயலாளரிடம் தற்போது கையளித்துள்ளனர்.

ஜனாதிபதி மாளிகை உள்ளடங்களாக 6 ஏக்கர் நிலம் அளவீடு செய்யப்பட்டு வரைபடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு அப்பகுதி காணிகளின் பெயர் பொன்னுப்புதுக்காடு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலத்தின் உரிமையாளர்களை தெரியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அரச காணிகளும் உள்ளடங்குவதாகவும் காணிகளின் எல்லைகள் படை முகாம் எனவும். குறப்பிடப்பட்டு 2024-08-29 அன்று நில அளவைத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஒப்பமிட்டுள்ளார்.



கீரிமலை ஜனாதிபதி மாளிகை தனியார் பல்கலைக் கழகத்திற்கு வழங்க ஏற்கனவே இரகசியமான முறையில் ஒப்பந்தம் மேற்கொளளப்பட்ட பின்பு சுவீகரிப்பு பணி துரிதப்படுத்தப் பட்டுள்ளது.

இதேநேரம் தையிட்டி விகாரைப் பகுதி இரகசியமாக அளவீடு செய்து வரைபடம் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# 3ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 09 - 09 - 1933

அரன் அடியில்: 16 - 09 - 2021



திதி: 14-09-2024

## அமரர்.
## திருமதி. டாக்டர் அன்னபூரணம் ஞானசம்பந்தர்

எமை ஈன்றெடுத்த எம் அன்புத் தாயே
உங்கள் இன்முகம் தான் எங்கேயம்மா
இவ்வுலகில் எமை விட்டுப் பிரிந்து
ஆண்டு மூன்று ஆனதே அம்மா

பாசத்தை நமக்கு ஊட்டி வளர்த்த
பண்பான எம் அன்னையே
கண்ணின் இமையானீர் அன்று
எம் கண்ணீரின் கதையானீர் இன்று

எங்கள் பாச ஒளிவிளக்கே
மூன்று ஆண்டு மறைந்தாலும் உங்கள் முகம்
எம் நெஞ்சை விட்டு என்றும் அகலாது அம்மா
தெய்வமே எமை விட்டு சென்றதெங்கே

ஏங்கித் தவிக்கின்றோம், ஏமாந்து போகின்றோம்
மீண்டும் ஓர் பிறப்புண்டேல்
உமக்கே பிள்ளைகளாய் பிறப்போம் அம்மா
வாரும் அம்மா ஒரு முறையேனும் எங்களிடம்....

அன்னையின் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.

ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தொடர்புகளுக்கு: சந்திரகுமார் (மகன்) - 1(613) 266-0411
சுமதி (மகள்) - (416) 627-7202

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL




**RESIDENTIAL- COMMERCIAL**

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN** Subramaniam

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமம் நெல்லியடி பாடசாலைக்கு 550,000 ரூபாவில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம்!

பு. கஜிந்தன்



நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமம் ரூபா 550,000 நிதிப் பங்களிப்பில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் ஒன்று பொருத்தப்பட்டு பொறுத்தப்பட்டு 12-09-2024 அன்று காலை பாடசாலை சமூகத்திடம் சம்பிரதாயபூர்வமாக கையளிக்கப்பட்டது.

பாடசாலை முதல்வர் நாகராஜா ரவீந்திரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் கலந்துகொண்டு சுத்திகரிப்பு குடிநீர் தொகுதியை திறந்துவைத்து கையளித்தார்.

இவ் நிகழ்வில் மருத்துவர் திரு. செந்தில்குமரன், பாடசாலை பழைய மாணவர் சங்க நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் ஆச்சிரம தொண்டர்கள் என பெருமளவானோர் பங்கு கொண்டனர்.







இதேவேளை வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய திருவிழாவை முன்னிட்டு, பெரியாழ்வார் அன்னதான மடம், ஆதிமூல லஷ்சுமி ஈசான அன்னதான மடம், பரந்தாமன் ஆச்சிரமம் என்பனவற்றிற்கு அன்னதானப் பொருட்களாக 1500 கிலோ அரிசி, 225 கிலோ பருப்பு, 150 கிலோ சீனி, 60 லீற்றர் மரக்கறி எண்ணை, 75கிலோ உள்ளி, 15 கிலோ அப்பளம், 50 கிலோ சோயா, 250 தேங்காய் மற்றும் மரக்கறி வகைகள் என்பன நேற்றையதினம் சந்நிதியான் ஆச்சிரமத்தால் கையளிக்கப்பட்டது.

# தற்போதைய சூழலில் மக்களுக்கு ரணிலின் எரிவாயு சிலிண்டர் சின்னத்தின் வெற்றியே அவசியமாகும் என்று ஏமாற்றும் அமைச்சர் டக்ளஸ்!



தற்போதைய சூழலில் நாட்டு மக்களுக்கு ரணிலின் எரிவாயு சிலிண்டர் சின்னத்தின் வெற்றியே அவசியமாகும் என ரணிலின் தயவில் தொடர்ச்சியாக அமைச்சர் அந்தஸ்த்தோடு பயணித்து வரும் டக்ளஸ் ஏமாற்று வார்த்தைகளை அள்ளி வீசி வருகின்றார்.

நாட்டினதும் தத்தமதும் எதிர்காலம் கருதியும் மக்கள் ஒவ்வொருவரும் சிந்தித்து தெளிவுடன் தமது வாக்குகளை ரணில் விக்ரமசிங்கவுக்கு வழங்கவார்களாயின் அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்குள் சிறப்பான பொருளாதாரத்துடன் கூடிய வாழ்கை கட்டமைப்பு உருவாக்கிக்கொள்ள முடியும் என தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கிடைத்துள்ள இத்தகைய சந்தர்ப்பத்தை எமது மக்கள் தவறவிடமாட்டார்கள் என்றும் அவர் தனது ஏமாற்று வார்த்தைகளை அள்ளி எறிந்து வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் 12.09.2024 அன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்த அமைச்சர் மேலும் கூறுகையில்:

ரணில் விக்கரமசிங்கவின் அனுபவம் அவருக்குள்ள சர்வதேச நாடுகளுடனான உறவு மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் வல்லமை அகியவற்றை கொண்டு அவரே தொடர்ந்தும் இந்த நாட்டை வழிநடத்த வேண்டும் என்பதே நாட்டிலுள்ள அநேகரது விருப்பாக உள்ளது.

அதேபோன்று ஒவ்வொரு வீட்டிலும் இன்று எரிவாயு அத்தியாவசியமான பொருளாக இருக்கின்றது. அதேபோலத்தான் இன்றைய நாட்டின் சூழ்நிலைக்கும் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் ரணில் விக்ரமசிங்கவின் வெற்றி அவசியமாக இருக்கின்றது.

எனவே வரவுள்ள 21 ஆம் திகதி நடைபொறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஒவ்வொரு மக்களும் ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிசெய்யும் வகையில் அவரது சின்னமான எரிவாயு சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களிப்பது அவசியமாகும்.

இதை நான் வெறும் வாக்குகளை பெறுவதற்காக கூறவில்லை. உங்கள் ஒவ்வொருவரதும் எதிர்காலத்தை மட்டுமல்லாது நாட்டையும் ஒளிமயமாக்கும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வெற்றிகொள்ள வைக்கும் ஆளுமை அவரிடமே இருக்கின்றது என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் கடந்தகால வரலாற்றை எடுத்துக்கொண்டால் ஆரம்பதிலிருந்து ஈ.பி.டி.பி சரியான வழிகாட்டலை செய்து வந்துள்ளது.

எமது கொள்கையும் வழிமுறையும் சரியானதாக இருப்பதை கண்டு அதுதான் வெற்றி அடையப் போகின்றது என்ற உண்மையை உணர்ந்த சக தமிழ் கட்சிகளும் குழுக்களும் அச்சம் கொண்டு தமிழ் தேசிய கூட்மைப்பு என்ற ஒன்றை கட்டமைத்து அரசியல் செய்தார்கள்.

ஆனால் சக தமிழ் கட்சிகளிடம் நிலையான கொள்கை ரீதியாக எந்தவொரு வேலைத் திட்டமோ அதற்கான பொறிமுறையோ இருக்கவில்லை. அது தொடர்பாக அக்கறையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை.

இதனிடையே கடந்த 10 ஆம் திகதி கிளிநொச்சியில் வரலாறு காணாத வகையில் மக்கள் திரட்சியை ஈ.பிடி.பி செய்து காட்டியுள்ளது. இது பலருக்கு வயிற்றில் புளியை கரைக்க ஆரம்பித்துவிட்டது.

இதனால் எம்மீது சேறுபூசல்களையும் அவதூறுகளையும் செய்ய முயற்சிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

ஆனால் ஈ.பி.டி.பியினராகிய நாம் சரியான வேலைத்திட்டங்களையும் கொள்கைகளையும் வைத்திருந்தோம். இதனால்தான் எம்மை மளுங்கடிப்பதற்காக பல்வேறு சேறுபூசல்களை மேற்கொண்டார்கள்டு வந்தார்கள்.

இதேநேரம் எமது கொள்கைகளும் வழிநடத்தலும் சரியானதாக இருந்துவருகின்றமையால்தான் இம்முறை ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களிக்குமாறு மக்களிடம் குறிப்பாக தமிழ் மக்களிடம் நான் அறைவுவல் விடுக்கின்றேன்.

அதுமட்டுமல்லாது ரணிலின் வெற்றியினூடாகத்தான் மக்களின் அபிவிருத்தியோ அன்றாட பிரச்சினையையோ அரசியலுரிமை சார் பிரச்சினைகளுக்கோ தீர்வை எட்ட முடியும் இதுவே உண்மையும் கூட என்றும் அவர் அப்பட்டமான பொய்களை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கட்சியின் கேடயத்தை இழந்தார் கிளிநொச்சி சந்திரகுமார்

- நடராசா லோகதயாளன்

சந்திரகுமார் தலைமையிலான அரசியல கட்சியின் பதிவு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையிலான சமத்துவக் கட்சியானது 3 வருடங்களின் முன்பு ஓர் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக தேர்தல்கள் ஆணைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட அரசியல் கடசியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட காலம் முதல் இன்றுவரை கட்சியின் நிதி அறிக்கையை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கட்சி சமர்ப்பிக்கவில்லை. கணக்கு அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு 3 தடவைகள் கடிதம் அனுப்பியும் பதில் அளிக்காத காரணத்தினாலேயே தற்போது தேர்தல்கள் ஆணைக்குழு சமத்துவக் கட்சியின் பதிவினைநீக்கியுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவினால் ஜனாதிபதித் தேர்தலிற்காக 2024-07-29 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச இதழில் நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டியலில் சமத்துவக் கட்சி உட்பட 78 கட்சிகளின் பெயர் வெளியிடப்பட்டுள்ளது. இதேநேரம் எம்பிலிப்பிட்டிய உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பின் பின்னர்

2024-08-26 அன்று தேர்தல்கள் ஆணைக் குழுவினால் வெளியிட்ட 2399/14 இலக்க அரச இதழில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டியலில் சமத்துவக் கட்சியின் பெயர் நீக்கப்பட்டு 77 அரசியல் கட்சியின் பெயர் பட்டியலே வெளியிடப்பட்டுள்ளது.

முருகேசு சந்திரகுமார் தலைமையிலான அரசியல் கட்சி ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் சின்னமாக கேடயம் அனுமதிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழ் மக்கள் அனுராவுக்கு வாக்களிக்குமாறு "மாற்றத்துக்கான தமிழ் மக்கள்" அமைப்பு கோரிக்கை

கனகராசா சரவணன்




தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலில் அனுர குமார திசாநாயக்க ஆதரவு வழங்கி வாக்களிக்க வேண்டும் என மாற்றத்துக்கான தமிழ் மக்கள் அமைப்பு ஞாயிற்றுக்கிழமை (08) கோரிக்கை விடுத்துள்ளதுடன் நாங்களும் ஆதரவு வழங்குவதாக அதன் தலைவர் சுப்பிரமணியம் கமலேஷ்வரன் (கமலி) தெரிவித்தார்.

மட்டு ஊடக அமையத்தில் 08-09-2024 அன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் தற்போது மக்கள் மத்தியில் மாற்று அரசியலை கொண்டு வரவேண்டிய தேவை இருக்கின்றது அதனடிப்படையில் நாங்கள் தன் எழுச்சியாக இந்த தீர்மானத்தை எடுத்துள்ளோம்.


நாடு சுதந்திரமடைந்த பின்னர் அரசியல் காரணங்களுக்காக ஜே.வி.பி புரட்சியின் பின்னர் தமிழ் தேசிய போராட்டம் ஏற்பட்டது இற்கு எல்லாம் இந்த நிர்வாககட்டமைப்பு (சிஸ்ரம்) தான் காரணம் எனவே இது மாற்றப்படவேண்டும். எனவே இந்த வாக்குவங்கி அரசியல் இலாபகரமான சூழலாக மாறியதுதான் காரணம் இதனை நாங்கள் தொடரமுடியாது இதனை முடிவுக்கு கொண்டுவரவேண்டும்.

எனவே இந்த பாரம்பெரிய அரசியலை தோற்கடிக்க இந்த ஜனாதிபதி வேட்பாளர் அனுரவை கொண்டுவரவேண்டும் அதற்காக வாக்களியுங்கள். எனவே இது அரசியல் இலாபத்துக்காக தூண்டப்படுகின்ற பிரச்சனை நாட்டை பிரித்து கொடுத்தாலும் தமிழ் சிங்களம் என சண்டை பிடிக்கத்தான் போகின்றனர் எனவே தீர்வு என்றதை விட ஜே.வி.பி கட்சி இந்த நாட்டில் ஒரு சமத்துவத்தை வழங்குவதன் மூலம் இனவாதத்தை நிற்பாட்ட முடியும்.

ஒரு இன மக்களின் இனப்பரம்பலை குறைப்பதற்கான குடியேற்ற திட்டமும் சரி இருக்கின்றதை அழிப்பதும் ஒரு இனழிப்புதான். அதேவேளை வடக்கு கிழக்கு இணைப்பு சாத்தியமா என சந்தேகம் இருக்கின்றது அதேவேளை ஜே.வி.பி வடக்கு கிழக்கை பிரித்ததில் எனக்கு உடன்பாடு இல்லை மாகாணசபை முறைமையை ஜே.வி.பி. ஏற்றுக் கொண்டுள்ளது ஜே.வி.பி. ஜனநாயகமுறையை பின்பற்றும் நிலைக்கு வந்துள்ளது எனவே வடகொரியாவை வைத்துக் கொண்டு அந்த முகத்தை பார்க்கவேண்டாம் ஆகவே தமிழ் மக்கள் அனுரவுக்கு வாக்களிக்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன் என்றார்.

# பொது வேட்பாளரும் இந்தியாவும்

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -



பொது வேட்பாளரை முதலில் இந்தியாவின் ப்ரொஜெக்ட் என்று அழைத்தார்கள். பொது வேட்பாளர் என்ற கருத்துருவத்தை முதலில் வைத்த மு.திருநாவுக்கரசு தமிழகத்தில் தங்கியிருப்பதனால், அவர் இந்தியாவின் ஆள் என்ற சந்தேகம். அவருக்கு நெருக்கமாக இருந்தவர்கள் பொது வேட்பாளர் என்ற கருத்துருவத்தை தொடர்ந்து வளர்த்துச் சென்றபடியால் அதுவும் இந்தியாவின் வேலையாக இருக்கலாம் என்ற சந்தேகம். இம்முறை தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னரே சுரேஷ் பிரேமச்சந்திரன் அந்த விடயத்தை கையில் எடுத்தார். அதனால் அது இந்தியாவினுடையதாகத் தான் இருக்கலாம் என்ற சந்தேகத்தை முன் வைத்தவர்கள் மேலும் உஷாரானார்கள். அதன் பின் யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஒரு காணொளி ஊடகம் அந்த விடயம் தொடர்பாக கருத்தரங்குகளை நடத்தியது. அந்தக் காணொளி ஊடகத்தால் உருவாக்கப்பட்ட ஒரு குடிமக்கள் சமூகத்தின் பிரதானியாக இருப்பவர் 13ஆவது திருத்தத்தை தொடர்ச்சியாக ஆதரித்து வருபவர். அவர் அதை வெளிப்படையாகத்தான் செய்கிறார். எனவே அந்த சிவில் சமூகம் இந்த விடயத்தைக் கையில் எடுத்த காரணத்தால் அது இந்தியாவினுடைய வேலையாகத் தான் இருக்க வேண்டும் என்ற சந்தேகம் மேலும் அதிகரித்தது.

மேற்சொன்ன விடயங்கள் அவ்வளவும் போதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு. எதுக்கெடுத்தாலும் அது இந்தியாவின் சதி என்று குற்றம் சாட்டும் அக்கட்சியானது, பொது வேட்பாளர் விடயத்தை இந்திய அடிவருடிகளின் வேலை தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றது.

அதே சமயம் பொது வேட்பாளரைக் கண்டு பயப்படும் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணியானது அதனை வேறு விதமாக அணுகியது. சுமந்திரன் இந்தியத் தூதுவரை சந்தித்து பொது வேட்பாளர் தொடர்பாகவும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும் அவர் தெரிவித்த கருத்துக்களை அவருக்கு விசுவாசமான பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வெளியே கொண்டு வந்தார். அந்தச் செய்திகள் யாவும் இந்தியா பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை தென்னிலங்கையில் உள்ள யாரோ ஒரு வேட்பாளரோடு பேச்சுவார்த்தைக்கு போகுமாறு கேட்கிறது என்பதைச் சாராம்சமாகக் கொண்டிருந்தன.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் இலங்கைக்கு வந்த எந்த ஒரு இந்திய பிரதானியும் இதுவரை பொது வேட்பாளருக்கு ஆதரவாக கருத்து தெரிவிக்கவில்லை என்பதே தொகுக்கப்பட்ட அவதானிப்பு ஆகும்.

தமிழரசு கட்சிக்குள் சிறீதரன் அணி பொது வேட்பாளரை வலிமையாக ஆதரிக்கிறது. சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையிலான மோதலுக்குள் பொது வேட்பாளர் எப்பொழுதோ சிக்கிவிட்டார். இந்நிலையில் சிறீதரனை பலவீனப்படுத்துவதற்கும் பொது வேட்பாளரைப் பலவீனப்படுத்துவதற்கும் இந்தியா பொது வேட்பாளர் என்ற தெரிவைக் குறித்து மகிழ்ச்சியாக இல்லை என்ற செய்தியை சுமந்திரனுக்கு நெருக்கமான பத்திரிகைகள் அடிக்கடி பிரசுரித்தன.

இந்திய ராஜதந்திரிகள் மற்றும் பிரதானிகளின் கருத்துக்களை பொது வேட்பாளருக்கு எதிராக வியாக்கியானப் படுத்துவதில் சுமந்திரனுக்கு ஆதரவான பத்திரிகைகள் தீவிரமாக உழைத்தன.

ஆனால் இந்த இடத்தில் அப்பாவித்தனமான ஒரு கேள்வி எழும். பொது வேட்பாளர் இந்தியாவின் ப்ரொஜெக்ட் என்றால் பிறகு ஏன் இந்திய ராஜதந்திரிகளும் பிரதானிகளும் அவ்வாறு கருத்து தெரிவிக்கின்றார்கள்?

கடந்த வாரத்துக்கு முதல் வாரம் இந்திய பாதுகாப்புத்துறை ஆலோசகர் அஜித் டோவால் கொழும்புக்கு வந்திருந்தார். அவர் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்திருந்தார். அச்சந்திப்பின் போது அவர் பொது வேட்பாளருக்கு எதிராக கருத்து தெரிவித்ததாக செய்திகள் வெளிவந்தன. சந்திப்பில் தமிழ்த் தேசியப் பொதுக்கூட்டமைப்பு அதாவது பொது வேட்பாளரை முன்னிறுத்தும் பொது கட்டமைப்புக்குள் அங்கும் வகிக்கும் கட்சிகளும் கலந்து கொண்டன. எனவே அக்கட்சிகளுக்கும் அவர் சொன்ன செய்தி அதுதான். இந்தியா பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை என்பதனை அவர்கள் மறைமுகமாக உணர்த்த முற்படுகின்றார்கள். இந்தியாவின் பாதுகாப்புத்துறை ஆலோசகர் அவ்வாறு கூறிய பின்னரும் அது இந்தியாவின் ப்ரொஜக்ட்தான் என்று நம்புகிறவர்கள் இப்பொழுதும் நாட்டில் உண்டு.

இந்த விடயத்தோடு தொடர்புடைய மற்றொரு சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் அதிகாரிகள் கிளிநொச்சிக்குச் சென்றார்கள். அங்கு அவர்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகிய சமத்துவ கட்சியின் தலைவர் சந்திரகுமாரை சந்தித்திருக்கிறார்கள். அதன்பின் ஒரு தொகுதி ஊடகவியலாளர்களையும் சந்தித்திருக்கிறார்கள். மேற்படி சந்திப்பானது சிறீதரனுக்கு சில செய்திகளை உணர்த்தும் நோக்கிலானது என்று அரசியல் வட்டாரங்களில் ஊகிக்கப்படுகின்றது. சிறீதரனுடைய பலமான கோட்டை ஆகிய கிளிநொச்சியில் அவருடைய அரசியல் எதிரியான சந்திரக்குமாரை அவருடைய அலுவலகத்திலேயே இந்தியத் துணைத் தூதுவர் தேடிச்சென்று சந்தித்து அவருக்கு ஒரு அந்தஸ்தை கொடுத்தமை என்பதும், சந்திப்பின்போது சஜித் பிரேமதாசாவை ஆதரிக்குமாறு சூசகமாக வலியுறுத்தியமை என்பதும் சிறீதரனுக்கு சில விடயங்களை உணர்த்தும் நோக்கிலானவை. அதாவது பொது வேட்பாளரின் விடயத்தில் இந்தியா ஆதரவாக இல்லை. எனவே பொது வேட்பாளருக்கு எதிராக சஜித்தை ஆதரிக்கும் சந்திரகுமாரை தேடிச் சென்று சந்தித்ததன் மூலம் இந்தியா அதன் நிலைப்பாட்டை சிறீதரனுக்கு மறைமுகமாக உணர்த்த முற்படுகின்றது.

எனினும் அச்செய்தி வெளிவந்த பின்னர்தான் சிறீதரன் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சியில் ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அவருடைய கட்சி செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்ட அந்த கூட்டத்தில் மாவட்டத்தில் எவ்வாறு பொது வேட்பாளருக்கு ஆதரவான பணிகளை திட்டமிட்டுப் பரவலாக்கலாம் என்பது தொடர்பாக ஆராயப்பட்டது. அதாவது சிறீதரன் பொது வேட்பாளரின் விடயத்தில் தொடர்ந்து உறுதியாக நிற்கிறார் என்ற செய்தி அந்த கூட்டத்தில் உண்டு.

மேலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் சிறீதரனுக்கு அடுத்தடுத்த நிலையில் உள்ள முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர் வேழமாலிகிதன் கலந்து கொண்டார். அக்கூட்டத்தில் அவர் உரையாற்றினார். அதுவும் பொது வேட்பாளர் தொடர்பில் சிறீதரன் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை என்பதனை வெளிப்படுத்தியது.

இந்த விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு இப்பொழுது ஓரளவுக்கு வெளிப்படையாகத் தெரிய தொடங்கிவிட்டது. ரணில் விக்கிரமசிங்க புத்திசாலி; தந்திரசாலி; முதிர்ச்சியானவர். அவர் மீது நேரடியாக போர்க் குற்றச்சாட்டுகள் இல்லை. அதனால் அவர் எல்லாப் பேரரசுகளையும் சம தூரத்தில் வைத்துச் சமாளிக்கக் கூடியவர் என்பது ஒரு பொதுவான அவதானிப்பு ஆகும். அவ்வாறு எல்லா நாடுகளையும் சம தூரத்தில் வைத்துக் கையாளக்கூடிய ஒரு தலைவர் தெரிவு செய்யப்படுவதை இந்தியா விரும்பவில்லை என்பது ஏற்கனவே நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்க வை ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்கான தேர்தல் நடந்த பொழுது தெரிய வந்தது. அதில் இந்தியா ரணிலுக்கு எதிராக நின்ற டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்குமாறு தமிழ் கட்சித் தலைவர்களை கேட்டிருந்தது.

எனவே ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு இப்பொழுது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது. தென்னிலங்கையில் உள்ள யாரோ ஒரு பிரதான வேட்பாளரைத்தான் தமிழ்த் தரப்பு ஆதரிக்க வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடாகும். கடந்த சில வார கால நகர்வுகளைத் தொகுத்துப் பார்த்தால் இந்தியா வெளிப்படையாகவே சஜித்தை ஆதரிக்குமாறு கேட்கிறது என்று தெரிகிறது. அப்படியென்றால் இந்தியா பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை என்று பொருள். அப்படியென்றால் பொது வேட்பாளர் இந்தியாவின் ப்ரொஜக்ட் என்று கூறுபவர்கள் இப்பொழுது என்ன சொல்லப் போகிறார்கள்?

இந்தியாவே பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை என்று தெரிந்த பின்னரும் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் அணியை இந்தியா இயக்குகிறது என்று கூறுவது எந்த வகை அறிவியல்?

அதைவிட மேலும் ஒரு ஆழமான கேள்வியை இங்கு கேட்கலாம். உலகில் உள்ள எந்த ஒரு பேரரசும் அயலில் உள்ள சிறிய இனத்தை அல்லது நாட்டை ஒற்றுமைப்படுத்த விரும்புமா? அல்லது "டிவைட் அண்ட் ரூல்" என்று ஆங்கிலத்தில் கூறப்படுவது போல பிரித்துக் கையாள முயற்சிக்குமா? இந்தப் பூமிப் பந்தில் சிதறிப் போய் இருக்கும் ஒரு சிறிய மக்கள் கூட்டத்தை ஒற்றுமைப்படுத்தும் செயல்பாடுகளை பக்கத்து பேரரசு ஒன்றின் சதி வேலை என்று சந்தேகிக்கும் புத்திசாலிகள் ஈழத்தமிழர்கள் மத்தியில் மட்டும் தான் இருக்கிறார்களா? இவர்களை யாராவது நல்ல மனநல மருத்துவரிடம் கூட்டிக்கொண்டு போக மாட்டார்களா?

---

### வீணாவின் கவிக்கணை

தீயுக்குள் விரலை வைக்க
ஆசைப்பட்டேன்
அது சுடும் என்ற அறிவு
இல்லாததால்,
சுட்டதும் எடுத்துவிட்டேன்
கையை
பட்டதும் உணர்ந்துவிட்டேன்
மெய்யை
உணர்ந்ததை உணர்ந்த
பின் அறிந்தேன்,
பட்டுத்தெளிவது தான்
வாழ்க்கையென்று.

# ஜனாதிபதித் தேர்தலால் வீதிக்கு வந்த “வீடு”




**“தலைவர் மாவை சேனாதிராஜா ரணிலுக்கு ஆதரவு, எதிர்காலத் தலைவர் ஸ்ரீதரன் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு, தலைவர் போட்டியில் தோல்வியடைந்த சுமந்திரன் சஜித்துக்கு ஆதரவு, துணைத் தலைவர் சிவஞானம் சஜித்துக்கு ஆதரவு. ஆனால் மேடையேற மாட்டார். மத்தியகுழு உறுப்பினர் அரியநேத்திரன் தமிழ் பொது வேட்பாளர். இதுதான் இன்றைய தமிழரசுக்கட்சி. இந்தக்கட்சியை தமிழ்மக்கள் நம்பினால் தந்தை செல்வா சொன்னதுபோல் “தமிழ் மக்களை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்.” ஆனால் தமிழரசுக்குள் தேசியத்துக்கு எதிரானவர்கள் இருக்கும்வரை தமிழரசுக் கட்சியை கடவுளாலும் காப்பாற்ற முடியாது”**

---------------------------------------------------------------- - **கே. பாலா**

ஒரு வீட்டுக்குள் நடக்கும் பிரச்சினைகள், பிணக்குகள் பிளவுகள் வீதிக்கு வந்தால் சந்தி சிரித்து விடும் என்பார்கள். அதேபோன்றுதான் இன்று தமிழ் தேசியத்தின் தாய்க் கட்சி என பெருமை மட்டும் பேசிக்கொள்ளும் இலங்கை தமிழரசுக்கட்சியின் “வீட்டுக்குள்” நடக்கும் தலைக்கன அரசியல், தான்தோன்றித்தன அரசியல், காட்டிக்கொடுப்பு, கழுத்தறுப்பு அரசியல்” கூட இருந்தே குழிபறிக்கும் அரசியல், ஆமாம் சாமி போடும் அரசியல், அல்லக்கை அரசியல், முதுகெலும்பு இல்லாத அரசியலால் நடக்கும் சண்டையால் தமிழ் மக்கள் மட்டுமன்றி முழுநாடும் பார்த்து கைகொட்டி சிரிக்குமளவுக்கு “வீடு” இன்று வீதிக்கு வந்துள்ளது.

ஒரு வீட்டுக்குள் கூட்டுக் குடும்பம் இருந்தால் மாமாவுக்கும் மருமகனுக்கும் அல்லது மாமிக்கும் மருமகளுக்கும் எட்டாப்பொருத்தம் இருக்கும். அல்லது மச்சான்மார், மச்சாள்மாருக்குள் பிணக்குகள் இருக்கும். இல்லாதுவிட்டால் குழந்தைகளினாலாவது பெரியவர்களுக்கிடையில் பிரச்சினைகள் ஏற்படும். அந்த வகையில்தான் இன்று தமிழரசுக்கட்சியின் வீட்டுக்குள்ளும் தமிழ் தேசியத்துக்கு எதிரான சுமந்திரன் அணி, தமிழ் தேசியத்துக்கான ஸ்ரீதரன் அணி என இரு அணிகளுக்கிடையில் நடக்கும் பனிப்போரினால் “வீடு” அதகளப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஒரு வீட்டுக்கு நல்லதொரு ஆளுமையுள்ள குடும்பத் தலைவன் இருந்தால்தான் அந்த வீட்டில் இருப்பவர்களை அயலவர்கள். ஊர்மக்கள் மதிப்பார்கள், ஆனால் தமிழரசுக்கட்சியின் வீட்டுக்கு “பல்டி” அடிக்கும் அதுவும் சாதாரண “பல்டி” அல்ல “அந்தர் பல்டி” அடிக்கும் ஒரு தலைவர், பிள்ளைகள் செய்யும் குற்றங்களை தந்தைக்கு மறைத்து பிள்ளைகளை இன்னும் தவறு செய்யத்தூண்டும் மனைவிபோல் இருக்கும் துணைத் தலைவர் போன்றவர்களினால்தான் தடி எடுத்தவன் எல்லாம் சண்டைக்காரன்போல் தமிழரசுக்கட்சியினர் நடந்து கொள்கின்றனர்.

இவ்வாறான நிலையில்தான் எந்த ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பது என்பது தொடர்பில் முடிவெடுக்க தமிழரசின் மத்திய குழு கூட்டப்பட்டது ஆனால் இந்த மத்தியகுழுக்கூட்டத்தில் தலைவர் மாவை சேனாதிராஜாவோ அல்லது புதிய தலைவராக கட்சியின் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்டு “உள்வீட்டு” சதியால் பதவி ஏற்காதிருக்கும் ஸ்ரீதரனோ பங்கேற்கவில்லை. இவர்களுடன் இன்னும் பலர் பங்கேற்காத நிலையில் தான் மத்திய குழுவை துணைத்தலைவர் சிவஞானம் தலைமையில் கூட்டிய சுமந்திரன் அணி, ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிக்க தமிழரசுக்கட்சியின் மத்திய குழு ஏகமனதாக முடிவு என அறிவித்தது.

உடனடியாகவே இந்த தீர்மானத்தை நிராகரித்த தலைவர் மாவைசேனாதிராஜா “இவ்வாறான தீர்மானம் தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது. இது கட்சியின் தீர்மானம் அல்ல” என அறிவித்தார். ஆனால் சுமந்திரன் விசுவாசியான துணைத் தலைவர் சிவஞானமோ “மத்தியக்குழுவின் தீர்மானத்தை தலைவருக்கு அறிவிக்க வேண்டிய தேவை கிடையாது. அவ்வாறு அறிவிக்க வேண்டும் என யாப்பிலும் இல்லை” என விந்தையான காரணம் ஒன்றைக் கூறிவிட்டு சஜித்தை ஆதரிக்கும் தீர்மானத்தை நான் ஆதரிக்கின்றேன். ஆனால் சஜித்துக்கு ஆதரவாக எந்த மேடையிலும் ஏறமாட்டேன் எனவும் விசித்திர அறிவிப்பையும் விடுத்தார்.

இந்நிலையில் தலைவர் மாவை சேனாதிராஜா. மறுநாள் ஜனாதிபதித்தேர்தல் தொடர்பில் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் மத்திய குழுவின் தீர்மானத்துடன் இணங்கிப் போகவேண்டும் என அறிவித்து “பல்டி” அடித்தார். அடுத்த ஓரிரு தினங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த “பல்டி” தலைவரை யாழ்ப்பாணத்திலுள்ள அவரின் வீடுதேடிச்சென்று சந்தித்த பின்னர் ஊடகங்களை சந்தித்த “பல்டி” தலைவர் ரணில் விக்கிரமசிங்க தான் மீண்டும் ஜனாதிபதியாவார். அவர் பதவியேற்று 3 மாதங்களுக்குள் எமக்கு சமஷ்டி தீர்வை வழங்கவேண்டும். அவர்தான் வெற்றிபெறுவார் “எனக்கூறி அந்தர்” “பல்டி” அடித்தார்.

ஆனால் ஸ்ரீதரனோ ஆரம்பம் முதலே “எனது ஆதரவு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பளருக்குத்தான்” என அறிவித்து அதில் இன்றுவரை உறுதியோடுமிருக்கின்றார். அதுமட்டுமன்றி தனது கிளிநொச்சி மாவட்ட தமிழரசுக்கட்சியின் கிளையில் தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவளித்து தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளார். அதுபோன்றே திருகோணமலைமாவட்ட எம்.பி.யான குகதாசனும் திருகோணமலை மாவட்ட தமிழரசுக்கட்சியின் கிளையில் தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவளித்து தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளார்.

இவ்வாறாக ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதாக சுமந்திரன் அணியும் தமிழ் பொதுவேட்பாளரை ஆதரிப்பதாக ஸ்ரீதரன் அணியும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக தலைவர் மாவை சேனாதிராஜாவும் சஜித்தை ஆதரிக்கின்றேன் ஆனால் அவருக்காக மேடை ஏற மாட்டேன் என துணைத்தலைவர் சிவஞானமும் அறிவித்துள்ள நிலையில் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் யார்பக்கம் நிற்பது, யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் விழிபிதுங்கி நிற்கின்றனர். இன்று ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பது தொடர்பில் தமிழரசுக்கட்சியின் “வீடு” 4 துண்டுகளாக உடைந்துபோயுள்ளது.

எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் முடிவெடுக்க ஜனாதிபதி வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து அறிக்கையிட நியமிக்கப்பட்ட 6 பேர்கொண்ட குழு அறிக்கை சமர்ப்பிக்க முன்னரே இவர்கள் ஒவ்வொரு அணியினரும் ஒவ்வொரு வேட்பாளர்களை ஆதரித்து முடிகளை அறிவித்து விட்டமைதான் வேடிக்கையானது.

இவ்வாறு தமிழரசுக்கட்சி உடைந்து வீதிக்கு வந்துள்ள நிலையில் தான் கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் முடிவெடுக்க ஜனாதிபதி வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து அறிக்கையிட நியமிக்கப்பட்ட 6 பேர்கொண்ட குழுவில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பதில் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன் மற்றும் வடமாகாண சபை அவை தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் ஆகியோர் கூடிப்பேசினார் மட்டக்களப்பு முன்னாள் மேயர் சரவணபவன் கலந்துகொள்ளவில்லை.

இந்த சந்திப்பில் முடிவில் ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து எதிர்வரும் 15 ஆம் திகதி தமிழரசுக்கட்சியின் முடிவை அறிவிக்கும் இறுதி அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளதாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அறிவித்தார். வடிவேலு பாணியில் சொல்வதென்றால் “மறுபடியும் முதல்ல இருந்தா” என்று கேட்கத்தோன்றும் அறிவிப்பாகவே இது இருக்கின்றது.

“இந்த தேர்தலில் எங்களுடைய மக்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும், என்ன அடிப்படையில் வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பிலும் அதற்காக எங்களுடைய கட்சி ரீதியான கொள்கை, எங்களுடைய இனப்பிரச்சினை தீர்வு, சமஷ்டி, சுயநிர்ணய அடிப்படையிலான தீர்மானங்கள், அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வேட்பாளராக உள்ள சஜித் பிரேமதாசவின் கருத்துக்கள் தேர்தல் அறிக்கை விடயங்களையும் நாங்கள் கருத்தில் கொண்டு, அதில் எங்களுக்கும் அவருக்கும் இணக்கம் ஏற்படக்கூடிய விடயங்களை அடையாளப்படுத்தி எதிர்வரும் 14 அல்லது 15ஆம் திதிக்கு முன்னதாக எங்களால் தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கையை தமிழ் மக்களுக்காக வெளியிடவுள்ளோம். அதற்கு முன்னர் சுமந்திரன் சஜித் பிரேமதசாவை சந்தித்து பேசுவார்.

இந்த தேர்தல் தொடர்பில் கொள்கை அடிப்படையிலும் இனத்தின் விடுதலை அடிப்படையாகவும் அதேவேளை சஜித் பிரேமதாசவின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் சார்பாகவும் அது தொடர்பில் எங்களுடைய கருத்துக்கள் என்ன என்பது தொடர்பிலும் அந்த அறிக்கையில் நாங்கள் குறிப்பிட இருக்கின்றோம். ஆகவே இந்த குழு மீண்டும் கூடி அந்த அறிக்கையை பத்திரிகையாளர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் வெளியிடுவோம் மாவை சேனாதிராஜா அறிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெற இருந்த மத்திய செயற்குழு கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே கட்சியின் மத்திய செயற்குழு முடிவெடுத்ததன் காரணமாக மீண்டும் மத்திய செயற்குழுவை கூட்ட வேண்டிய தேவை இல்லை என்பதினால் அது இரத்த செய்யப்பட்டுள்ளது. தேவை ஏற்படும் பட்சத்தில் பின்னர் கூடலாம். தற்போது அதற்கான தேவை இல்லை என்பதன் அடிப்படையிலேயே ரத்து செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே நாங்கள் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு என தெரிவித்ததன் அடிப்படையில் அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண சபை விடயம், புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பான விடயம் உட்பட பல்வேறு விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான கால வரையறை தொடர்பாக சஜித்துடன் பேசி ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவது என முடிவு எட்டப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் குறித்த கால வரையறைகள் தொடர்பாக சஜித் பிரேமதாசாவுடன் நான் கலந்துரையாடியதன் பின்னர் அதில் எட்டப்பட்ட தீர்மானங்களை இந்த விசேட குழுவிற்கு அறிவிப்பேன் என சுமந்திரன் எம்.பி.தெரிவித்துள்ளார்.

மலையக, முஸ்லிம் கட்சிகள் எல்லாம் சஜித் பிரேமதாசவுடன் புரிந்துணவு உடன்படிக்கை, ஒப்பந்தங்கள் செய்தே ஆதரவளிக்கும் நிலையில் தமிழரசுக்கட்சி எந்த வித புரிந்துணவு உடன்படிக்கையோ, ஒப்பந்தமோ செய்யாது எழுந்தமானமாக சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்தமையும் கடும் விமர்சனங்களையும் கண்டனங்களையும் ஏற்படுத்திய நிலையிலேயே தற்போது சஜித் பிரேமதாசவுடன்சுமந்திரன் பேசப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளமை பஸ் சென்றபின்னர் கைகாட்டுவது போன்றே உள்ளது. இது தமிழரசுக்கட்சி தலைவர்களினது அரசியல் முதிர்ச்சி, சாணக்கியம் தொடர்பில் கேள்விகளை எழுப்பியுள்ளது.

தற்போது தமிழ் பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் மத்தியிலும் தமிழரசுக்கட்சியினர் மத்தியிலும் அதிகரித்து வரும் ஆதரவினாலேயே சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு என்ற முன்னைய ஒருபக்க தீர்மானம் தொடர்பில் சஜித் பிரேமதாசவிடம் சில உறுதிமொழிகளைப்பெற்று தமதுப்பக்க தீர்மானத்தை நியாயப்படுத்த சுமந்திரன் அணி முயற்சிப்பதாகவே தெரிகின்றது. அதேவேளை தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு என்ற அறிவிப்பை தமிழரசுக்கட்சி வெளியிட சுமந்திரன் அணி இணங்காது என்பதனால் எதிர்வரும் 14அல்லது 15 ஆம் திகதி தமிழரசுக்கட்சி வெளியிடவுள்ள அறிக்கையில் “தமிழ் மக்கள் தாம் விரும்பிய ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும்” என்ற பொதுப்பட்ட அறிவிப்பு ஒன்று வெளிவரவே வாய்ப்புள்ளது.

# கோதுமைத் தவிடு இலங்கையில் இருந்து சீனாவிற்கு ஏற்றுமதியின் பின்னணி என்ன?

## (கனடா உதயன் சிறப்பு புலனாய்வு கட்டுரை)

**- நடராசா லோகதயாளன் -**




**ஆ**சியாவின் அதிசயம் என்று இலங்கை தன்னைத்தானே வியத்துக் கொள்கிறது. அப்படி என்ன அதிசயம் என்று கேட்டால், அது பல வகைகளில் உள்ளது என்கிற பதில் வரும். இயற்கை அழகு, அருமையான தேயிலை, அழகான கடற்கரைகள் என்று அரசு அடுக்கிக்கொண்டே செல்லும்.

மறுபுறம் வேறு சில அதிசயங்களும் உள்ளன. கொடூரமாக நடைபெற்ற உள்நாட்டுப் போர் முடிந்து 15 ஆண்டுகள் ஆனாலும் பொறுப்புக்கூறல் இல்லாமை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களில் ஒருவர் கூட இதுவரை கண்டுபிடிக்கப்படாதது, தொடர்ந்து வளமான விளைநிலங்களை அபகரிக்க முயல்வது, தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களை பௌத்தமயமாக்க விழைவது என்று அப்படியொரு அதிசயப் பட்டியலும் நீளூம்.

இப்போது மேலும் ஒரு அதிசயம் நமது புலனாய்வில் தெரியவந்துள்ளது. அதுவும் ஏதோ ஆதாரமில்லாத எழுந்தமானகமோ கூறப்படும் செய்தியாக இல்லாமல், ஆதாரத்துடன் நிரூபிக்கிறது "கனடா உதயன்".

அது என்ன அதிசயம் இப்போது? வேறொன்றும் இல்லை. நாட்டில் பல லட்சம் கால்நடைகளுக்கு போதிய உணவில்லாத நிலையில், அவர்களுக்கான ஒரு முக்கிய உணவுப் பொருளாகவும் உள்ள தவிடு கூட இப்போது உள்நாட்டு ஆடு மாடுகளுக்கு கிடைக்காமல், வெளிநாட்டுப் பன்றிகளுக்கு உணவாக ஏற்றுமதி செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விரிவாகப் பார்ப்போம்:

கோதுமைத் தவிட்டினை ஏற்றுமதி செய்து கால் நடைகளின் வயிற்றிலும் அடிக்க "நாட்டை பொருளாதாரத்திலிருந்து மீட்டெடுத்து மீண்டும் கட்டியெழுப்ப விழைகின்ற" ரணில் அரசு துணிந்துவிட்டமை 2024-09-09 அமைச்சரவையின் தீர்மானத்தில் கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை வாழ் மக்களின் வயிற்றில் அடித்த அரசு தற்போது கால்நடைகளையும் விட்டுவைப்பதாக இல்லை. அவற்றின் வயிற்றிலும் அடிக்க எண்ணிவிட்டாரகள்.


நாட்டின் தேவைக்காக இறக்குமதி செய்யும் கோதுமையினை பிரித்தெடுக்கும்போது அகற்றப்படும் கோது மற்றும் தவிடு தற்போது கால்நடைகளின் உணவுக்காக பயன்படுத்தப்படுகின்றது. இவை கோதுமைத் தவிடு மற்றும் கோதுகளாக சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்ற காலத்திலேயே கால்நடைகளிற்கான உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முடியவில்லை.

கால்நடைகளின் ஒரு பிரதான உணவாகவும் தவிடு தெற்காசிய நாடுகள் எங்கும் பயன்படுத்தப்படுகிறது. அதில் புரதச்சத்தும், நாற்சத்தும் கூடுதலாக இருப்பதால், காலநடைகளின் ஆரோக்கியத்திற்கும், கூடுதலாக பால் சுரப்பதற்கு ஏதுவாக உள்ளது என்பது அறிவியல் ரீதியான உண்மை.

இந்த நிலையில் கோதுமையில் இருந்து அகற்றப்படும் கோதுமைத் தவிட்டினை சீனாவிற்கு ஏற்றுமதி செய்ய நாட்டின் விவசாய பெருந்தோட்ட அமைச்சு 2024-09-09 ஆம் திகதி அமைச்சரவைக்கு ஓர் பத்திரத்தை சமர்ப்பித்து அனுமதி பெற்றுள்ளது.

இதன்மூலம் கோதுமைத் தவிடு சீனாவிற்கு ஏற்றுமதி செய்ய அரசு இரகசிய முயற்சியில் ஈடுபட்டுள்ளமை நிரூபணமாகிவிட்டது.

இலங்கையில் தற்போது காணப்படும் 25 லட்சம் கால்நடைகளிற்கு ஆண்டுதோறும் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் பண்ணையாளர்கள் தவித்து வருகின்றனர். இதில் வடக்கு கிழக்கு பெரும் காடு உள்ள மாவட்டங்களில் கூட மேய்ச்சல்தரை, மழை காலத்தில் பராமரிப்பு இடம் இடம் இன்றி ஆண்டுதோறும் பல நூறு கால் நடைகள் உயிரழக்கின்றன. ஆயிரக் கணக்காண மாடுகளை வளர்ப்பவர்கள் கால் நடைத் தீவணத்தினை வாங்கும் வசதியின்றியே ஆடு,மாடுகள் தீவணம் இன்ற இறக்கும் சூழல் காணப்படுகின்றது. இதன் காரணமாக தமிழர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.




இவ்வாறான கால் நடை உணவு வகைகளின் விலை அதிகரிப்பின் காரணமாகவே பல ஆயிரம் கால் நடை வளர்ப்புகள் கை விடப்பட்டதன் எதிரொலியாகவே இன்று பால் மா மற்றும் முட்டை, இறைச்சி என்பன இறக்குமதி செய்யும் நிலையில் நாடு உள்ளது.

இவை எவற்றினையும் கருத்தில் எடுக்காத அரசு கோதுமைத் தவிட்டினை சீன நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதி அளிப்பதன் பின்னணியில் மறைந்துள்ள இரகசியம் உடனடியாக கண்டுகொள்ள முடியாதுள்ளது.

இலங்கை தனக்குத் தேவையான கோதுமையை இந்தியா, அமெரிக்கா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும்போது சீனா ஏன் இதனை நாடுகின்றது என்பது தொடர்பில் பொருளாதார ரீதியிலும் சந்தேகங்கள் எழக்கூடும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 12 பால்மாடுகளை முழுநேர வாழ்வாதார தொழிலாக கொண்ட அளவெட்டியைச் சேர்ந்த 69 வயதான நாகராசா தேவன். போரினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்களைப் போலவே இவரும் தனது வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க அரும்பாடுபட்டு வருகிறார். பெற்ற பிள்ளைகளைப் போன்றே தனது பால்மாடுகளை பராமரித்து வரும், அவற்றுக்கு வயிறார உணவளிக்க முடியவில்லை என்றால், தனது வாழ்க்கையில் பலனேதும் இல்லை என்று வருந்துகிறார்.



"35 வருடமாக இந்த தொழிலையே நம்பி வாழ்கின்றேன். பெரும் நெருக்கடியின் மத்தியில் விலை ஏற்ற இறக்கங்களுடன் தற்போது கால் நடைத் தீவணம் கிடைக்கின்றது. அதனையும் அரசு இலாபம் பார்க்கும் நோக்கில் ஏற்றுமதிக்கு திட்டமிட்டுவிட்டது. இதனால் 2022 ஆம் ஆண்டு விவசாயிகள் வீதியில் இறங்கிய பின்பு நாடே வீதிக்கு வந்தது. அவ்வாறான ஓர் நிலையை கால்நடை வளர்ப்பாளர்கள் மூலம் அரசு திரும்பவும் ஏறபடுத்த முயற்சிக்கின்றது. ஏனெனில் போர் காலத்தில் கூட உடமைகள் அனைத்தையும் இழந்தபோதும் எமது கால் நடைகளையே எடுத்துச் சென்ற எம்மை அரசு புதுவடிவில் வஞ்சிக்க எண்ணுகின்றதோ என்ற சந்தேகம் எழுகின்றது" என்றார்.

இவை தொடர்பில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் பொருளாதரத்துறை பேராசிரியர் சி.விஜயகுமாரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:

"சீனா தனக்குத் தேவையான கோதுமையை தானே உற்பத்தி செய்யும் வல்லமை கொண்டுள்ள ஓர் நாடு. ஏன் இலங்கையை நாடுகின்றது என்பது புரியாவிட்டாலும் கோதுமைத் தவிட்டினை ஏற்றுமதி செய்வதன் மூலம் நிச்சயமாக எமது நாட்டில் பற்றாக்குறை ஏற்படும். விலை அதிகரிப்பினை ஏற்படுத்தும் அதனால் கால்நடை உணவுத் தட்டுப்பாடு ஏற்படும். ஏற்றுமதியின் அளவுகள் அதிகரிக்கும்போது உற்பத்தியின் தரமும் குறைவடையும் இதனால் எமது நாட்டின் கால் நடைகளிற்கும் நிறைவான உணவு கிடைக்காத தன்மையே ஏற்படும்" என்றார்.

இது தொடர்பில் கொழும்பு பல்கலைக் கழக பொருளியல்துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி கணேசமூர்த்தி கருத்து தெரிவிக்கையில்,

"சீனாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்றால் அது சீனாவில் உள்ள ஓர் நிறுவனம் தனது இலாபம் கருதி இந்த கோரிக்கையினை முன் வைத்திருக்கும். அது எந்த வகையிலான இலாபம் என்பது உடனடியாக கண்டுகொள்ள முடியாது.

இங்கே ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தை விடவும் வேறு நோக்கம் அரசியல் ரீதியிலான பொருளாதார நன்மை கருதிய வர்த்தகமாக இருக்கலாம்.

கோதுமை இறக்குமதி என்பதற்காக கோதுமை தவிடு ஏற்றுமதி செய்யக்கூடாது எனக் கூற முடியாது. ஏனெனில் பெற்றோலும் இறக்குமதி ஆனாலும் ஏற்றுமதியும் உண்டு. அதேநேரம் கோதுமையில் இருந்து அகற்றப்படும் தவிடு உள்நாட்டு கால் நடைகளிற்கான பிரதான உணவுத் தேவைக்கான மூலப் பொருளாக இருக்கும் நிலையில், தனியாக கால்நடை தீவனம் என்ற பெயரில் இறக்குமதி செய்யும் ஓர் நாட்டில் இப்படியாக கிடைக்கும் மூலப் பொருளையும் ஏற்றுமதி செய்ய முயற்சிப்பது அந்த சமூகத்தை அதாவது கால் நடை வளர்ப்பாளர்களை எண்ணிப்பார்க்காத செயல். அதாவது அவர்களது வாழ்வாதாரத்தையும், நாட்டின் பால் உற்பத்தியையும் புறந்தள்ளும் செயலாகவே பார்க்கப்பட வேண்டும்.

தற்போது கிடைக்கும் கோதுமைத் தவிடு உள்நாட்டுத் தேவைக்கு அதிகமானதா, போதாமையாக உள்ளதா அல்லது ஆண்டு ஒன்றிற்கு எவ்வளவு தேவை போன்ற புள்ளி விபரங்களை முதலில் அரசு வெளியிட வேண்டும். பின்னர் பண்ணையாளர்களின் ஒப்புதலைப் பெற வேண்டும். அதன் பின்னரே ஏற்றுமதிதொடர்பில் ஆராய வேண்டும். மாறாக எடுத்தோம் கவிழ்த்தோம் என முடிவெடுத்தால் இந்த நாட்டில் ஏற்கனவே ஒரு அனுபவம் உண்டு அதுதான் விவசாயிகளின் கருத்தைக் கேட்காது பசளைகளைத் தடை செய்தமையின் விளைவை உலகு அறியும். இதுவுத் அந்த செயலிற்கு ஒப்பானது" என்றார்.

இது தொடர்பில் அரசியல் ரீதியிலான கருத்தை ததிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில்: "அரசின் இந்த முன்னெடுப்பு தவறானது. நாட்டில் உள்ள கால்நடைகளிற்கான வளத்தை ஏற்றுமதி செய்யும் முடிவு கண்டிப்பாக தடுக்கப்பட வேண்டும். ஏனெனில் நாடு பூராகவும் 40 லட்சம் கால் நடைகள் இருந்தாலும் வடக்கில் மட்டும் 4 லட்சத்து ஆயிரத்து 674 மாடுகளும், 2 லட்சத்து 12 ஆயிரத்து 348 ஆடுகளும், 24 ஆயிரத்து 383 எருமைகளும் என 6 லட்சத்து 38 ஆயிரத்து 405 கால் நடைகள் உள்ளதாக வடக்கு மாகாண கால்நடைத் திணைக்களத்தின் புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

இவற்றில் எமது தேர்தல் மாவட்டமான யாழ்ப்பாணம்மாவட்டத்தில் கால்நடைகள் தீவணத்தில் மட்டுமே தங்கியுள்ளன. ஏனைய மாவட்டத்திலும் கணிசமான கால்நடைகள் இந்த உற்பத்தி தீவணத்தை நம்பியும் வாழும் சூழலில் கோதுமை தவிடு ஏற்றுமதி என்பது கால்நடைகளையும் பண்ணையாளர்களையும் மிகவும் நெருக்கடிக்குள் தள்ளும் ஓர் விடயம்" என்றார்.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சரும், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ.ஐங்கரநேசன் இது தொடர்பில் தனது எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளியிட்டார்.

"இலங்கையின் கால்நடைகளின் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய பலவிதமான கால் நடை உணவுகள் இன்றுவரை இறக்குமதி செய்யப்படுகின்றது. அதில் உடனடி உணவாக புல் வகைகள்கூட இறக்குமதி செய்யும் நிலையில், மிகவும் புரதச் சத்து நிறைந்த இந்த கோதுமைத் தவிட்டை ஏற்றுமதி செய்வதன் மூலம் கால் நடைகளின் பால் கறவைகளின் அளவு அதிகளவில் குறைவடையும் அப்போதும் நாம் பால் மாக்களை இறக்குமதியை நம்பியே வாழ வேண்டிய அவலத்திற்கு தள்ளப்படுவோம்.

இந்த நிலை தொடர்ந்தால், கறந்த பால் என்பது எமது மக்களுக்கு வாழ்நாள் முழுவதும் எட்டாக்கனியாகவே இருக்கும். உள்நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை சிதைத்துவிட்டு, மற்றொரு நாட்டிலுள்ள பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவுவது என்பது அப்பட்டமான துரோகச் செயலாகவே பார்க்கப்பட வேண்டும்.

தீய உள்நோக்கம் கொண்ட இப்படியான ஏற்றுமதி, இறக்குமதியின் மூலமும் ஆட்சியாளர்கள் மட்டும் நன்மை அடைவர், தமிழ் பால் பண்ணையாளர்கள், கால்நடை வளர்ப்பவர்களின் நிலை மேலும் பின்னடைவை சந்திக்கும்" என்றார்.

# இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரும் சுயேட்சை வேட்பாளரும்

(எஸ்.ஆர்.ராஜா)




இலங்கையில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை அதிக எண்ணிக்கையானோர் போட்டியிடுகின்ற போதிலும் அதில் ஒரு சில வேட்பாளர்கள் இடையே மட்டுமே போட்டி காணப்படுகின்றது. அந்த வகையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா, தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, சுயேட்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடையே கடுமையான போட்டி நிலை காணப்படுகின்றது. அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக தமிழ் மக்களின் ஒற்றுமையை சர்வதேசத்திற்கும் தென்னிலங்கைக்கும் எடுத்துக் காட்டும் நோக்குடன் பொது வேட்பாளராக தமிழ் மக்கள் சார்பில் பா. அரியநேந்திரன் சில தமிழ்க் கட்சிகளின் தலைவர்களால் நிறுத்தப்பட்டுள்ளார். இந்த ஜனாதிபதி தேர்தலுக்காக இடம்பெறும் பிரச்சாரங்களுக்கு மக்கள் வருகின்ற (அழைத்து) எண்ணிக்கையின் அடிப்படையிலும் ஊடகங்கள் வாயிலாக காட்டப்படும் பிரச்சாரங்கள் ரீதியாகவும் பார்க்கும் போது முதல் குறிப்பிட்ட மூன்று வேட்பாளர்களுக்கிடையே கடுமையான போட்டி நிலவி வருவதாக தெரிகிறது.

எனினும் பொதுவாக சிங்கள மக்களின் மத்தியில் நிலவிவரும் கருத்தின்படி அனுரகுமார திஸாநாயக்க அரசியல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் எனவும் தான் வெற்றி பெற்றால் அந்த மாற்றத்தை மேற்கொள்வேன் எனவும் குறிப்பிட்டு பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதுடன் கிராமங்கள் தோறும் மக்கள் மத்தியில் இந்தக் கருத்தினை விதைத்து வருகின்றமை காரணமாக மக்கள் அவரின் பக்கம் திருப்பியுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

எனினும் அனுரகுமார வெற்றி பெற்றால் தொடர்ந்து அரசாங்கத்தை நடாத்திச் செல்ல அமைச்சரவை வேண்டும் அவ்வாறான ஒரு பின்புலம் இவர்களிடம் கிடையாது எனவே, மீண்டும் கோட்டாபாய அவர்களின் ஆட்சியைப் போன்ற ஒரு நிலை தோற்றம் பெறும் என்றும் சிலர் குறிப்பிட்டு வருகின்றனர்.

இதனால் சிறந்த அரசியல் பின்புலத்தைக் கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாஸாவுக்கு வாக்களிப்பதன் மூலம் பொருளாதார மீட்சியைப் பெறலாம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் சிறந்த அரசியல் பின்புலம் கொண்ட பல அரசியல் வாதிகள் உள்ளதாகவும், வெளிநாடுகளுடன் உத்தியோக பூர்வமற்ற முறையில் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளில் பல நாடுகள் இலங்கையில் தமது அரசாங்கம் அமைந்ததும் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவி வழங்குவதாக தெரிவித்துள்ளது என அக் கட்சியின் சார்பில் ஊடக நிறுவனம் ஒன்றில் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முக்கியஸ்தர்கள் பலர் குறிப்பிட்டு வருகின்றனர். அத்துடன் நின்று விடாது ரணில் விக்கிரமசிங்கவும் அனுரகுமாரவும் தமக்கு எதிராக கூட்டுச் சேர்ந்து செயற்படுவதாக தெரிவித்து வருகின்றனர்.

அத்துடன் அனுரவிடம் பின்புலத்தில் சிறந்த நபர்கள் இல்லை என குறிப்பிடும் இவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்திருக்கும் அனைவரும் முன்னைய அரசாங்கத்தில் அரச சொத்துக்களை கொள்ளையிட்ட கொள்ளைக் காரர்களே இணைந்து உள்ளதாக குறிப்பிட்டு வருகின்றனர்.

அதேபோல் சுயேட்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதாரம் இன்னும் உறுதியாகவில்லை என்றும் அதனை உறுதிப்படுத்த கால அவகாசம் தேவை எனவும் தான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தான் தொடர்ந்தும் நாடு வளர்ச்சி அடையும் என்றும் மாறாக மாற்றம் ஏதாவது செய்யப்பட்டால் அல்லது வேறு நபர்கள் ஜனாதிபதியானால் மீண்டும் எரிவாயு, எரிபொருள், உரம் போன்ற பொருட்களுக்கு மீண்டும் வரிசை யுகம் உருவாகும் எனவும் மக்களை எச்சரித்து பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார். அத்துடன் ரணிலால் மட்டுமே முடியும் என்ன தோரணையில் தமது பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் இவர் பிரச்சார மேடைகளில் னுரவினை நண்பன் என அழைத்து வருவதுடன் சஜித் வெற்றி பெற்றுவிடக் கூடாது என்பதில் குறியாகச் செயற்படுவதுபோல் தெரிவின்றது.

அதேபோல் தமிழ்க் கட்சிகளின் சார்பில் போட்டியிடவுள்ள தமிழ் வேட்பாளர் பா.அரியநேந்திரன் இந்தப் போட்டியில் தான் ஜனாதிபதியாக வர முடியாது என்றாலும் தமிழ் மக்களின் ஒற்றுமையையும் தென்பகுதிக்கான எதிர்ப்பையும் சர்வதேச சமூகத்திற்கு வெளிக்காட்டும் நோக்குடன் தாம் போட்டியிடுவதாக குறிப்பிட்டுள்ளார். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமிழ்த் தலைமைகள் மீதான நம்பிக்கையானது அற்றுப் போயுள்ளது. இது தமிழ்த்தலைமைகள் மத்தியில் காணப்படுகின்ற ஒற்றுமையீனமும் ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதுமே இதற்குக் காரணமாகும்.

தமிழ்த் தலைமைகள் தற்போது நான்கு வகையான கருத்துக்களை முன்வைத்து வருகின்றன. இதில் கூட்டமைப்பில் காணப்படும் அரசியல் தமைமைகளில் ஒருபகுதி சஜித் பிரேமதாஸாவினை ஆதரிப்பதாக குறிப்பிட்டு வரும் நிலையில் ஏனைய சிலர் பொதுவேட்பாளரை ஆதரிக்க உள்ளதாகவும் குறிப்பிட்டு வருகின்றனர். தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் கூட்டப்பட்டபோது மாவை சேனாதிராசா அதில் கலந்து கொள்ளவில்லை. ஸ்ரீதரன் இலங்கையில் இல்லை. இந்த நிலையில் வவுனியாவில் இடம்பெற்ற கூட்டத்தின் சுமந்திரனும் அவரது சகபாடிகளும் இணைந்து சஜித்தை ஆதரிக்கும் முடிவினை எடுத்தனர். அதில் கலந்துகொண்ட கொழும்பு கிளை தலைவர் சட்டத்தரணி தவராசா தான் இக் கருத்தை ஏற்கவில்லைஎன அன்றே குறிப்பிட்டிருந்தார்.

மேலும் ஒரு பகுதியினர் பொதுவேட்பாளர் பா.அரியனேந்திரனை ஆதரிக்கவேண்டும் என குறிப்பிட்டு வருகின்றனர். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் - வகித்த ஏனைய கட்சிகள் பொது வேட்பாளரை ஆதரிக்கும் முடிவில் உறுதியாக உள்ளன. இதற்கும் மேலதிகமாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி இந்தத் தேர்தலைப் புறக்கணிப்பதன் மூலம் தென் இலங்கைக்கு எமது எதிர்ப்பை வெளியிடவேண்டும் என்ற கருத்தினை முன்வைத்து வருகின்றனர். இவ்வாறு தமிழ்த் தலைமைகள் நாலாபுறமும் சிதறுண்டு கிடப்பதானது தமிழ் மக்கள் மத்தியில் வெறுப்புணர்வினை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்கள் சார்ந்த நலனில் அக்கறை கொள்வதாகக் கூறிக்கொள்ளும் தமிழ்த் தலைமைகள் ஒரே ஓர் புள்ளியில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே எமது கருத்தினை தென்னிலங்கைக்கோ அல்லது சர்வதேச சமூகத்திற்கோ வெளிப்பிடுத்த முடியும். எமக்குள் நாம் ஒற்றுமைப்படாதவரையில் எந்த முயற்சியும் வெற்றியைத் தரப்போவதில்லை என்பதே உண்மை.

ஏனெனில் மக்கள் தற்போது தமிழ்த் தலைமைகள் மீது உள்ள வெறுப்பின் காரணமாக நேரடியாக தென்னிலங்கை பெரும்பாண்மை இனக் கட்சிகளின் பக்கம் சாயும் போக்கு அதிகரிக்கும். கடந்த காலங்களில் பெரும்பாலும் வடக்கில் பெரும்பாண்மைக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவரும் வெற்றி பெறுவது இல்லை. ஆனால் தற்போது அத்தகைய போக்கு மாறி வருகின்றது. கடந்த தேர்தலைப் பார்த்தால் கூட தென்னிலங்கை கட்சிகளில் போட்டியிட்ட பல வேட்பாளர்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

தற்போதைய நிலையில் பல தமிழ்த் தலைமைகள் பொதுவேட்பாளரை ஆதரிக்கும் முடிவில் இருந்தாலும் கூட மக்கள் மத்தியில் அத்தகைய தெளிவான ஒரு உணர்வை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. அதற்கான முயற்சியை ஒரு சில அரசியல் தலைமைகள் மேற்கொண்டு வந்தாலும் கூட பெரும்பாலான அரசியல் தலைமைகள் இவ்வாறு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தம் முயற்சியில் ஈடுபடவில்லை என்பதே உண்மை.

இந்த ஜனாதிபதித் தேர்தல் இத்தகைய பொதுவேட்பாளரை நிறுத்தியமைக்கு பதிலாக எமக்கு ஓரளவுக்கு சாத்தியமான தீர்வை முன்வைக்கக் கூடிய ஒரு வேட்பாளரைத் தெரிவு செய்து அது தொடர்பாக அவருடன் முறையான பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்தி அதன் மூலம் அவர்களில் ஒருவருக்கு எமது ஆதரவினை வழங்கி அதன் மூலம் சில அனுகூலங்களைப் பெற முயற்சித்திருக்கலாம். கடந்த காலங்களில் இவ்வாறு செய்து நாம் எந்தப் பலனையும் பெற்றுக் கொள்ளவில்லை என்பது உண்மையே. எனினும் கடந்த கால தேர்தலில் இரண்டு பிரதான வேட்பாளர்கள் மட்டுமே போட்டியிட்ட நிலையில் நாம் ஒருவரை ஆதரித்து அவர்களும் எம்மை தொடர்ந்தும் ஏமாற்றியமை வரலாறு.

ஆனால், இம்முறை முன்முனைப் போட்டி ஒன்று நிலவி வருகின்றது இங்கு சிங்கள மக்கள் வாக்குகள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றபோது ஒரு வேட்பாளர் கூட பெரும்பாண்மையைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஒன்று ஏற்படும். இதனால் ஜனாதிபதியைத் தெரிவு செய்ய விருப்பு வாக்குகளை எண்ணும் முறை பின்பற்றப்படவுள்ளது. சில வேளைகளில் நாம் ஒற்றுமையாக ஒரு வேட்பாளரை ஆதரிக்கின்ற போது அவருக்கு எமது மக்களின் சார்பில் உள்ள வாக்குகளில் ஒரு 60 சதவீதமான வாக்குகளை ஒரு வேட்பாளருக்கு பெற்றுக்கொடுக்கின்றபோது அவர் வெற்றிபெறும் சந்தர்ப்பம் ஏற்படும். இதன்மூலம் தமிழ் மக்களின் வாக்குகளே வெற்றியைத் தீர்மானிக்கும் வாக்குகளாக காணப்படும். இதன் மூலம் ஏதாவது எமது எதிர்பார்ப்புக்களில் ஒரு பகுதியையேனும் படிப்படியாக நிறைவேற்றிக் கொள்ள முடியும். அத்தகைய சந்தர்ப்பம் ஒன்று தற்போது இழக்கப்பட உள்ளதாகவே தோன்றுகின்றது.

பெரும்பாலும் வடக்கில் பொதுவேட்பாளர் ஒருவர் இல்லை எனில் மக்களின் தெரிவாக பெரும்பாலும் சஜித் அல்லது ரணில் விக்கிரமசிங்கவே காணப்படுவர். இவர்களில் ஒருவரை ஆதரிப்பதன் மூலமே அல்லது அவர்களின் கருத்துக்களை அறிந்து அதில் காணப்படும் குறைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி பொது வேட்பாளரை நிறுத்தி எமது எதிர்ப்பை முறையாக வெளிக்காட்டியிருந்தால் இம் முயற்சி பயனுடையதாக அமைந்திருக்கலாம். நாம் ஒன்றுமையாக இத்தகைய முடிவினை எடுக்காமையினால் மீண்டும் பாதிக்கப்படப்போவது எமது தமிழ்ச் சமூகம் மட்டுமே.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் சஜித்தை ஆதரித்தமையால் கோட்டாபய வெற்றிபெற்ற பின் தான் சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி என்றே தனது பதவியேற்பு உரையில் குறிப்பிட்டிருந்தார். எனினும் அவரால் பதவிக் காலம் முழுவதும் தாக்குப்பிடிக்க முடியவில்லை. எனவே, எமது அரசியல் தலைமைகள் சரியான முடிவை எடுப்பதற்கு முன் தமக்குள் ஓர் ஒற்றுமையை ஏற்படத்திக் கொள்ளவேண்டும். தமிழ் தலைமைகள் ஒன்றுபடாதவரை எமக்கு தீர்வுகள் எவையும் கிடைக்கப் போவதில்லை. தமிழ்த் தலைமைகளில் ஒரு சிலர் எப்போதும் பெரும்பாண்மை கட்சிகளுக்கு முண்டுகொடுக்கும் நிலைப்பாட்டிலேயே காணப்படுவர். ஏனையவர்கள் அனைவரும் ஒன்றுபட்ட ஒரு நிலைப்படும் போது மக்கள் தாமாகவே எதிராக செயற்படும் தமிழ்த் தலைமைகளை நிராகரிக்கும் நிலை உருவாகும். இத்தகைய நிலை முன்னரும் ஏற்பட்டது எமக்கு தெரிந்ததே.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் காணப்படும் குழப்பநிலை தொடர்பாக ஒரு முடிவினை எடுக்க முயாமல் தமிழரசுக் கட்சி உட்பட அனைத்து தமிழ் கட்சிகளும் புலம்பிக் கொண்டிருக்கின்ற இந்த நிலையில் தமிழரசுக் கட்சிக்குக் கூட ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான ஆதரவு நிலைப்பாட்டில் ஒற்றுமையான ஒரு முடிவுக்கு வர முடியாது உள்ளமை விருப்பத்தகாத ஒரு செயற்பாடாகும். எனவே, தலைமைத்துவம் ஒரு உறுதியான முடிவினை எடுக்கும் போது அதற்கு கட்டுப்படக் கூடிய ஒரு நிலையை உருவாக்க வேண்டும். அல்லது தலைமையானது செல்லும் செல்லுக்கு ஏனையவர்கள் கட்டுப்படக்கூடிய ஒரு தலைமை உருவாக்கப்பட வேண்டும். இதுவே தற்போதைய காலத்தின் தேவையாக உள்ளது.

# கள்ளனிடமே 'பொறுப்புக்கூறல் என்ற சாவியை ஒப்படைத்தது ஐக்கிய நாடுகள் சபை




- சிவா பரமேஸ்வரன் -

**போ**ர்க்காலத்தில் இழைக்கப்பட்ட அட்டூழியங்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதியை வழங்குதல் என்கிற கால்பந்து மீண்டும் இலங்கை அரசிடம் உதைக்கப்பட்டுள்ளது. சர்வதேச தலையீடு தேவை என்று தமிழர்கள் கோரிவந்த நிலையில், நீதி வழங்குதல் என்ற அந்த பந்தை இப்போது புதிதாக ஆட்சிக்கு வரவுள்ள இலங்கை அரசிடமே மீண்டும் தள்ளிவிட்டுள்ளது ஐ நா மனித உரிமைகள் பேரவை.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வழங்குவதில் சர்வதேச தலையீட்டிற்கான கோரிக்கையை தொடர்ந்து நிராகரிக்கும் இலங்கை அரசு இந்த விடயத்தில் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சனைகளுக்கு உள்நாட்டு பொறிமுறைகள் மூலமே கையாள தம்மால் முடியும் என்று கூறி வருகிறது.

இலங்கையில் நிலவும் மனித உர்மைகள் சூழல் தொடர்பில், வாய்மொழியாக அளித்த அறிக்கை ஒன்றில், பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்குவதற்கான பொறுப்பை அடுத்து ஆட்சியிடம் ஐ நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் வோல்கர் டுர்க் ஒப்படைத்தார்.

நாட்டின் அடுத்த ஜனாதிபதியை தேர்ந்தெடுக இலங்கையில் எதிர்வரும் செப்டம்பர் 21ஆம் திகதி தேர்தல் நடைபெறுகிறது.

இதுவரை கொடுக்கப்பட்டு நிறைவேற்றப்படாத உறுதிப்பாடுகளை செயல்படுத்தும் பொறுப்பை, இன்னும் சில நாட்களில் ஆட்சிக்கு வரவுள்ள புதிய ஜனாதிபதியிடம் ஐ நா மனித உரிமைகள் ஆணையர் அளித்துவிட்டார். ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐ நா மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது அமர்வில் சமர்ப்பித்த தனது அரிக்கையில், முன்னர் ஆட்சியில் இருந்த அரசுகள் அந்த பேரவைக்கு கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றவில்லை என்பதை புதிதாக ஆட்சிக்கு வரவுள்ள அரசுக்கு நினைவூட்டினார்.

"இலங்கையில் ஜனாதிபதி தேர்தலும், அதையடுத்து இந்த ஆண்டின் பிற்பகுதியில் நாடாளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது. இதையடுத்து ஆட்சிக்கு வருபவர்கள் பொறுப்புக்கூறல், நீதி வழங்குவது மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கு உறுதியளிக்கும் அதேவேளை அதை நோக்கிய இடைக்கால மாற்றங்களுக்கு தாங்கள் அர்ப்பணிப்புடன் இருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்".

ஐ நா மனித உரிமைகள் பேரவையில் ஆணையர்களாக இருந்தவர்கள் தொடர்ச்சியாக பொறுப்புக்கூறல் மற்றும் தவறிழைத்தவர்கள் நீதியின் முன்னர் நிறுத்தப்படுவது ஆகியவற்றை இலங்கை அரசிடம் வலியுறுத்தி வந்தாலும், அந்த கோரிக்கைகள் தோல்வியிலேயே முடிந்துள்ளன.

இலங்கை தற்போது நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் உள்ளது என்றும், அது பழைய நிலைப்பாடுகளை உடைத்தெறிந்து புதிய பாதையை நோக்கி நகர வேண்டும் என்று வோல்கர் டுர்க் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

நீண்டகாலமாக இலங்கையில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசுகள், போரினால் பாதிக்கபட்ட மக்களுக்கு நீதியை வழங்க தவறிவிட்டன என்று அவரது அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இலங்கை தொடர்பான அறிக்கையிடலின் போதே இது தெரிவிக்கப்பட்டது.

"இலங்கையில் மோசமாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் முடிந்து 15 ஆண்டுகள் ஆகின்றன. எனினும் அதில் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் குடும்பத்தார் இன்னும் உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகளுக்காக காத்திருக்கின்றனர்".

எனினும் பாரிய மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றை இழைத்ததாக குற்றஞ்சாட்டப்படுபவர்கள் மீது எப்படியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்து அவரது வாய்மொழி அறிக்கையில் வெளிப்படையாக ஏதும் தெரிவிக்கப்படவில்லை.



கடந்த இரண்டு ஆண்டுகளாக இடம்பெறும் "கவலையளிக்கும் போக்குகள்" குறித்து சுட்டிக்காட்டி பேசிய அவர், அடிப்படை உரிமைகளுக்கான அச்சுறுத்தல் தொடருவது, பிற்போக்குச் சட்டங்கள், ஜனநாயக ரீதியில் கண்காணிப்புகள் மற்றும் கட்டுப்பாடுகளில் தேய்மானம், பொதுச் சமூகம் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான துன்புறுத்தல் மற்றும் மிரட்டி பணியவைப்பது ஆகியவற்றை காண முடிகிறது என்று தெரிவித்தார்.

"அரகலய" மக்கள் எழுச்சிப் போராட்டத்திற்கு பிறகு "புதிய தொடக்கம்" இன்று ஜனாதிபதி அளித்த உத்தரவாதம் பெரும்பாலும் "நிறைவேற்றப்படாமலேயே உள்ளது".

"சட்டவிரோதமாக கைதுகள் மற்றும் சித்திரவதை உட்பட கடந்த காலங்களில் இடம்பெற்ற மீறல்கள் ஆகியவை தொடருகின்றன என்பதை அங்கு நடைபெறுவது வெளிச்சம் போட்டு காட்டுகிறது, மேலும் ஆழமான சீர்திருத்தங்கள் இல்லாத நிலையில், எதிர்காலத்தில் உண்மையான அபாயங்கள் இருப்பதையும் கோடிட்டு காட்டுகிறது".

தவறு செய்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல் இருக்கும் கலாச்சாரம் குறித்து தனது கருத்தை தெரிவித்த வோல்கர் டுர்க், அது அர்த்தமுள்ள முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பதோடு மட்டுமில்லாமல் மீறல்கள் தொடருவதற்கும் மேலும் ஊழல் அதிகரிப்பதையும் உக்குவிக்கும் என்றார்.

"பொறுப்புக்கூறல் இல்லையென்றால், வன்முறை கலாச்சாரம் தொடர்ந்து மேலும் வன்முறையை ஊக்குவிக்கும். தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்படாதது நாடுகளையும், சமூகங்களையும் பலவீனப்படுத்தும் புற்றுநோய் போன்றது".

நடைபெறவுள்ள ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல் காலத்திலும் அதற்கு பின்னரும் அரசு கருத்துச் சுதந்திரம், அமைதியாக ஒன்றுகூடுதல் ஆகியவற்றை முழுமையாக பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஐ நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் மேலும் கருத்து வெளியிடும் போது, தமது அலுவலகத்திற்கு தொடர்ச்சியாக, துன்புறுத்தல், கண்காணிக்கப்படுவது, ஊடகவியலாளர்கள், சிவில் சமூகத்தினர், பாதிக்கபப்ட்டவர்கள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் ஆகியோர் அச்சுறுத்தி பணியவைக்கப்படுவது குறித்து முறைப்பாடுகள் வருகின்றன, அது ஏற்புடையதல்ல என்றும் தெரிவித்தார்.

பொலிசார் மற்றும் பாதுகாப்பு படைகளின் அத்துமீறல்கள் தொடருகிறது என்றும், சட்டவிரோதமாக தடுத்துவைக்கப்படுவது, சித்தரவதை ஆகியவை குறித்தும் தமது அலுவலகத்திற்கு குற்றச்சாட்டுக்கள் வருகின்றன என்றும் கூறினார்.

"நிகழ்காலம் மற்றும் கடந்த காலக்களில் இடம்பெறும் மீறல்கள் குறித்த பொறுப்புக்கூறல் இல்லாத நிலை ஒரு அடிப்படை பிரச்சனை என்றும், இதை அடையாளப்படுத்தும் வழக்குகளில் ஆக்கபூர்வமான முன்னேற்றம் இல்லாததன் மூலம் நிரூபிக்கப்படுகிறது".

"மேலும் இன்று, பாரிய மீறல்களுக்கு பொறுப்பானவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், மூத்த பொறுப்புகளில் தொடர்ந்து நியமிக்கப்படுகிறார்கள்".

அவ்வகையில் தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமையானது ஆழமாக வேரூன்றியுள்ளது. அதன் காரணமாக ஊழல், அதிகார துரிபிரயோகம் மற்றும் அரச நிர்வாகத்தின் தோல்வி ஆகியவை ஏற்பட்டன. இவைகளே நாட்டின் அண்மைய பொருளாதார நெருக்கடிகளுக்கு அடிப்படை காரணங்களாக உள்ளன என்று வோல்கர் டுர்க் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டினார்.

தமிழ் தாய்மார்கள், மனைவிகள், சகோதரிகள் ஆகியோர் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது அன்பிற்குரிய உறுவுகளை தொடர்ந்து கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக தேடி வரும் நிலையில், அரசால் நிறுவப்பட்ட காணாமல் போனவர்களை கண்டுபிடிப்பதற்கான அலுவலகம் இதுவரை ஒருவரைக் கூட கண்டுபிடிக்கவில்லை என்றாலும் இது குறித்த தனது கரிசனைகளையும் அவர் பகிர்ந்து கொண்டார். எனினும் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் குடும்பங்கள் கோருகின்றபடி இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும் என்பது போன்று குறிப்பிட்ட எந்த நடவடிக்கையையும் அவர் பரிந்துரைக்கவில்லை.

"அவர்களின் குடும்பங்கள் திருசங்கு சொர்க்கம் என்ற நிலையில் சிக்கி பதில்களுக்காக காத்திருக்கின்றனர். மேலும், இதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படவுமில்லை.

இது மாற வெண்டும். மேலும் அதுவே போர்க்காலத்தில் இடம்பெற்ற பாரிய மீறல்கள், அரச மற்றும் பாதுகாப்பு படையினர் நடந்துகொண்ட விதம், மற்றும் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சமூகங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளின் தொடர்ச்சி ஆகியவற்றை முறையாக ஏற்பதன் தொடக்கமாக இருக்கும்".

கடந்த காலங்களில் இடம்பெற்றவைகளை கையாள்வது மற்றும் சர்வதேச குற்றங்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தாமல் இருப்பது, பழைய மோதல்களை மீண்டும் உருவாக்கும், புதிய மோதல்களை ஏற்படுத்தும் மேலும் எதிர்கால மோதல்களுக்கும் வழி வகுக்கும் என்றும் அவர் எச்சரித்தார்.

எனினும், போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வழங்க நேரடியாக எந்த காத்திரமான நடவடிக்கைகளையும் முன் வைக்காத வோல்கர் டுர்க், கடந்த காலத்தில் நடைபெற்றவைகள் மூடப்பட வேண்டும் என்றும் மக்கள் மற்றும் சமூகங்கள் நீண்டகாலமாக எழுச்சி மற்றும் துயரங்களை எதிர்கொண்டுவிட்டனர் என்று தனது அறிக்கையில் தெரிவித்தார்.

"கடந்த காலத்தில் நடைபெற்றவைகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கு இது சரியான சமயம். மேலும் வன்முறைகளை ஏற்படுத்தி பாதிக்கப்பட்டவர்களை அதிகரிக்க செய்யும் அந்த அழிவு சுழற்சியை முறியடிக்கப்பட வேண்டும்".

இதேவேளை இலங்கையில் பொறுப்புக்கூறல் விடயத்தில் இருக்கும் இடைவெளியை நிரப்ப, ஐ நா உறுப்பு நாடுகள், தமது அலுவலகமான ஐ நா மனித உரிமைகள் ஆணையரின் அலுவலகத்தின் பணிகளுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு, ஐ நா மனித உரிமைகள் ஆணையரின் அலுவலகம் இலங்கையில் பொறுப்புக்கூறல் திட்டத்தை (SLAP) ஏற்படுத்தி, அங்கு இடம்பெற்ற மீறல்கள், மனித உரிமைகள் துஷ்பிரயோகங்கள் மற்றும் இதர குற்றங்கள் ஆகியவை குறித்த ஆதாரங்களை திரட்டுவதற்காக அமைத்தது.

ஐ நா மனித உரிமைகள் ஆணையருக்கு ஜெனீவாவில் பதிலளித்த இலங்கை அந்த பொறிமுறைக்கு (SLAP) அந்த பேரவையின் ஒருமித்த ஒப்புதல் இல்லை என்பதால் அதன் தாங்கள் நிராகரிப்பதாகவும் தெரிவித்தது.

"பொருளாதார மீட்டெடுப்பிற்கு சமாந்திரமாக, அரசு கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட காயங்களை ஆற்றுப்படுத்தவும், பல தசாப்தங்களாக பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் சமூகங்கள் ஆகியோர் எதிர்கொண்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காண அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது" என்று ஜெனீவாவிலுள்ள ஐ நா அலுவலகங்களுக்கான இலங்கை நிரந்தர வதிவிட பிரதிநிதி ஹிமாலி சுபாீனி அருணதிலக தமது பதிலுரையில் கூறினார்.

"இந்த நடவடிக்கைகளில் முன்னாள் போராளிகள் மற்றும் சிறார் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பது, வடக்கு மற்றும் கிழக்கில் கண்ணிவெடிகளை அகற்றி மேம்படுத்துவது, இழப்பீடுகளை அளிப்பது, உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்துவது, தனியார் காணிகளை அதன் முறையான உரிமையாளர்களிடம் ஒப்படைப்பது, வாழ்வாதார உதவிகளை அளிப்பது மற்றும் காணாமல் போனவர்களை தேடுவது தொடர்பிலானவைகளும் அடங்கும்".

மேலும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காக, உள்நாட்டு பொறிமுறையாக, காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் (OMP), தேசிய ஒருமைப்பாடு மற்றும் இணக்கப்பாட்டிற்கன அலுவலகம் (ONUR), வெளிநாட்டு இலங்கையர்களுக்கான அலுவலகம் மற்றும் உண்ம மற்றும் பொறிமுறைக்கான இடைக்கால செயலம் (ISTRM) ஆகியவை நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் ஐ நா மனித உரிமைகள் பேரவைக்கு தெரிவித்தார்.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# யாழ் மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளுக்கு இருநாள் பயிற்சிப் பட்டறை!



யாழ் மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளுக்கு இருநாள் பயிற்சிப் பட்டறை!

Healthy Lanka நிறுவனம் வட மாகாணத்தில் சமூக மட்டங்களில் இணைந்த செயல்படுகின்ற அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் 40 பேருக்கு இருநாள் முழு நேர பயிற்சி நெறியினை புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமை ஆகிய இரு நாட்கள் நடாத்தியுள்ளது.

குறித்த பயிற்சிப் பட்டறை யாழ் பொதுநூலக மாநாட்டு மண்டபத்தில், அரச சார்பாற்ற நிறுவனங்களின் யாழ் மாவட்ட இணைப்பாளர் திரு. தயாபரன் தலைமையில் நடைபெற்றது.

முதல் நாள் செயலமர்வில் போதைப் பொருள் பாவனையினை எவ்வாறு தடுக்கலாம் என்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

கிராமிய மட்ட மற்றும் சிவில் சமூக, அரச சார்பற்ற நிறுவனங்களை போதைப் பொருள் தடுப்பு செயற்றிட்டத்தை வலுப்படுத்தும் நோக்கில் குறித்த பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

இதன்போது, கிராமங்களில் போதைப் பொருள் பாவனை அதிகரிப்பதை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை எவ்வாறு சமூகத்துக்கு கொண்டு செல்லுதல் உள்ளிட்ட பல விடயங்கள் இதன் போது கலந்துரையாடப்பட்டன. மேலும் சமூக மட்டங்களில் உள்ள அமைப்புக்கள் எவ்வாறான நடவடிக்கைகளை இதற்காக மேற்கொள்ள முடியும் என்பது தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

இரண்டாம் நாள் செயலமர்வில் போதைப் பொருள் பாவனையினை குறைத்தல் மற்றும் பால்நிலை சமத்துவம் தொடர்பான வேலைத்திட்டங்களை யாழ் மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக எவ்வாறு வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் வழிவகைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இப் பயிற்சிப் பட்டறையில் Healthy Lanka நிறுவனத்தின் முகாமையாளர் சாமிக்க ஜெயசிங்க, வடக்கு கிழக்கு மாகாண இணைப்பாளர் தே.பிறேம்ராஜ், தலைமைக் காரியாலய அலுவலர்களான லஹிரு, அனுபாமா, ஜனனி மற்றும் சரணி, மொழிபெயர்ப்பாளர் ஜெருசியா மற்றும் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.







# இவ்வார ராசிபலன்

## 13-09-2024 வெள்ளி தொடக்கம் 19-09-2024 வியாழன் வரையும்



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மேஷம்:** நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. கட்டிடத் தொழில் லாபம் தரும். கல்வியில் ஆர்வம் கூடும். வருமானம் வரும். புதிய நட்பு உருவாகும். பழைய கடன் தீரும். குதூகலம் கூடும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புக்கள் விலகும். நோய், நொடிகள் அகலும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். விரும்பியது நிறைவேறும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். நட்பு வட்டம் விரிவடையும். பாராட்டுக்கள் கூடும். வேண்டும் வரம் கிட்டும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். அரசியல்வாதிகள், ஆன்மீக வாதிகள் உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். பழைய கடன் அடையும். பங்குச்சந்தை லாபம் தரும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். கலை ஆர்வம் பெருகும். பொறுப்புக்கள் சிறப்பு சேரும். ஆதாயம் பெருகும். சம்பளம் எதிர்பார்த்தபடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: *1,4,6,2*
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,E




**ரிஷபம்:** உத்தியோக வாய்ப்புகள் கிட்டும். கையிருப்பு கரையும். வாகனச்செலவு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். பழைய கடன் வசூலாகும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத்தொழிலில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். நவகிரஹ அனுகிரஹம் நன்மை அளிக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். பந்தாவும் குறையாது. பாக்கெட்டில் காசும் கரையாது. தொட்டது துலங்கும். நினைத்தது நடக்கும். இனிக்கும் வாரம் தான். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப்பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். குழப்பங்கள் நீங்கும். குதூகலம் கூடும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். கடன் கச்சைகள் தீரும். குடும்ப மேன்மை அதிகரிக்கும். தொட்டக் காரியம் ஜெயமாகும். பொருளாதார நிலை உயரும். தேவைகள் பூர்த்தியாகும். தேக பலம் கூடும். தொழில் போட்டி மறையும். புதிய முயற்சிகள் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் கவனம் செலுத்துவது நல்லது.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பச்சையம்மன், அதிர்ஷ்ட எண்: *3,5,9,8*
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,S




**மிதுனம்:** தங்க நகைகள் சேரும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச்சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்கள் கல்வியில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். பழையக்கடன் வசூலாகும். மேலதிகாரியின் பாராட்டுக் கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழிலில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்கள் கைகூடி வரும். இல்லத்தில் சுபகாரியங்கள் நடந்தேறும். நட்பு வட்டம் விரிவடையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து அலைமோதும். புதிய வாய்ப்புக்கள் பயன் தரும். புத்தி சாதுர்யம் பெருகும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். சிக்கனம் தேவை. காதலர்கள் ஒற்றுமை அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. வரவுகள் பெருகும். வழக்குகள் முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காளம்மன், அதிர்ஷ்ட எண்: *2,4,9,1*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,Z




**கடகம்:** நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன்கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். தொழில் லாபம் தரும். பதவி உயர்வு தடைப்படும். நீண்ட நாளைய பிரச்சினை முடிவுக்கு வரும். வியாபாரத்தில் கவனம் தேவை. பொருளாதார சிக்கல் நீங்கும். சிரமங்கள் அதிகரிக்கும். இல்லம் தேடி வாய்ப்புகள் வரும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். புதிய தொழில் மாற்றம் ஏற்படும். எதிலும் வெற்றி கிட்டும். திருமண தீபம் சுடர்விடும். அணிமணிகள் சேரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு இனிக்கும். ஏற்றமான தருணம் அமையும். தொழில் அபிவிருத்தி உண்டு. மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் வரும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். சிரமப்பட்ட காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் புரளும். திடீர் பயணம் உற்சாகம் தரும். கர்ம வினைகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பவானி அம்மன், அதிர்ஷ்ட எண்: *7,3,0,2*
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,E




**சிம்மம்:** லஷ்மி கடாட்ஷம் பெருகும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பொறியியல் துறை லாபம் தரும். மாணவர் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். மன அமைதி குறையும். உடல்நலம் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். பொருளாதாரம் உயரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல் நிலையில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் அதிகரிக்கும். அன்னதானம் செய்து ஆனந்தம் அடையலாம். பித்ருக்கள் சாபம் நீங்கும். சேமிப்பு பெருகும். திறமைகள் வெளிப்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். தொழில் இடமாற்றம் நன்மை தரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். எதிரிகள் உதிரியாவார்கள். செல்வாக்கு கூடும். சொல்வாக்கு மேம்படும். பங்குச்சந்தையில் பணம் புரளும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. "ஆலய தரிசனம் பாவ விமோசனம்" "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" மாற்றம் ஏற்படும். புதுமையை விரும்புவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: யானை பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: *2,8,3,5*
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,C




**கன்னி:** அலைச்சல் அதிகரிக்கும். கலைத்தொழில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலை அமையும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சினை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். நண்பர்கள் உதவி கிடைக்கும். புதிய முதலீடு லாபம் தரும். மகிழ்ச்சியான செய்தி வரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பெண்களின் ஆலோசனை ஆதாயம் தரும். இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிகொள்ளும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். குடும்பத்தில் மேன்மைகள் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பழைய கடன் வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பேச்சில் பணிவு தேவை. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மேன்மைகள் அதிகரிக்கும். திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மன நிம்மதி அதிகரிக்கும். விவேகமான பேச்சுக்களால் வீண் பழி அகலும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: *2,3,7,9*
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,U




**துலாம்:** வினோதமான எண்ணம் பூர்த்தியாகும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். வெளிவட்டார பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். பணியாட்களின் ஆதரவு பெருகும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். தொழிலின் ரகசியம் காப்பாற்றப்படுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். மற்றவர்களிடம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். காரிய அனுகூலம் உண்டு. தேக ஆரோக்கியம் திருப்தி தரும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சொத்துக்களால் லாபம் கிடைக்கம். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய் வழி உறவில் கவனம் தேவை. மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். கலவரமான சூழ்நிலை காணப்படும். போட்டி, பொறாமைகள் விலகும். பாகப்பிரிவினை ஏற்படும். மனை வாங்கும் யோகம் உண்டு. மன நெருக்கடிகள் தீரும். ஊக்கம் அதிகரிக்கும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மருத காளியம்மன், அதிர்ஷ்ட எண்: *7,4,5,2*
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,I




**விருச்சிகம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். ஆரோக்கியம் சீராகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். சூழ்நிலைகள் சாதகமாகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. அந்நிய தேசப் பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். புண்ணியம் சேரும் காலம். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். வீண் பிரச்சனைகள் அகலும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். ஆசைகள் பூர்த்தியாகும். வாயில் தேடி வரன் வரும். வியாபாரத்தில் வேகம் கூடும். உத்தியோக உயர்வு தாமதமாகும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். விலகிச் சென்றவர் விரும்பி வருவர். திருமண பேச்சு முடிவிற்கு வரும். வரவுகள் திருப்தி தரும். மருத்துவச் செலவுகள் குறையும். தாய் வழி தகராறுகள் குறையும். குடும்ப கௌரவம் உயரும். காதல் கைகூடும். கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். விரக்திகள் மறையும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் உயரும். மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். தேக ஆரோக்யம் மிளிரும். எதிர்கால சிந்தனை ஏற்றம் தரும். விரோதங்கள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அன்னமார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: *9,1,8,3*
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,F





**தனுசு:** வெளியூர் பயணம் வெற்றி தரும். ஆரோக்யம் பாதிக்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகரிக்கும். பணியில் கவனம் தேவை. குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. வேலைபளு கூடும். பொருள் நஷ்டம் ஏற்படும். அலட்சியப் போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும். கல்வியில் மேன்மைகள் உண்டாகும்.

(தொடர்ச்சி 26 பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1111

## நாச்சிமார் திருக்கோயில் வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

*“ மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணி புனைந்த*
*அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்*
*பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே*
*பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்து பின்னே.”*

ஈழத்திலுள்ள கோவில்கள், வானளாவிய கோபுரங்களைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. வழிபாடு செய்யக் கோவிலை நோக்கி வரும் அடியவர்கள், கோபுரத்தின் கம்பீரமான தோற்றத்தினைத் தூரத்திலிருந்தே கண்டுகளித்து, தரிசித்து வணங்குவர். கிழக்கே கோபுரம் அமையப் பெற்றவையாகவே அநேகமான கோவில்கள் காணப்படுகின்றன. இவற்றிற்கு மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று எனப் பல மாடங்கள் காணப்படும். இவற்றின் உச்சியிலே, மூன்று, ஐந்து, ஏழு அல்லது ஒன்பது கலசங்கள் நிறுவப்படும். செல்வநிலைக்கேற்பவும், கோயிற் கருவறையின் பிரமாணத்திற்கேற்பவும், கோபுரத்தின் உயரம் வேறுபடும். கோயில் கருவறையிலே காணப்படும் பல்வேறு வேலைப்பாடுகள், கோபுரத்திலும் இடம்பெறும். அத்தோடு, இறைவனுடைய திருவிளையாடல்களையும், பெருமைகளையும் குறிக்கும் உருவங்களும், கோபுரங்களின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெறும்.

கோபுரத்தின் இரு பக்கங்களிலும் மணிக்கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வலதுபுற மணிக்கோபுரம் 1985 ஆம் ஆண்டிலே கட்டப்பட்டது. கோபுரத்தைக் கடந்து சென்றதும் உள்ளே கொடித்தம்பமும், நந்தி, பலிபீடம் ஆகியவற்றைத் தரிசிக்க முடிகின்றது. பலாமரத்தினால் செய்யப்பட்ட கொடித்தம்பம், செப்புத் தகட்டினால் சுற்றப்பட்டுள்ளது. கொடிமரத்திலே பிரமபாகம், விஷ்ணுபாகம், உருத்திரபாகம், துவஜத்தண்டு, பத்திரபீடம், விருஉறப்பீடம், இஷ்டிகை, என்னும் பகுதிகள் உள்ளன.

கோவிலின் அமைப்பைக் கூர்ந்து கவனித்தால், அங்கு பல உறுப்புக்களைக் காணக் கூடியதாயுள்ளது. இவற்றுள் மூலவிக்கிரகம் எழுந்தருளியிருக்கும் கட்டிடம் முழுவதும், விமானம் எனப்படும். இதன் மேற் கூரை சிகரம் என்றும், ஸ்தூபி என்றும் கூறப்படும். ஸ்தூபியின் கீழுள்ள கருவறை கர்ப்பக்கிரகம் எனப்படும். இதன் வாயில், கிழக்கு நோக்கியவாறே பெரும்பாலும் அமையும். இந்த வாயிலுக்கு முன் காணப்படும் பகுதியை, மண்டபம் என அழைப்பர். கோவிலை வலம்வரும் பகுதியை, பிரகாரம் என்பர். திருக்கோவிலுக்கு அங்கமாகச் சிறு கோவில்கள் அமைக்கப்பட்டு, அவை பரிவாரதெய்வங்களுக்குரிய கருவறை என அழைக்கப்பட்டன. இவை தவிர கர்ப்பக்கிரகத்தின் புறச்சுவரில் அமைக்கப்பட்ட கூடுகளிலும் விக்கிரகங்கள் இடம்பெற்றன. இக் கூடுகளைப் பஞ்சர கோஷ்டங்கள் என அழைப்பர்.

கோவில் கட்டும்முறை ஆரம்பகாலத்தில் காணப்பட்டதாயினும், கி.பி எட்டாம் நூற்றாண்டிலேயே இக்கலை, சிறப்புப் பெற்று வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. கோவிலின் விமானங்களின் அமைப்பைக்கொண்டு, கோவிலின் பெயர்கள் காணப்படுகின்றன. கரக்கோயில், ஞாழக்கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் என அறுவகைக் கோயில்களைப்பற்றி, தேவாரங்களிலே குறிப்பிடப்பட் டுள்ளது. எனினும், சிற்பசாத்திரங்களில் கோவிலின் அமைப்பைக் கொண்டு விஜயம், ஸ்ரீபோகம், ஸ்ரீவிலாசம், ஸ்கந்த காந்தம், ஸ்ரீ கரம், உறஸ்தி பிருஷ்டம், கேசரம் என எழுவகைக் கோவில்கள் உண்டெனக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறாக ஆலயங்களின் பொதுவழக்குக் காணப்பட்டபோதிலும், தேவிக்குத் தனி ஆலயம் அமைக்கும் வழக்கு பிற்காலத்தில் ஏற்பட்டது. ஆரம்பகாலத்தில் கருவறையி லேயே ஒரு பக்கத்தில் அம்பாள் இடம்பெறுவதே வழக்கமாகக் காணப்பட்டது. காஞ்சியிலே காமாட்சி அம்மன் ஆலயம் விளங்குவது போன்று தேவியின் ஆலயம், இறைவன் ஆலயத்தைக் காட்டிலும் தொலைவில் வேறாகக் காணப்பட்டதென எண்ண இடமுண்டு. கேவலம், மிஸ்ராலயம், சங்கீர்ணாலயம் என மூவகை ஆலயங்களைப்பற்றி, நூல்களிலே கூறப்பட்டுள்ளது. இறைவனுக்கு மட்டும் கோவில் அமைவது கேவலம் என்றும், இறைவனுக்கும் தேவிக்குமாகக் கோவில் அமைவது மிஸ்ராலயம் என்றும், பரிவாரங்களுடன் இறைவன் தேவி இருவருக்குமாக அமைவது சங்கீர்ணாலயம் என்றும் அழைக்கப்படும். மூன்றாம் வகையைச் சேர்ந்த கோவில்களே தென்னாட்டிலும், இலங்கையிலும் காணப்படுகின்றன.

நாச்சிமார் கோவிலின் அமைப்பு சங்கீர்ணாலயம் என்ற வகைக்குள் அடங்கும். இது தேவிக்கும், இறைவனுக்கும், பரிவாரதேவர்களுக்கும் உரிய அமைப்பு வடிவத்தைக் கொண்டதாகும். கர்ப்பக்கிருகமும், அர்த்தமண்டபமும் அமைந்துள்ள கட்டிடத்தின் மேலே சிற்பவேலைப்பாடுகளுடன் கூடிய விமானம் காணப்படுகின்றது. மூலமூர்த்தி உறையும் கருவறைக்குமேல் அமைந்துள்ளதே விமானம் எனப்படும். விமானம் என்னும் சொல் (வீமானம்) விசேடமாக அளந்து அமைக்கப்பட்டது எனப் பொருள்படும். அடியிலே அகன்று பரந்த விமானம், படிப்படியாக ஒடுங்கிச் சென்று தனிச்சிகரமாய் முடிவடைகின்றது. நாச்சிமார் கோயில் விமானத்தின் தெற்கு நோக்கிய பகுதியில், பிள்ளையார், நடராசர், பதஞ்சலி, வியாக்கிரபாதர், அர்த்தநாரீஸ்வரர், மாரியம்மன் ஆகியோரின் வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்குப்புறத்தில் வைரவர், நாகபூசணி, அனுமார் ஆகியோரின் உருவங்களும், பரமசிவன் இலிங்கத்திலிருந்து தோன்றி, யமனைக் கொன்று மார்க்கண் டேயருக்கு அருள் வழங்கிய காட்சியும் அமைந்திருக்கின்றன. பிரமன், சரஸ்வதி, நாராயணி ஆகியோரின் தோற்றங்களும், மோகினி வடிவமான விஷ்ணுவை, சிவன் ஆலிங்கனம் செய்யும் காட்சியும், விமானத்தின் வடபுறத்திலே காணப்படுகின்றது. கர்ப்பக்கிருகத்தின் மேலமைந்து காணப்படும் விமானத்தில், கோபுரத்திலே காணப்படுவது போன்று இறைவனுடைய அற்புதங்களும், பெருமைகளும் உருவங்களாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும்.

வளரும்...

## மனித உரிமைகள் மீறல்களுக்கு எதிராகப் பொருளாதாரத் தடையை பயன்படுத்தும் பிரித்தானியா



இலங்கையின் மனித உரிமை நிலைமைகளை முன்னேற்ற வேண்டும் என்ற தங்களின் இலக்கை அடைவதற்கு உதவியாக இருக்குமாக இருந்தால், மனித உரிமைகள் மீறல்களுடன் தொடர்பு பட்டவர்களுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை பயன்படுத்தப்படும் என்று பிரித்தானியா தெரிவித்துள்ளது.

பிரித்தானிய நாடாளுமன்றில், தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமரன் எழுப்பிய கேள்விக்குப் பதில் வழங்கிய பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய விவகார செயலாளர் கெதரின் வெஸ்ட், இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

இலங்கையானது, மனித உரிமைகள் விடயத்தில் பிரித்தானியா முக்கியத்துவம் வழங்கும் நாடாக இருக்கிறது.

பிரித்தானியாவின் வெளிநாட்டுக் கொள்கைகளின் அடிப்படையில், பொருளாதாரத் தடையை ஏற்படுத்துவதன் ஊடாக ஒருநாட்டின் மனித உரிமைகள் உள்ளிட்ட நிலவரங்களில் முன்னேற்றம் ஏற்படுமாக இருந்தால் அதனை ஒரு கருவியாகப் பயன்படுத்த முடியும்.

ஆனால் எதிர்காலத்தில் இலங்கையர்களில் குறிப்பிட்ட சிலருக்கு எதிராக இப்பொருளாதாரத் தடையைப் பயன்படுத்த முடியுமா என்று அனுமானத்தின் அடிப்படையில் பதில்களை வழங்க முடியாது.

அவ்வாறு செய்வதனால் இது பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திவிடக்கூடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் பிரித்தானியாவினால் பொருளாதாரத் தடை விதிக்கப்படும் சாத்தியம் இருக்கிறதா? என்று நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமரன் கேள்வி எழுப்பியிருந்தார்.

## விடுமின் வெகுளியை
## ( நிலைமண்டில ஆசிரியப்பா)

*“தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்*
*தன்னையே கொல்லும் சினம்” என்றார்*
*வள்ளுவன் என்ற வான்புகழ் புலவன்*
*தெள்ளு தமிழில் திடமாய்ச் சொன்னார்*
*எண்ணிப் பார்க்கா எடுத்தான் கத்தியை  (இப்போ)*
*எண்ணிப் பார்க்கிறான் எத்தனை கம்பியென*
*சாபத்தால் அழிந்த சந்ததியை விடவும்*
*கோபத்தால் குலைந்த குடும்பம் எத்தனை?*
*கோபம் ஒருவரைக் கடுமையாய்ப் பாதிக்கும்*
*தாபத்தில் கொண்டு தள்ளி விடுமே!*
*பாவம் பலதைப் புரியச் செய்யும்*
*கேவலப் பட்டுக் கீழ்நிலை அடைவாய்*
*மந்தரையின் கோபத்தால் மனம்மாறி கைகேயி*
*கந்தம் போன்ற கணவனை இழந்து*
*விதவையாய் நின்று விம்மி அழுதாள்*
*கதையான போதிலும் கருத்துள்ள பாடமே!*
*ஆத்திரம் அடக்க அறிந்து கொண்டால்*
*மாத்திரை இன்றி மகிழ்வாய் வாழலாம்*
*கோபம் என்ற குணங்கள் இயற்கையா?*
*ஆபத்துத் தந்திடும் அழிவுப் பாதையா?*
*கோபத்தை அடக்கிக் கொள்ள வேண்டாம்*
*ஆபத்து இல்லாமல் அமைதியாய் வெளியிடுங்கள்*
*கோபமுடன் எழுந்தவன் குற்றமுடன் உட்கார்வான்*
*சாபம் நீக்கியே சாந்தி அடைவோமே!*

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*

## இவ்வார ராசிபலன்

( 24 பக்கம் தொடர்ச்சி)

**தனுசு:** துயரம் இல்லாத உயரங்களை சந்திப்பீர்கள். முன்னோர்கள் ஆசீர்வாதம் உண்டு. முன்னேற்றங்கள் அதிகரிக்கும். மாற்று மருத்துவம் பலன் தரும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவுப்போகும். சுபச்செய்தி தேடி வரும். பாராட்டுக்கள் உயரும். அலைச்சல் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரம் சுமாராக இருக்கும். வாகன மாற்றம் ஏற்படும். கடன்சுமை குறையும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மாலை நேரத்தில் இனிய தகவல் வந்து சேரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். வளமான சிந்தனை உதயமாகும். அலைச்சல் ஆதாயம் தரும். தீமைகள் விலகும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். பயணங்களால் வெகுமதி கூடும். கூட்டுப்பிரார்த்தனை நன்மை தரும். இடையூறுகள் அகலும். பெண்களுக்கு பெருமை சேரும். பொது வாழ்வில் புகழ் கூடும். தொழில் வளர்ச்சி பெருகும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகும். ஆன்மீக நாட்டம் ஏற்படும். வறுமையின் வாட்டம் குறையும். அவமானங்கள் அகலும். உதவிகள் கிடைக்கும். வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வெகுமானம் கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பிரம்மசக்தி, அதிர்ஷ்ட எண்: 8,4,6,2
அதிர்ஷ்ட நிறம்: கருமை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,A




**மகரம்:** கமிஷன் தொழில் லாபம் தரும். தோல்வி நிலை மாறும். தொழில் வர்த்தகம் நடைபெறும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாயம் நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் நிறைவேறும். குதூகல பயணம் உண்டு. குடும்ப மேன்மையுண்டு. திருமணம் கைகூடி வரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். நிதி நிறுவனம் லாபம் தரும். கல்வியில் கவனம் தேவை. பயணத்தால் அனுகூலம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உறவினர்கள் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டாகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். விறுவிறுப்பாக செயல்படுவீர்கள். திட்டமிட்ட செயல்பாடு தேவை. சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் தொடரும். வெளிவட்டாரத் தொடர்பு பெருகும். வேண்டாத நபர்கள் விலகுவர். வினைகள் அகலும். புதுமைகள் நிறைந்த காலம். நல்லச்செய்திகள் நாடி வரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தடைகள் அகலும். உயர் பதவி யோகம் உண்டு. மன உற்சாகம் களை கட்டும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வ திருப்பணிகளில் ஆர்வம் கூடும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். பொருள் வரவு இருக்கும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பணியில் பாராட்டு கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வயிறு உபாதைகள் வந்து போகும். வார்த்தைகளில் சற்று கவனம் தேவை. நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். வியாபாரம் சிறக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஈசான்ய லிங்கம், அதிர்ஷ்ட எண்: 4,6,5,8
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,A




**கும்பம்:** தேக ஆரோக்யம் சீராகும். மறைமுக தொல்லை நீங்கும். உடல் ஆரோக்கியம் கூடும். வழக்கு வெற்றி தரும். புத்திர வழியில் தொல்லையுண்டு. புதியபொருள் சேர்க்கையுண்டு. வியாபார வாய்ப்பு உண்டு. கடன்பிரச்சனை தீர்வு உண்டு. கல்வியில் ஏமாற்றம் உண்டு. மேலதிகாரியின் ஆதரவு உண்டு. குடும்பத்தில் சஞ்சலம் உண்டு. தன வரவில் தாமதம் உண்டு. தகுதியில் மேன்மை உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். கடன் பாக்கிகள் வசூலாகும். பணவரவு திருப்தி தரும். குடும்ப குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோ'ம் அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். சகோதர ஒற்றுமை உண்டு. ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய தொழில் அமையும். பெருமைகள் சேரும். அடுத்தவர் தலையீடு அமைதியை கெடுக்கும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். பயணம் அனுகூலம் தரும். மனம் மகிழ்ச்சி அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி ஏற்படும். சகோதர ஒற்றுமை பலப்படும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் வாயில் தேடி வரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். ஆண்களின் அதிகாரம் உயரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். சுப விரயம் உண்டு. குடும்ப மேன்மைகள் உண்டாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ வைகுண்ட நாதர், அதிர்ஷ்ட எண்: 3,7,1,4
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,R




**மீனம்:** மகிழ்ச்சியான செய்தி வரும். நிர்வாக பொறுப்பு கூடும். வருமானம் உயரும். உடல் உபாதை நீங்கும். கொள்கையில் பிடிப்பு சேரும். கொடுக்கல், வாங்கலில் நன்மை சேரும். உறவினர் தொல்லை நேரும். பிள்ளைகளால் பெருமை சேரும். வியாபர வளர்ச்சி உண்டு. ஆன்றோர் ஆசி உண்டு. அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்யம் அபிவிருத்தி உண்டு. பொறுப்புக்கள் கூடும். சேமிப்பு அதிகமாகும். புதிய சிந்தனை உதயமாகும். அணிகலன்கள் சேர்க்கை ஏற்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதம் உண்டாகும். கௌரவத்தில் கவனம் தேவை. கலக்கமான மனநிலை காணப்படும். பயணம் அனுகூலம் தரும். வரவுகள் திருப்தி தரும். உதவிகள் குவியும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். அத்தியாவசிய தேவைககள் பூர்த்தியாகும். போதிய தனவரவு இருக்கும். மாலை நேரத்தில் கவனம் தேவை. பெண்களுக்கு ஆபரணம் சேரும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பெருமைகள் கூடும். செல்வாக்கு உயரும். குடும்ப அன்யோன்யம் சிறக்கும். நல்லச் செய்திகள் நாடி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் பிடிப்பு ஏற்படும். முயற்சிகளில் வளர்ச்சியடையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். தொழில் ரகசியம் காப்பது நல்லது. உறவினர்களிடம் சஞ்சலம் ஏற்பட்டு மறையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ செல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 5,8,4,6
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,H

# கனடாவில் பொதுநலனில் அக்கறை கொண்ட வர்த்தகத்துறை அன்பர்களைச் சந்தித்த முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் (கவிஞர் ஆரணி)



கனடாவிற்கு தற்போது வருகை தந்துள்ள இளைப்பாறிய யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் (கவிஞர் ஆரணி) இங்கு பொதுநலனில் அக்கறை கொண்ட வர்த்தகத்துறை வெற்றியாளர்களைச் சந்தித்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.



அவர் சந்தித்த பிரமுகர்களில் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களின் உயர் வகுப்பு ஆசிரியரான செந்தில்வடிவேல் அவர்கள், கணக்காளரும் அரசியல் செயற்பாட்டாளருமான நிமால் விநாயகமூர்த்தி, கணக்காளரும் பாடகருமான தனம் அவர்கள். கணக்காளர் சாந்தகுமார் (குமார்) மற்றும் உதயன் சோதி என அழைக்கப்பெறும் பாஸ்டர் சோதி செல்லா ஆகியோர், மார்க்கம் மூத்தோர் சங்கத்தின் தற்போதைய தலைவர் சுந்தரலிங்கம் அவரம்கள் ஆகியோர் இங்குள்ள படங்களில் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களுடன் காணப்படுகின்றார்கள்.





யாழ்ப்பாண அரசாங்க அதிபராக பதவியேற்பதற்கு முன்னர் இலங்கையின் பல பாகங்களிலும் உதவித் தேர்தல் ஆணையாளர் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர் என பல பதவிகளை வகித்து சிறந்த மக்கள் சேவை ஆற்றியவர் இவர்.

கவிஞர் “ஆரணி” எனற புனை பெயர் கொண்ட அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களின் “நினைவிடைத்தோய்தல்” கவிதை நூல் வெளியீட்டு விழா கனடா மார்க்கம் நகரில் நடைபெறவுள்ளது.

இடம்: Aaniin Community Centre (5665 14th Avenue. Markham)
காலம்: 14-09-2024 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணி தொடக்கம்

மேலதிக விபரங்களுக்கு (416) 732-1608, (647) 537-9235 என்னும் இலக்கங்களை அழைக்கவும்.

**- ARJUNE (Local Journalism Initiative Reporter - 2 )**


**TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY**

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி aches | Stress, Migraine & All Types of Head- |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

**Mrs. K. Vasanthakumar** ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

**(416) 754-4024**

**5200 Finch Ave., East -- Suit #349**
**Scarborough, ON M1S 4Z5**



கலாபூஷணம் சோக்கல்லோ
சண்முகம்அரங்கு
yugam radio
yugam TV
CTAA
CANADIAN TAMIL ARTISTS' ASSOCIATION
கலைவேந்தன்
கணபதி ரவீந்திரன்
நவரசத்தாரகை
ரூபி யோகதாசன்
கனடிய தமிழ் கலைஞர்கள் சங்கம்
யுகம் வானொலி, யுகம் தொலைக்காட்சி இணைந்து
பெருமையுடன் வழங்கும்
20வது ஆண்டு
நாடகப் பெருவிழா
2024
சிரிக்க ! சிந்திக்க!! சிந்தனைக்கு விருந்தளிக்க!!!
ஒரே மேடையில் ஐந்து நாடகங்கள்.
ரொரன்ரோ கானாவின் இன்னிசை மழை
நிகழ்ச்சித் தொகுப்பாளர்
ராம் பிரசாந்
SATURDAY
SEP
21
@4:30PM
Toronto Pavilion
190 Railside Rd,
North York, ON M3A 1A3
TICKETS: $20
Ravi 416-898 7284 / Ruby 416-670-6522
உதயன்
Easy 24 News
East FM
ஈழமுரசு
தமிழ்Mirror
GTA தமிழ்
LUCKY
ஈழநாடு
eet TV
நாடக அனுசரணை வழங்குவோர்கள்
முற்பகல் செய்யில்
தவிப்பு
அடையாளம்
தில்லாலங்கடி
சிதம்பர சக்கரம்
K T GROUP
MR. KANA SELVA
CORNWALL SHIVAN TEMPLE - CANADA
1730 VINCENT MASSEY DRIVE, CORNWALL, ON K6H 5R6
Tel : +1 416-939-4921
cornwallshivantemple@gmail.com
Web : www.cornwallshivan.ca
3351 Markham Rd, Red Building Scarborough, ON M1X 0A6
Vijaya Jewellery
TRUST. INTEGRITY. EXPERIENCE.
JEYA JEYAKANTHAN
REAL ESTATE BROKER
647 309 3091
100 பவுண் நகை பரிசு
647-702-2159
LISTO
Aravinth Ratnasingam
CanMore
CALL OR EMAIL TODAY!
647 613 2900
647-996-5922
35 Karachi Dr
தமிழரின் நிர்வாகத்தில்
Royal King
416.706.0004
141 BEXDALE BLVD, ETOBICOKE, ON M9W 1R2
Selva Vettyvel
416.568.4101
Rishani Vettyvel
416.261.1544
Vettyvel
Visit our website for a FREE Home Valuation
Shan Thayaparan
416-567-7675
TOP PRODUCER
FOR LAST 5 YEARS
2019 2020 2021 2022 2023
HOMELIFE
Abi Amalan
Amal Ganeshamoorthy
416.732.1810
416.829.9993
Royal Fashions
Tel : 416.519.1119
Cell : 416.358.5478
NEW PREMIUM STONE LTD
Quartz, Granite, Countertop
416.858.1290
102 Melford Dr, Unit #1, Scarborough, ON M1B 2G4
TIMES IRON WORKS INC
கனகாம்பிகை
416-269-7198
RAGI KUMAR
EAST-WEST
Accounting Consultants
289-660-7500
Sri
CELL: 416-884-3991
Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
Christeen Seevaratnam
416-258-6759
Finch Warden Medical Clinic
3430 Finch Avenue East
Scarborough, ON M1W 2R5
THAMIZHA
(416) 878-5454
2900 Markham Rd Unit - D2, Scarborough
WAF HELPING HANDS OUTLET
WORLD ACTION FOUNDATION
Open 11AM - 9PM | EVERYDAY
LOTUS
Funeral and Cremation Centre Inc.
416-834 5753
Pabrica Peter
LAND KING
Specialized in Development Land Sales
JEGAN
416 666 9777
JRB
R.R.Rajkumar
647-289-6164
ALOE FRESH
BEAUTY SPA
100 % Natural
Mrs. Vasanthi Ramasamy
647-787-1398
www.vashasproduct.ca
OPTIMART
FINANCIAL SOLUTIONS
AUTO - HOME - LIFE
GET YOUR HST REBATE
DEVADAS LAW
Vina Devadas
416.266.1234
1415 Kennedy Road, Unit 3, Toronto, Ontario, M1P 2L6
Mohan Remisiar
416.528.0372
RUBY AND RUBY
INCOME TAX SERVICE
Thanam Kanagaratnam
Tax Analyst
416 (298-6718)
Stork Traders
WWW.STORKTRADERS.COM




இவ்விடத்தில் விளம்பரம்

செய்ய எங்களுடன்

தொடர்பு கொள்ளவும்.






26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

உதயம் 1484 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday September 13, 2024


# ஜனாதிபதித் தேர்தலின் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் அவர்களை ஆதரித்து நடைபெறவுள்ள பொதுக் கூட்டம்




ஜனாதிபதித் தேர்தலின் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் அவர்களை ஆதரித்து நடைபெறவுள்ள பொதுக் கூட்டம் ஒன்று எதிர்வரும் 15-09-2024 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணி தொடக்கம் மார்க்கம் நகரில் நடைபெறவுள்ளது. மேலதிக விபரங்களுக்கு இங்கு காணப்படும் விளம்பர அறிவித்தலைப் பார்க்கவும். அத்துடன் அனைவரும் கலந்து சிறப்பிக்கவும்

# தமிழர்கள் கோரிவந்த 'நீதி வழங்குதல்' என்ற அந்த பந்தை புதிதாக அமையவுள்ள இலங்கை அரசிடமே மீண்டும் தள்ளிவிட்ட ஐ நா மனித உரிமைகள் பேரவை.

– சிவா பரமேஸ்வரன்



போர்க்காலத்தில் இழைக்கப்பட்ட அட்டூழியங்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதியை வழங்குதல் என்கிற கால்பந்து மீண்டும் இலங்கை அரசிடம் உதைக்கப்பட்டுள்ளது. சர்வதேச தலையீடு தேவை என்று தமிழர்கள் கோரிவந்த நிலையில், நீதி வழங்குதல் என்ற அந்த பந்தை இப்போது புதிதாக ஆட்சிக்கு வரவுள்ள இலங்கை அரசிடமே மீண்டும் தள்ளிவிட்டுள்ளது ஐ நா மனித உரிமைகள் பேரவை.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வழங்குவதில் சர்வதேச தலையீட்டிற்கான கோரிக்கையை தொடர்ந்து நிராகரிக்கும் இலங்கை அரசு இந்த விடயத்தில் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சனைகளுக்கு உள்நாட்டு பொறிமுறைகள் மூலமே கையாள தம்மால் முடியும் என்று கூறி வருகிறது.

இலங்கையில் நிலவும் மனித உர்மைகள் சூழல் தொடர்பில், வாய்மொழியாக அளித்த அறிக்கை ஒன்றில், பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்குவதற்கான பொறுப்பை அடுத்து ஆட்சியிடம் ஐ நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் வோல்கர் டுர்க் ஒப்படைத்தார்.

தொடர்ச்சி 21 ம் பக்கம்

# இயக்குனர் மதிவாசனின 'ஆக்குவாய் காப்பாய்' கனடியத் திரைப்படம் செப். 28 அன்று யோர்க் சினிமாவில் திரையிடப்படவுள்ளது.

கனடாவில் இசை. நாடகம் மற்றும் சினிமா ஆகிய துறைகளில் 'பளிச்' என்று தெரியும் ஒரு பெயர் எஸ். மதிவாசன் அவர்கள். கனடாவின் லூனார் மோஸன் பிக்சர்ஸ் மற்றும் ஆர். புரொடக்ஸன்ஸ் இணைந்து தயாரித்த 'ஆக்குவாய் காப்பாய்' என்னும் இந்தப் படம் கனடா எஸ். மதிவாசனின் எழுத்து, இயக்கத்தில் உருவாகி இருக்கிறது. இந்தத் தமிழ்ப்படம் செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி யோர்க் சினிமா திரையரங்கில் மதியம் ஒரு மணிக்குத் திரையிடப்பட இருக்கின்றது.

உலகில் தமிழ்ப்படங்களைத் தயாரிப்பதில் இந்தியாவுக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தில் கனடா நாடு இருப்பதும் குறிப்பிடத்தக்கது என எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்கள் குறிப்பிட்டுள்ளது மகிழ்ச்சியைத் தருகின்றது.

எம்மவர் திரைப்படங்களுக்கு ஆதரவு வழங்கி கனடிய தமிழ்த் திரைப்படத்துறையை வளர்ப்பதன் மூலம் இங்கு தொழில் ரீதியாக நடிக நடிகைகள் மற்றும் இசையமைப்பாளர்கள் ஆகியோர் தோன்றிட வாய்ப்புக்கள் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கலாம். எனவே எம்மவர் தயாரிப்பில் வெளிவரும் திரைப்படங்களை பார்த்து ஆதரவு வழங்கியதைப் போன்று இந்தத் தடவை 'ஆக்குவாய் காப்பாய்' என்னும் திரைப்படத்திற்கும் வழங்குவோம் என உறுதியெடுப்போம்!.

தொடர்ச்சி 11 ம் பக்கம்



# கனடாவில் இயங்கிவரும் 'சுருவில் மக்கள் ஒன்றியத்தின்' முக்கிய அங்கத்தவர்களைச் சந்தித்த முன்னாள் யாழ் அரச அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன்



கனடாவிற்கு தற்போது வருகை தந்துள்ள இளைப்பாறிய யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் (கவிஞர் ஆரணி) நேற்று முன்தினம் புதன்கிழமை கனடாவில் இயங்கிவரும் "சுருவில் மக்கள் ஒன்றியத்தின்" சில முக்கிய அங்கத்தவர்களைச் சந்தித்து உரையாடி தமது பிறந்த பதி தொடர்பான சுவையான பல விடயங்களை இரைமீட்டிக் கொண்டனர்.

ஊர்காவற்றுறை சுருவில் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் (கவிஞர் ஆரணி) இங்குள்ள படங்களில் திருவாளர்கள் திருவருள் கிருஸ்ணபிள்ளை . மற்றும் அமரர் சின்னத்துரை குடும்பத்தினர் -அமரர் வைத்திலிங்கம் குடும்பத்தினர் ஆகியோருடன் காணப்படுகின்றார்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபராக பதவியேற்பதற்கு முன்னர் இலங்கையின் பல பாகங்களிலும் உதவித் தேர்தல் ஆணையாளர் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர் என பல பதவிகளை வகித்து சிறந்த மக்கள் சேவை ஆற்றியவர் இவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# உதவும் பொற்கரங்கள் அமைப்பின் ஸ்தாபகர் விசு கணபதிப்பிள்ளையின் நிதி அனுசரணையில் பாடசாலை மாணவர்களுக்கான உதவிகள்

கனடா- உதவும் பொற்கரங்கள் அமைப்பின் ஸ்தாபகரும் சமூக சேவையாளருமான விசு கணபதிப்பிள்ளையின் நிதி அனுசரணையில் பாடசாலை மாணவர்களுக்கான உதவித் திட்டங்கள் அண்மையில் கல்முனை துரைவந்தியமேடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அதிபர் சு செந்தில் தலைமையில் இடம்பெற்ற விழாவொன்றில் நிறைவேற்றப்பட்டன.

கனடாவில் வசிக்கும் உதவும் பொற்கரங்களின் ஸ்தாபகர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களின் பூரண நிதி அனுசரனையில் பாடசாலை மாணவர்களுக்கான கழுத்துப்பட்டி மற்றும் மாணவர்களுக்கான தேர்ச்சி அறிக்கைவழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

தொடர்ச்சி 12 ம் பக்கம்

